

# "குரு பூர்ணிமா முடிவுரை"

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “குரு பூர்ணிமா முடிவுரை”

# பொருளடக்கம்


1. குருபூர்ணிமா முடிவுரை--------------------------------------------1
    - அ. கலிகாலம்--------------------------------------------1
    - ஆ. ஆத்மஞானத்திற்கு ஓர் சிறிய விளக்கம்------------------9
    - இ. ஸ்ரீ சத்குரு காணிக்கை--------------------------------12
    - ஈ. ஸ்ரீ சத்குருதேவரின் பொன்மொழிகள்--------------------14
    - உ. அழுதால் உன்னை பெறலாம்----------------------------20
    - ஊ. ஆசியுரை--------------------------------------------25
2. பிராரப்தத்தை பரகர்மா வெல்லும்--------------------------------26
3. மாயைக்கும் மனதிற்கும் உள்ள வித்தியாசம்--------------------------36
4. பைத்தியத்தின் பைத்தியம்.----------------------------------------51
    - அ. உலகின் நிலையில் பைத்தியம்.----------------------------52
    - ஆ. உண்மையின் நிலையில் பைத்தியம்.-----------------------53
    - இ. நீங்களே இறைவன்.----------------------------------------54
    - ஈ. நீங்களே பரம்பொருள்.--------------------------------------54
    - உ. அவதார சொரூபி, அவதார புருஷன்------------------------56
    - ஊ. குருவுக்கும் குரு.-------------------------------------------58
5. ஓர் பைத்தியத்துடன் பரமன் விளையாட்டு.------------------------------72

(பைத்தியம், மகாதேவன், தட்சிணாமூர்த்தி மற்றும் கண்ணன் உரையாடல்.)

தானீஷாவின் பிறவி ரகஸ்யமும் பத்ராசலம் ராமதாஸரும்.
    - அ. தானிஷாவின் பூர்வ ஜன்ம கதை.--------------------------79
    - ஆ. பத்ராசல ராமதாஸர் கதை.--------------------------------85
    - இ. ஒரே குட்டையில் ஊறிய இரு மட்டைகள்.----------------91
    - ஈ. பரோபகாரம், தன்னுபகாரம்.--------------------------------95


எல்லாம் நீ!



ஓம்

ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

# இறைவனின் அனுக்கிரஹமும், மஹான்களின் (ஸ்ரீ குருவின்) ஆசியும்!!

ஓம் அன்பான, கனிவான, அருள் ஞானக் குழந்தைகளே! "அவன் அருளால் அவன் தாள் வணங்கி" ஸ்ரீ குருதேவரே இது ஆகாத நாள், தகாத நாள், கொடூரமான நாள், அசுப நாள், எனக் கூறிய "**கரி நாளில்**", சில காலம் எதுவுமே எழுதக் கூடாது என நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எழுத்துக்கு உதவாத கரமும், எழுத்தைக் கொடுக்காத எழுது கோலும்; இவைகளுக்கெல்லாம் உறுதுணையாயிருந்த எம் இறைவன் கண்ணனும் இணைந்து அதே கரி நாளில் எழுத ஆரம்பித்து வைத்து ஏறத்தாழ 3 ஆண்டுகள் ஆகியும் இந்த விநாடி வரை நிறுத்த முடியவில்லை. இதற்கு ஓர் உபாயம் தான் இந்த வைத்தியத்திற்குத் தோன்றவில்லை. அதாவது ஜீவம்மிகு செல்வங்களே!

எழுதி எழுதி வந்த காவியங்கள் போதாதோ?
பக்கம் பக்கமாக வரைந்த நாட்கள் போதாதோ?
உங்களுக்கு உணர்த்திய காவியங்கள் போதாதோ?
கதை கதையாக எழுதிய தெய்வாம் போதாதோ?
ஜீவ நிலையை உணர்த்திய காவியங்கள் போதாதோ?



உ

உலக நிலைகளை எல்லாம் உணர்த்தியது போதாதோ?
பற்று பந்தமெல்லாம் சொன்ன நாள் போதாதோ?
சொந்த உறவெல்லாம் சொன்ன நாள் போதாதோ?
கருவி கரணமெல்லாம் சொன்ன நாள் போதாதோ?
பஞ்ச கோசமெல்லாம் கோஷித்த நாள் போதாதோ?
பக்தியைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதியது போதாதோ?
கர்மாவின் நிலைகளை கற்று தந்த நாள் போதாதோ?
அனந்த வைராக்யங்களை உரைத்த நாள் போதாதோ?
சாதனை பல பல எழுதியது போதாதோ?
போதனை பல காலம் புரிந்த நாள் போதாதோ?
பொய்மைப் பொய்மையென்றுரைத்த காலம் போதாதோ?
வேதம் பிரமாணம் உரைத்த நாள் போதாதோ?
சாஸ்திர சம்பிரதாயங்களை சொன்ன நாள் போதாதோ?
வாழ்க்கை நெறிமுறையை சொன்ன நாள் போதாதோ?
அகங்காரத்தை போக்க அறிவுறுத்தியது போதாதோ?
மானாவமானம் போக்க வழிசொன்னது போதாதோ?
பிறவி நோய் தீர்க்க மருந்து சொன்ன நாள் போதாதோ?
நீதிக்கதையுரைத்த நேரமெல்லாம் போதாதோ?
இறை நிலையை எல்லாம் அறிவித்தது போதாதோ?
பக்தர்கள் சரிதம் பற்பல சொன்ன காலம் போதாதோ?
நீ இறைவனென நீ சொன்னதெல்லாம் போதாதோ?
அத்வைத போதனையை அறிவுறுத்தியதெல்லாம் போதாதோ?
சுத்த பரிபூரணத்தை சுட்டிக் காட்டியது போதாதோ?
"அது நீ", நீயே அதுவென உணர்த்தியது போதாதோ?



உ

இறையருளும் குருவருளும் பெற்ற எம் செல்வங்களே!
உங்களால் தான் இதற்கு "அணை கட்ட" முடியும் எனத் தோன்றுகிறது!

"தாங்கள் எழுதிய தெல்லாம் போதும்" அதை, "நாங்கள் படித்த தெல்லாம் போதும்" என, அனைத்தும் ஸ்வய அநுபவமாக இருக்கச் செய்யுங்கள் என, தாங்கள் அனைவரும் நிறைவு செய்ய வேண்டுமென, உங்கள் பொற்பாத கமலங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கிறது" (இந்த வைத்தியம்)

உங்களால் முடியாதது (வந்தது) இந்த வைத்தியத்தால் முடியாதது தான் காரணம் இந்த வைத்தியம் உங்கள் அனைவருக்காகவே தான் உங்களுக்காகவே ஓர் தாயின் வயிற்றில் கருவுற்று உங்களைப் போலவே (பிறந்து) ஓடி ஆடி அனைத்து ஆட்டங்களையும் (ஆடி) காரியங்களையும் ஓர் விளையாட்டாகவே முடித்து விட்டோம்.

உங்கள் அறிவின் உண்மையின் ஏக்கத்திற்காகவே இந்த வைத்தியத்தின் காலம் தோன்றியது!

உங்கள் அறிவின் உண்மையின் பரிபூரணமாகுதல் தான் இந்த வைத்தியத்தின் காலம் நிறைவு பெற்று மறையும்!

ஆறையும் ------------------------------------------------------------ முடியும்

இது அதி ரகசியம் உணர்வுடையவர்கள் உணர்வர்.



உ

குழந்தைகளே!

இக்கலியுகத்தில் **"நிஷ்காம்ய கர்மா"**, **"ஆழ்ந்த உருகும் பக்தி"**, **"கடும் வைராக்யம்"**, **"அது நாம், நாம் அது"** என்ற **ஸ்வய உணர்வு** ஆகிய இந்த நான்குமே மோட்சத்தின் திறவுகோலாகும். அதாவது பிறவா நிலையாகும். இதற்கெல்லாம் விளக்கம் பக்கம் பக்கமாக உங்கள் உணர்வு கூடும்படியாகத் தந்து கொடுத்திருக்கிறேன். இவை நான் இதற்கு இனி விளக்கம் தேவை இல்லை.

மற்றைய மூன்று யுகங்களிலும் ஞானிகள் எந்த நடையுமின்றி அதுவாகவே இருந்ததால் "யோகம்" "ஞானம்" ஒன்றே போதுமானதாக இருந்தது.

காரணம் பூர்வ கர்மா வழுவில்லை; அதாவது புண்ணிய பாவ கர்மா இல்லையென்றே சொல்லலாம். அவை ஸத்திய யுகம், தர்மயுகம் என்றே சொல்லலாம். அஸத்தியம் அணுவளவும் இல்லை. அப்படி அஸத்தியம் நேர்ந்திருந்தால் அவன் ஓர் அசுரனாகத்தான் இருப்பான். அவனை அது நேரே ஓர் வழியில் (அவதரித்து) அழித்து விடும். இதை இன்னொரு முறையில் விளக்குவது என்றால் நம் ஜோசியர் இருப்பு காலம் மூன்றாக பிரிக்கப்படுகிறது. அதாவது

**"காலை நேரம்** 6 To 10 என்றும்"
**"மதிய நேரம்** 10 To 2 என்றும்"
**"மாலை நேரம்** 2 To 6 என்றும்"

மூன்றாக பிரித்திருக்கிறார்கள். இந்த முக்காலங்களிலும் சூரியன் உண்டு. பின் மாலை முதல் காலை 6 வரை சூரியன் இல்லையென சொல்லக் கூடாது மறைந்திருக்கிறான். அங்கு சூரியன் இருந்தாலும் தென்படுவதில்லை. ஆகவே அது

**"இருளுக்கே உரிய காலம்"**/அதுவே கலியுகம்.



இந்த 12 மணிநேரத்தையும் இரவு நான்காக ஆக்கிக் கொண்டார்கள். அங்கு சூரியன் பிரகாசிக்கக் கூடாது, பிரகாசிக்கமுடியாது. மற்றைய மூன்று யுகங்களிலும் அவர்கள் சூரியன் அந்த முக்காலங்களிலும் உண்டு. ஆனால் ஒரு சில நாட்களில் காரிருள் என மேகக் கூட்டங்கள் கூடி சூரியனையே இல்லாமல் பண்ணி விடுகிறது. ஆனால் அங்கு மேகங்கள் அதாவது அசுரத்தனங்கள் அதாவது தீமையின் குணங்கள் அதாவது அசுர நாமரூபங்கள் தோற்றுவதுண்டு. அங்கு இறைவன் காத்து (அவதார) சொரூபமாய்த் தோன்றி அவைகளை களைந்து சூரியனை பிரகாசிக்கச் செய்வான்.

கலியுகம் என்பது சூரியன் பூரணமாக மறைந்திருக்கும் காலம். அங்கு எக்காரணம் கொண்டும் சூரியன் வர இயலாது! அது இருக்கத்தக்குரிய காலமாகையால் உலகெங்கும் இருள் சூழ்ந்துதான் இருக்கும். அதாவது இந்த இருள் என யாம் சொன்னது,

அனைத்து ஜீவர்களுக்குள்ளும் **மூவாசை, முக்குணம், மூவினை, மும்மலம்** ஆகிய இந்த பன்னிரண்டும் **“அஞ்ஞான இருள்”**, என அதாவது அறியாமையாகிய கவனக் குறைவான இருள் சூழ்ந்து விடுகிறது. இந்த இருள் அகத்தில் (இதயத்தில்) சூழ்ந்து விடுவதால் **“புறவாழ்வும்”** பாதிப்படைகிறது. ஆகவே வாழ்க்கையே நரகமாகி விடுகிறது. ஆனால் இன்றைய (கலியுக) ஜீவன் அகஇருளைப் போக்காது “புறத்தில் ஒளியை பரப்பிக் கொண்டு” தம் நரக (நகர) வாழ்க்கையை நடத்துகிறான்.



2

புறவாழ்வின் பாதிப்பு :– அணு முதல் அண்டம் வரை, கிருமி கீடகம் முதல் உருவில் பெரிய யானை வரை, அனைத்து ஜீவ கோடி களுக்குள்ளும் புறமுமாய் "**இறைவன் இருப்பதை**" மறந்து பொன் பொருள் என்றும், மனைவி மக்கள் என்றும், உறவு சுற்றமென்றும், மாடு மனை யென்றும், காடு நிலம் என்றும், தோப்பு துறவு என்றும், தொழில் பணமென்றும், நத்தை புத்தையென்று.

இப்படி "**கோடானு கோடி நாம, ரூப, குண நிலைகளில்**" சிக்கிக்கொண்டு அனந்த வாழ்க்கை வாழ்கிறேன் என நம்பி "**நகர**" வாழ்க்கையை "**நரக**" வாழ்க்கையாக அனுபவித்துக்கொண்டு ஆப்பு அசைத்த குரங்காக அவஸ்தையையே இன்பமென சுவைக்கிறான் இன்றைய கலியுக மனிதன் - கேட்டால் இதுதான் நாகரீகம் என்கிறான், விஞ்ஞானம் என்கிறான், சொர்க்க போகமென்கிறான். இனி இந்த கலியுக மனிதனை மாற்றவும் முடியாது. அவனை விடுவிக்கவும் முடியாது, மீட்கும் வழியும் இல்லை. "**விடுதலை வேண்டுமா**", **இறைவனை நம்பு**" //

புறத்தில் ஒளியைப் பரப்பிக்கொண்டு :– "**ஆத்மஞானத்தை**" தவிர (பற்பல கலைகளில் ஆத்மவித்தை ஒன்று) ஏனைய பதினைந்து கலைகளையும் "**ஏகதாரை**" எனக் கற்றுக்கொண்டு அவைகளை புறஒளியாக்கி (தீவட்டி, தீபம், விளக்கு, பல்பு, டியூப், இன்னும் அனேக புறஒளியாக்கி) அதில் சஞ்சாரம் செய்து கொண்டு நான் ஆன்மசாதகன், நான் பக்திமான், நான் ஞானி, நான் சித்தன், நான் முக்தன் என வழிகாட்டிகளாக (குருடனுக்கு ஓர் குருடன் வழிகாட்டுவது போல்) இருந்து உலகையும் உள்ளத்தையும் ஒளி ஆக்குகிறேன் என்று இருள்மயமாக்கி விட்டார்கள் இன்றைய மேதாவிகள்.



உ

"அக இருள்":- தேவையற்ற பட்டம், பதவி, பணம், அந்தஸ்து கௌரவம், விளம்பர, வியாபார, ஆடம்பர "பக்தி" தேவையற்ற "சிந்தனைகள்" (இதில் இன்றைய கலியுக சாதனைகளாகிய பக்தி, யோகம், ஞானம் இவற்றின் வல்லமைகள், அசகாய சூர சக்திகள் ஆகிய இவை அனைத்தும் பொருந்தும்) இவை அக இருளாகும்;

"புற இருள்:- அழிவுப்பாதையில் செல்லும் விஞ்ஞானம் அதன் நாகரீகம்";

ஆகவே இன்றைய கலியுகத்தின் பிரகாசமென சொல்லும் மின்சார விளக்குகள், மிக்ஸி, கிரைண்டர், கால்குலேட்டர், கம்ப்யூட்டர் மேலும் நாகரீக பொருள்கள் அனைத்தும் புற இருளாகும்.' காரணம் உண்மையை உணர விடாமல் தடுக்கிறது. பொய்யையும் பொய் பொருளையும் உண்மை என சாதித்து ஓர் மாற்றத்தைக் கொடுத்து நம்மை ஏமாற்றுகிறது. எனவேதான் இதனால் சீரழிவும், மனோ நலனும் பாதிப்படைந்து பிறப்பிறப்பென்னும் சம்சார இருளில் சிக்கித் தவிக்கிறான் இன்றைய கலியுக மனிதன்.

எம் அருமைக் குழந்தைகளே! இதன் மேலே சொன்ன அனைத்தும் அனைத்திற்கும் மேலாகவும்;

"காவல் (சிறு) தெய்வ வழிபாடாகும்! மற்றும் நவக்கிரஹ சாந்தி, பலி பூஜை, எந்திர மந்திர தகடு, மேலும் அசுரத்தன பூஜை வழிபாடுகளாகும். மேலே சொன்ன வழிபாடுகளினால் "சத்வ குண தெய்வத்தை" மறந்துவிட்டோம் அதனால் வந்த கேடு இதுவே ஆகவே இனி ஜீவர்களுக்கு இந்த கலியுகம் முடியும் பரியந்தம் மீட்பே இல்லை!



இந்த கலியுக ஜீவன் "கிரஹஸ்தனாக"
இருக்கிறானே தவிர "கிருஹஸ்தனாக"
இல்லவே இல்லை. அதாவது நம் வீட்டின் அதிபதியாக நாம்
இல்லை; நவக்கிரஹங்களின் பிடியில் அகப்பட்டவர்களாக
இருக்கிறோம். இதுவே இவர்களுக்கு வந்த கேடுகாலம்.
ஆகவே நாம் ஸத்வகுணமுள்ள ஏதேனும் ஓர் தெய்வத்தை
நம்பி உறுதியாக அதன் திருவடியைப் பற்றி
"அழுது, அழுது, அழுது, அழுது" உன்
திருவடியே கதி எமக்கு வேறு கதி மோட்சம் இல்லையென
உருகினால் அவஸ்யம் நவக்கிரஹங்களின் பிடியிலிருந்தும்
கலிதோஷ பிடியிலிருந்தும் விடுதலை கிடைக்கும். அங்கேதான்
இறைவனின் அனுக்ரஹம் நமக்குக் கிடைக்கிறது.
அதாவது நவக்கிரஹங்களின் பிடியிலிருந்தும் மற்றும்
கலிதோஷ தெய்வங்களின் பிடியிலிருந்தும் நமக்கு
அவஸ்யம் ரட்சிப்பு கிடைக்கிறது!

குழந்தைகளே! முதலில் சத்வகுணமுள்ள அதாவது
ஏகுணமுள்ள, அதாவது அமைதிசாந்தியுள்ள, எந்த நிலையிலும்
ஆனந்தம் நிறைந்துள்ள "ஓர் தெய்வத்தை"
நம்பி அதன் கருணையினால் எனக்கு தோஷமான ரஜஸ் தமஸ்
கோர குணங்கள் மறைந்தால் தான் தெய்வத்தின் அனுக்ர
ஹத்தை பெற்றுக் கொண்டோம் என உறுதிப்படுத்த முடியும்.
"தெய்வ அனுக்ரஹம் பெறும் ஞானம் இதுவே".
இது உறுதி



2

ஆத்மஞானத்திற்கு ஓர் சிறிய விளக்கம்!

ஸத்யம் பேசவேண்டும்! தர்மம் செய்யவேண்டும்!!
ஸத்யம் பேசினால், தர்மம் நிலைபெறும்!
ஸத்யம் என்பது ஆகாயம்! தர்மம் என்பது சூரியன்!!
ஸத்யம் என்பது "ஒலி!" தர்மம் என்பது "ஒளி!!"
ஸத்யம் என்பது ஓம் நாதப் பிரம்மம், அதுவே சுத்தப் பிரம்மம்.
தர்மம் என்பது பிரம்மானந்தம்!
(இது நாம் நாமானதில், தர்மம் செய்வதென்பது வாக்கியார்த்தமே தவிர லட்சியார்த்தம் இல்லவே இல்லை!
இது ஸ்வயம் ஜோதி! "அது அதுவே")
மேலே சொன்ன "ஒலியும் ஒளியும்" "ஸத்குரு" ஆவர்.
ஸத்ய ஸங்கல்பனும் ஸத்ய சொரூபனும் இருப்பவரே "ஸத்குரு" ஆவர்.

ஸத்ய ஸங்கல்பன் :- இராகத்வேஷாதிகள் (விருப்பு வெறுப்பு) இல்லாதவனும்; ஸங்கல்ப விகல்பம் (நினைத்தல் மறத்தல்) இல்லாதவனும், பாரபட்ச தோஷம் இல்லாதவனும், நாமரூப குணதோஷ ரஹிதனும், லௌகீக தெய்வீகத்திலே "மயக்கமும் பயமும்" இல்லாதவனும், "காலாதீத அந்த ஒன்றே நாம்" என்ற பேருண்மைப் போதத்தோடு ஒரே எண்ணமுடையவனும், அந்த அக உணர்வையும் தமக்குள் அதிரகஸ்யமாய் நிறைவேற்றிருப்பவனே ஸத்யஸங்கல்பன். "அவனே ஸத்குரு" ஏனையோரெல்லாம் "சாமான்யரே"



2

ஸத்ய சொரூபன் :— எந்த மஹிமைகளும், எந்த வல்லமைகளும் இல்லாதவனும், மூடனைப் போலும், ஓர் ஜடத்தைப் போலும், ஓர் உண்மையின் பைத்தியத்தைப் போலும் சஞ்சரிப்பவனும், முக்காலங்களிலும் சுக துக்க ரஹிதனும், ஆனந்த ஸ்வரூபியாய், பேரிடி விழுந்தாலும், உலகமே நிர்மூலமானாலும், தன் நாவமே இளைத்தாலும், தன் நிலை அதாவது **"நாம் நாமாக"** இருப்பவனே ஸத்ய சொரூபன்.

**"அவனே எனக்கு"** ஏனையோரெல்லாம் சாமான்ய குருவே.

ஞானமழலைகளே!

மேலே சொன்னவைகளிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால் ஆகாயம் இல்லாமல் சூரியன் சஞ்சாரம் செய்ய முடியாது! ஆகாயமாகிய **ஒளி நிர்மலம்**, சூரியனாகிய **ஒளி நிஷ்களங்கம்!**

அதாவது அர்த்த பாவனையற்றதே ஆகாயம்.

வேறு எதனிடம் இருந்தும் ஒளியை வாங்காமல் தாமே தாமாய் பிரகாசிப்பதே சூரியன். (இது உவமையானதையாகும்)

இதிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால்,

மனம் படைத்த ஜீவனுக்கு ஒலி வடிவில் ஓர் அர்த்தத்தைக் கொடுக்க வேண்டும், அந்த ஒலி அந்த ஜீவனின் அறியாமை வசத்தை போக்கி (ஆணவம், கன்மம், மாயை) என்ற ஜீவத்துவத்தை நீக்கி, அதாவது அறிவு சொரூபமாக்கி, ஸ்வயம் பிரகாசமான **ஓர் ஒளியுடன்** கலந்து கரைந்து மயமாகி விடவேண்டும்.

இதுவே ஸத்குரு இருவையும் ஆகும் அவர் ஆசியும் ஆகும்.

நாவ நாம ரூப குணங்களுடன் சொல்லு தெய்வாம்சம் கதையாக தோத்திரமும் அவை அத்வைதத்தில்தான் முடிவுற வேண்டும்.



2

இதைத்தான் எம்பரமபிதாவும் சொன்னார், அதாவது
"யாமே ஸத்யமும், வழியும், ஜீவனுமாக" இருக்கிறேன் என்றார்.

அதாவது!

அறியாமையில் மூழ்கி இருக்கும் ஜீவனும் யாமே!
அந்த அறியாமையை நீக்கும் ஒளியாகிய வழியும் யாமே!!
அறிவாகிய தர்மசொரூபனை ஸ்வய ஒளியாகிய ஸூரியனும் யாமே!!!

குழந்தைகளே!

பார்ப்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, ஸ்பரிசிப்பது, ஆகிய இந்த ஐந்திந்திரமே விவகரித்து ஓர் ஒளியை உணர்பண்ணி அறியாமையின் மயக்கத்தை உண்டுபண்ணியது "ஜீவபாவனையே!" (இதுவும் ஒளியே)

இவை அனைத்தையும் அனர்த்தமாக்காமல் உண்மையை மட்டும் உணர்ந்தும் ஒளி சொரூபமாக இருந்து ஸத்யத்தை உணர்ந்து தர்ம சொரூபத்திற்கு அழைத்துச்செல்லும் "வழியும் ஓர் பாவனையே"!! (இதுவும் ஒளியே)

தர்மசொரூபமாகிவிட்டால் அங்கு ஆணவமும் இல்லை, ஆக்கியவனும் இல்லை, சென்ற வழியும் இல்லை. ஒன்றுண்டு!! ஆனால் இல்லை!!! "இங்கு எந்த பாவனையும் இல்லை"!!

இதை ஓர் ஸத்குரு அல்லாத சாமான்ய குருமார்கள் உரைக்கவும் முடியாது, வழிகாட்டவும் முடியாது, உணர்த்தவும் முடியாது! அத்தகைய சத்குரு தேவரின் முழுமையான உபதேசம் மேலே சொன்ன எம் பிதாவின் வாசகமாகும்.

"அந்த ஒன்றே" அறியாமையின் "ஜீவன்"! அந்த ஒன்றே "ஸத்யத்தின் வழி"! அந்த ஒன்றே நாம் நாமே அது!!



குழந்தைகளே! (சென்று வந்தவர் என்பது அது வாக்கியார்த்தமே! அதுபோலத்தான் வரவேற்றது. அனுபவ உபதேசமும்)

வேத, சாஸ்திர, மந்திர, தாரணை, வேதாந்தம், உபநிஷத்துக்கள் எந்த பாடம் படிப்பதாலும் ஆத்மஞானம் பெற முடியாது. இதில் அனுபவிக்க குரு வழி காட்டினால் தான் ஆத்ம ஞானம் பெற முடியும். இது ஓர் சிக்கலான மார்க்கமாகும்.

"இங்கு சென்று வந்தவர் தான் வழி காட்ட முடியும்!

"படித்து உணர்ந்தவர் அனுபவமாக வழி காட்ட முடியாது!!

இந்த சத்குரு அனுக்கிரஹம் பண்ணமாட்டார். அது இறைவன் வேலை. உலக பொருள்களின் வினைகளிலிருந்தும் அவைகளை ஆட்டி வைக்கும் தேவதைகளிடமிருந்தும் இறைவன் தான் அனுக்கிரஹம் பண்ண முடியும். "தெய்வ அனுக்கிரஹம்"

பெற்ற வைராக்கிய குருவிருப்பை இட்டாலும் குருவிருப்பை பெற்ற வைராக்கிய ஆத்ம ஞானம் பெறுவது வெகு அபூர்வம். ஆனால் இன்றைய கலியுகத்தில் எதையுமே "அவசரமாக" சாதிக்க வேணுமென்ற உத்வேகம் இருப்பதால் இந்த ஞானசாதனையையும் அவசரமாக முடித்துவிட வேணுமென்று அந்நிரவல் அவசரமாக செயல்படுகிறார்கள். அதற்கு வழிகாட்டிகளாகிய ஞானிகளும் கலி தோஷத்தால் பீடிக்கப்பட்டவர்களாக அவர்கள் நினைக்கும்படி ஞானிகளாக செயல்படுகிறார்கள். அதனைக் கலி தோஷ போதனை தான் கற்பிக்கப்படுகிறது!

அன்பு, நிதானம், பொறுமை, சகிப்புத் தன்மை, கருணை, காருண்யம். இவை கருக்குவிட்டேயிருக்கும். அதாவது இது கம்ப்யூட்டர் காலத்துக்கேற்ற காலமாகி அவசரத்தையும் வேகத்தையும் உங்களை அழிவைக் கொடுக்கிறது.



2

ஸ்ரீ மஹான்கள் அன்றும், இன்றும், என்றும் உண்டு. கலியின் அவசரச் சுழற்சியில் அவர்களை கண்டு கொள்ளும் திறன் தான் இன்றைய ஜீவர்களிடம் இல்லை. முறையாக ஒழுக்கத்தையும், பக்தியையும், வைராக்கியத்தையும் போதிக்கும் இன்றைய ஸ்ரீ மஹான்கள் அரசியலிலும், சேவை யென்ற போர்வையில் பகட்டு பதவி மோஹத்திலும், கௌரவம் ஆடம்பரம் ஆளுதல் முதலிய அஹந்தையிலும், குறிப்பாக "**பெண், பொன்**" (பணம்) என்ற கொடிய விஷ ஜந்துக்களிலும் மாட்டிக் கொண்டு தானும் அவஸ்தைப் படுவதுமல்லாமல் தம்மை நம்பியவர்களையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் கலி தோஷமஹிமையாகும். இனி இதற்கு விடிவே இல்லை; விடிவு வேண்டுமாயின் நாமும் சத்யகுணமென்ற ஓர் இறைவனை நம்பி கதறி கதறி அழுது முக்தி பெறுவோமாக!

அந்த தெய்வ அனுக்கிரஹத்தினால் அந்த தெய்வமே ஓர் சத்குருவை காட்டும். அல்லது அதுவே ஓர் ஸத்குருவாக அவதரித்தும் வரும். இக்கலியில் ஸ்ரீ சத்குரு சேவை யென்பது தூய சேவை கிடைப்பதும் ஹரகடினம். ஆனால் இக்கலியில் "ஸ்ரீ சத்குருவின் வாக்கியார்த்த சித்தார சேவையுமே" அதிமுக்யம்.

**"குரு பூர்ணிமாவான இன்று"**

**"உண்மைத் தொண்டர்களின் வைராக்ய பிரதிக்ஞையே ஸ்ரீ சத்குரு காணிக்கையாகும்"!!!**

அதாவது எவரையும் அடக்காமல் நாம் அடங்கி இப்படி நடப்போம் இப்படி இருப்போம், அது ஆவோம் என்பதே உங்கள் பிரதிக்ஞையாகும்!



# ஓம்

## ஸ்ரீ சத்குருதேவரின் பொன்மொழிகள் சில!!

1. அடங்கி இரு, அடக்க எண்ணாதே!
2. உன் கரண ஒழுக்கமே உன்னை காப்பாற்றும்!
3. பெண், பொன் இவற்றில் சர்வ ஜாக்ரதையாக இரு!
4. கடும் சுடும் சொல் பேசாதே!
5. எவரையும் எந்நிலையிலும் குற்றம் குறை காணாதே!
6. அப்படி தோற்றின் அவை உன்னிடமே என உணர்!
7. உணர்ந்த உடன் மற, மன்னி. விட்டுக்கொடுத்து விலகு!
8. இறை, குரு நாமஸ்மரணையுடன் எந்த நிலையிலும் இரு!
9. இனிமையாகவும், இதமாகவும் பேசு. ஆனால் பேச்சைக் குறை!
10. உடல், உலக, சினிமா, அரசியல், காமரசனையாகப் பேசாதே!
11. தாழ்ந்து நின்றால், வாழ்ந்து நிற்பாய்!
12. பணிவே பரம் பொருள்!
13. இறை நாமத்துடன் துணிவே திண்ணம்!
14. கர்மாவின் செய்கை உனக்கு. அதன் பலன் அவனுக்கு!
15. ஆணவத்தை அன்பால் வெல்!
16. ஆசைகளை மன நிறைவால் வெல்!
17. பொறுமையை உடையவர் இகழ்வை அடையார்?
18. ஆத்திரம் அறிவு நாசம்; மனதின் ஸ்திரம் அறிவின் கூர்மை!
19. நீ உன்னை ஆளவந்தவன், உலகை ஆள வரவில்லை!
20. தீயதாக கேளாதே, தீயதாக பார்க்காதே, தீயதாகப் பேசாதே!

(இவை அனைத்தும் உண்மை எண்ணமே)



உ

௨௧. வார்த்தைக்கு வார்த்தை எதிர் வார்த்தை பேசாதே!
௨௨. காண்பதையும் கேட்பதையும் நம்பி பேசி விடாதே!
௨௩. பேச்சு ஓர் முடிவாகாது, மௌனமே முடிவாகும்!
௨௪. நீ மதிப்பு கொடுத்தால் உனக்கு மரியாதை கிடைக்கும்!
௨௫. எவரிடமும் பணிவுடனும் கனிவுடனும் இரு!
௨௬. வார்த்தையினால் நீ புண்படாதே; பிறரையும் புண்படுத்தாதே!
௨௭. மனத்தெளிவு வேண்டுமா? நிதானத்தை கடைபிடி (நீ + தானம்)!
௨௮. போட்டி போட்டால் கோட்டியில் முடியும் (பைத்தியம்)!
௨௯. வார்த்தை அடர்ந்த காடு; உட்புகுந்தால் வெளியே வர முடியாது!
௩௦. வாக்கு அக்கினியாகும்; அதைக் காப்பதே தபஸாகும்!
௩௧. செய்கை, செய்கையின் தன்மை, அதன் பயன் உனக்கு இல்லை!
௩௨. இயற்கையே (இறைவனே) அதனதன் செய்கையை செய்கிறது!
௩௩. இயற்கையிடம் பாரபட்ச தோஷம் இல்லவே இல்லை!
௩௪. கவனக்குறைவால் ஜீவன் மயங்குகிறான்!
௩௫. உன் வாக்கே உன் வாழ்வாக முடிகிறது!
௩௬. இறைவன் நல்லவன் என்று எவரையும் ஏற்பதும் இல்லை!
௩௭. இறைவன் பாபி என்று எவரையும் தள்ளுவதும் இல்லை!
௩௮. ஜீவனின் புண்ணியபாவ பலன் அவரவர்க்கு ஒழுங்காக அமைகிறது!
௩௯. கர்மாவின் பலன் ஆத்மாவைப் பற்றாது!
௪௦. இறைநாமாவை முன்வை; உன் கர்மாவைப் பின்வை!
௪௧. அவனன்றி அணுவும் அசையாது (இது ஸத்ய வாசகமே ஆகும்)
௪௨. இம்மொழி லௌகீகத்திற்கும் தெய்வீகத்திற்குமே உண்டு!
௪௩. இம்மொழி பரமார்த்திகத்திற்கு இல்லை (அங்கு நீயும் அவனும் ஒன்றே)
௪௪. சிரார்ப்பணமாக வாழ்பவன் வாழ்வில் அமைதி சாந்தி நிலவும்!
௪௫. விருப்பும் வெறுப்பும் வாழ்வின் தன்மையே!



உ

46. கோபமும் ஆசையும் கண்ணின் இமைபோன்றதாகும்!
47. இந்த இரண்டும் இணைந்தால் பயமும் துக்கமும் என்ற பிள்ளைகள் உண்டு!
50. பிறப்பும் இறப்பும் நினைப்பும் மறப்பும் போன்றதாகும்!
51. உலகில் வாழ சற்று ஆசையும் கோபமும் இருக்கலாம்!
52. உலகின் நிலையில் விரோதம், குரோதம், மோஹம் கூடாது!
53. ஓர் சாதகனுக்கு சந்தேகம் சர்ப்பம் போன்றதாகும்!
54. ஓர் சாதகனுக்கு கலக்கமும் சோம்பலும் காலனாகும்!
55. புண்பட்ட மனதிற்கு ஆத்மபோதனையே சாந்தி!
48. இக்கலியில் சரணாகதியை தவிர வேறு கதிமோட்சம் இல்லை!
49. இக்கலியில் இறைநாமாவைத் தவிர வேறு வழி இல்லை!
56. குணதோஷ வார்த்தைகள் வந்தால் நீயே கல்புருஷன்!
57. இறை உணர்வோடு அமுதவாக்கு வந்தால் நீயே கல்கி அவதாரம்!
58. உண்மையே உனக்கு எதிரி; உண்மைச் சாட்சி உனக்கு நண்பன்!
59. உடல் உலக பொருட்களில் விருப்பமிருந்தால் தெய்வத்தை விட்டுவிடு!
60. தெய்வத்தை விரும்பினால் உடல் உலக பொருட்களை விட்டுவிடு!
61. அருளும் பொருளும் இருதுருவமாகும்! (ஒன்று சேராது)
62. எங்கேயோ தெய்வம் இருக்கிறது என ஓடி தேடுவது அஞ்ஞானம் (துவைதம்)
63. தெய்வம் நம்முள் இருப்பதென்பது பக்தி (விசிஷ்டாத்வைதம்)
64. தெய்வம் நம்முள் நாமாக இருப்பதை உணர்வது ஞானம் (அத்வைதம்)
65. நடந்ததை எண்ணினால் ஏமாளி!
66. நடக்கப்போவதை எண்ணினால் புறவாளி!
67. நடப்பதாக இருப்பவன் அறிவாளி!
68. இந்த மூன்றும் அற்றவன் பரவாளி!
69. வேகத்தை விடு; விவேகத்தை தொடு!
70. நலமும் சுகமும் உன் மனதிடமே; அவை வெளியில் இல்லை!
71. சொர்க்கமும் நரகமும் உன் கற்பனையே!
72. முதலில் பணியக் கற்றுக்கொள்; கட்டளையிடும் பதவி தானே வரும்!
73. அடியவனாயிரு; அடியாளாய் மாறிவிடாதே! (சேவகம் செய்ய பதிலின்றி)



உ

74. சாந்தமே சாகரத்தினும் பெரியது!
75. பொறுமையே முக்தியின் திறவுகோல்!
76. பேராசையே பொறாமையின் அடிப்படை!
77. ஜனனமும் மிருத்யுவும் முறையே புண்ணிய பாப தர்மாக்கள்!
78. அக்னி தெய்வ அம்சம் பொருந்தியது!
79. கர்மா கீழ்நோக்கி இழுக்கும், தெய்வம் மேல்நோக்கி தூக்கும்!
80. விளக்கத்தின் நிமித்தம் வாதம் செய்யலாம்!
81. முரட்டுத்தனத்தின் நிமித்தம் பிடிவாதம் கூடாது!
82. வேதசாஸ்திர பாட நிமித்தம் தர்க்கம் செய்யலாம்!
83. தன் வார்த்தையை ஸ்திரப்படுத்த தர்க்கம் கூடாது!
84. லௌகீகத்திலும் தெய்வீகத்திலும் தர்மாதர்மம் உண்டு!
85. பரத்திற்கு தர்மாதர்மம் இல்லவே இல்லை!
86. ஒன்று செய்; அதுவும் நன்று செய்; அதுவும் இன்றே செய்!
87. எல்லாம் ஈசன் செயலென்றால் அங்கு புண்ணியபாபம் இல்லவே இல்லை!
88. நீ தவம் பெற வேண்டுமா? உன் நாவை அடக்கு!
89. அனாவசியம் பேசுவதென்பது இறை சிந்தனை இல்லாமல் பேசுவதாகும்!
90. இறைசிந்தனை இல்லாமல் கொடுப்பதும் வாங்குவதும் புண்ணியபாபம்!
91. இறைசிந்தனையோடு கொடுப்பதும் வைத்யமும் தர்மமேயாகும்!
வாங்குவதும் வழிகாட்டி
92. தெய்வ கிருபை நவக்கிரஹ பிடியிலிருந்து அனுக்கிரஹம் பண்ணும்!
93. குருகிருபை அஞ்ஞான இருள் அகற்ற ஆசி வழங்கும்!
94. இரண்டு என்ற இடத்தில் பயம் உண்டு; ஒன்றென்ற அனுபவத்தில் பயமில்லை!
95. இறைவன் தோன்றாத்துணைவன்; ஆத்மா அந்தர்யாமி!
96. ஆத்மா அந்தர்யாமி; பரமாத்மா சர்வாந்தர்யாமி!
97. அதன் ஒளியாலேயே அனைத்தும் பிரகாசிக்கிறது!
98. அனைத்தின் அம்சமும் அதனிடத்தில் இல்லவே இல்லை!
99. அது கர்த்தாவுமல்ல, போக்தாவுமல்ல, அதுவே அனைத்தும் அதுவே!
100. அனைத்து ஜீவகோடிகளும் பல; அந்த பரமாத்மா ஒன்றே ஆன்



உ

101. அறியாமை என்பது காண்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது ஸ்பரிசிப்பது ஆகியவற்றை நாமரூப குணத்துடன் "நானென" விவகரித்து "குணதோஷங்களை" கற்பனையால் உண்பவன் ஜீவன்)

102. ஞானம் (அறிவு) என்பது சத்யத்தை போதித்து (ஒளிமைத்து) தர்மத்தை நிலை பெறச் செய்து, (ஒளிமை உள்ளொளி) இரண்டற்ற நாம் தானாயிருப்பதும்.

103. நாமரூபமாக கண்டால் குணதோஷங்கள் தோன்றும்; அந்த தூய இறைவனாகவும், இறைவன் உடைமையாகவும் உணர்ந்தால் சத்வ குணம் ஒன்றே பிரகாசிக்கும்; அனைத்தும் நாமே என உணர்ந்தால் பிரம்மானந்தமாகவே நாம் இருக்கலாம்!

104. நாமே இரண்டாகவும்; (ஜீவன், ஆத்மா) நாமே பலவாகவும் (ஆத்மா ஜீவன், உலகம்) அந்த பலவற்றையும் இரண்டாக்க வேண்டும்; பின் இரண்டையும் ஒன்றாக்க வேண்டும்; அந்த ஒன்றும் இல்லையென்றே இருக்கும். அதுதான் நீ, ஒன்றே!

105. நாமரூபமாக கண்டால் உலகம் தெரியும்; ஏகத்துவமாக (ஏகத்வம்) உணர்ந்தால் தெய்வம் தெரியும். குணாதீதமாயுள் (நிர்குணமாக) அனைத்தும் மறையும்! அங்கு "அது நீயே, நீயே அது"!

106. உலகமாக கண்டால் "விளையாட்டு"; தெய்வமாக உணர்ந்தால் விளையாட்டே "ரஸிகர்" (ரஸித்து ஆனந்திப்பது) தாமாக உணர்ந்தால் விளையாட்டே இல்லை, ரஸிகையும் இல்லை, நாமே சுயமாக இருப்போம்! அதை விளக்குவாரும் இல்லை; கேட்பாரும் இல்லை, விளையாட்டும் பொருளும் இல்லையென்றே இல்லை!

107. அனைத்தும் தெய்வமாக உணர சாட்சிபாவம் தேவை, இது அனுபவ தன்னை அறிந்தால் தான் இயலும். இல்லை உருக்கம் அதனால் தன்னை அர்ப்பணித்தால் சரணாகதி பாவம் தேவை விளையாட்டையும். அனைத்தும் தெய்வமாக உணர சரணாகதி பாவம் (அனுபவத்தில் நிலைக்க முடியாது)! இங்கு நிற்பது தான் உண்டாகும் அனுபவம் இருக்க!

108. எங்கும் உள்ளே நீ இருக்க, உனக்குள்ளேயே நீ இருக்க! இத்தனை அசைவு இருந்தும் போதும். அதற்கு ஒரே வழி "அது நாம், நாமே அது" என்று சொல்வதிலும் இல்லை, அனுபவத்தில் ஒன்றுவதில், "உள் உணர்வே" ஆதாரம்.



2

ஏ ஞானச்செல்வங்களே! (ஓர் அப்போ நேரம்)
ஒவ்வொருவர்க்கும் இந்த 108 பொன்மொழி
களும் சிறந்தையுடன் ஓர் நாள் அறிவ் "சிவ வாசகங்களே"
உங்களுக்கு ஸ்வய அனுபவத்தைக் கொடுக்கும். இறைவா!

# கடைசிவாசகத்தின் "முடிவுரை"!!!

மூன்று வருஷ காலம் எழுதி எழுதி ஓய்ந்துவிட்டோம்.

ஆனால்???

50 வருஷங்கள் போதனை செய்து ஓர் சாதனையுடன்
உங்கள் அனைவரின் **நிறைவுடன்**" எம்மை பூரணம் செய்து
கொண்டோம்!

ஆனால்???

ஓர் 20 வருஷங்கள் அன்பர்களின் கேள்விகளுக்கு
பதில்களும், ஸ்வயமாகவும் பக்தி ஞான (அத்வைதம் வரை)
ஒழுக்கம் சம்பந்தமாகவும், வாழ்வின் நெறி முறைகளையும்
பக்கம் பக்கமாக, எழுதி எழுதி, கொடுத்து கொடுத்து,
அதிலும் எம்மை பூர்த்தி செய்து கொண்டோம்.
ஓய்ந்துவிட்டோம்:- இப்படி "**மடல்கள்**" இல் வெளி
வராதென உணர்கிறேன்.

ஆனாலும் எழுதுகோலையும் விடவில்லை, எழுதிய
காகிதம் திருத்தவில்லை. இப்படி மடலாகவும் புத்தக
மாகவும் இனிமேல் சிறு சிறு வாசகங்கள் வரலாம்.
அதுவும் உங்கள் அனுபவத்தை வைத்து நிறுத்தப்படலாம்.



உ

எம் அன்பான செல்வங்களே!

இதை கவனிக்கவும்

# "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்"

என்பார்கள் நம் பெரியோர். இது கலியுகம், கடுமையான போட்டி நிறைந்த காலம். நீங்கள் உங்கள் உலக வாழ்வின் படிப்பின் தேர்வில் 100க்கு 35 எடுத்தால் தான் பாஸ் பண்ண முடியும். ஆனால் இந்த ஆத்ம ஞான பாடத்தில் 1/100 மார்க் எடுத்தாலும் போதும். ஆனால்?

## "அது மஹா கடினம்"

(ஆனால் அதி சுலபம்)

நீங்கள் நூற்றுக்கு ஒன்று எடுத்தால் போதும். அந்த ஒன்றின் முன் தேவையான சீரோவை (0) யாம் போட்டு உங்களை பாஸ் செய்ய வைக்க எமக்குத் திறமை உண்டு! அந்த ஒன்றில்லையானால் சீரோதான் மிஞ்சும்,

## "சீரோவானால் உலகம்".

அனைவரும் பாஸ் பண்ணி விடுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு! இறை உணர்வில் புத்தியை நாட்டி, குரு உணர்வில் அறிவை செலுத்துவீர்களாக.

## இறை கிருபை பெறாமல் குரு கிருபை பெறவே முடியாது ஆனால் இரண்டும் ஒன்றே!

(செசவி திலியின் வெல் வேலோ)



உ

# இறை கிருபை பெற கதறி அழ வேண்டும்

# அழுதால் வினை அவஸ்யம் அழியும்.

வினைகளை முழுமையாக அழிக்காமல், மனம் உண்மையின் சாந்தி, அமைதி, போதும் என்ற நிறைவு பெறாது.

ஓர் கவனம்!

இறை கிருபையும், அதனால் இறை நிலையையும், அதாவது **"சாட்சி"** பாவனையும் பெறாமல் ஆத்மஞானம் பெறுவது மஹா கடினம். **"முடியவே முடியாது!!**

மற்றும் சாதனை பலவற்றிலும் ஆத்ம ஞானம் பெற முடியும். ஆனால் அது பெறுவதைப் போல் தோன்றி கனவு போல் மறைவது போல் மறைந்து விடும்.

**"இது எம் ஸ்வய அனுபவம்"!!**

ஆகவே தான் வேதாந்த வாசகமும் கீதையின் வாசகமும் எப்படி அறுதியிட்டு கூறுகிறது என்றால்,

நாமதேவன்:- இந்த ஆத்மஞானம் கத்தி முனையில் நடப்பது போலாகும். நடக்கவோ, கடக்கவோ, முடியாது, முடியாது. என அறுதியிட்டுச் சொன்னான்.

எமதர்மன்:- திரிலோகத்திலும் **"ஒரே ஞானி"** எனச் சொன்னான். எம் குழந்தைகளே! இந்த வாசகத்தைக் கண்டு அதிர்ந்து போக வேண்டாம், கலங்க வேண்டாம், சந்தேகிக்க வேண்டாம், பயம் கொள்ள வேண்டாம்.



உ

அவையெல்லாம் கலிகாலத்தின் ஆரம்ப நிலையில் சொன்னதாகும். இப்போது கலியின் பாதிக்கு மேல் தாண்டிய காலமாகும். அதனால் அந்த பயம் வேண்டியதில்லை. உடல் உலகை இல்லையென்று தள்ளும் "**வைராக்யமே**

"**உங்கள் இறைவன்**"!

நாம் அந்த காலாதீத ஒன்றே என்ற "**நம்பிக்கையே**

"**உங்கள் ஸத்குரு**"!

குழந்தைகளே! இறைவனை எண்ணி கதறி அழத்தெரிய-வில்லை என்றும் அழ முடியவில்லை என்றும் அந்த காரியம் உங்களுக்கு ஸ்வயமாக தோற்றினால், அது முன்பே உங்களுக்கு அனுபவமாகி விட்டதென உணருங்கள். அது எப்படி உணர முடியும் என்றால்;

உடல் உலக பொருள்களில் உங்கள் மனமும், அதைச்சார்ந்த பின் உடலும், சம்பந்தம் கொண்டு பின் வசத்தால் உழலும்போது, யாம் முன்பு கூறிய "**ரஜஸ் தமஸ்**" குணங்கள் "**அனுப்பிரமாணமும் இல்லாமல்**" உண்மையான சாந்தி, அமைதி, பொறுமை, குற்றங்களை மறத்தல், மன்னித்தல், விட்டுக்கொடுத்து விலகுதல் முன் சம்பவங்களை எண்ணி மனம் புண்படாமலும், பிறரைப் புண்படுத்தாமலும்



உ

**இறை, குரு** சிந்தனையில் நேர்மையுடன் இருக்கமுடிகிறதா என கணித்துக் கவனித்தால் அது அதை உங்களால் அவசியம் உணரமுடியும்.

**"இதுதானின் நிறை போன்றது"!!**

(இது எம் ஸ்வய அநுபவம்)

ஏன் இப்படி உருகி அழு; கரைந்து உருகு; கரைந்து வேண்டு; அழுது அழுது இறையிடு என ஏன் உங்களுக்கு அடிக்கொருதரம் சொல்கிறேம் என்றால் உண்மையின் காரணம் இது தான்.

இறைவன் மாயா சொரூபியாக உங்கள் மனோமய கற்பனை வடிவமாக இருந்தாலும் "**அவன் மாயாகார்யம்** தானே இவ்வுலகம்"? உலகம் இல்லை இல்லையெனத் தள்ளும் போது அதை உண்டு பண்ணப்பட்டவனும் இல்லை தான்! ஆனால்?

அவன் மாயா சிருஷ்டிகளே "**நான் என்னுடையது**" எனப் பிரித்த புண்ணிய பாப உடல் இருக்கிறதே? அந்த புண்ணிய பாபங்களை, நீ என்னதான் இல்லை இல்லையென்றும், வெறும் பொய் என்றும் வாக்கியார்த்தமாகச் சொன்னாலும், அது "**நான் உண்டு உண்டு**" என பலவிதமான உருப் பெற்று எதிர்த்தான் செய்யும்! அதன் மேலும் "**குணதோஷம்**". நீ அவனை எண்ணி எண்ணி அழும்போது உன் உள்ளம் கரைகிறது; புண்ணிய பாபங்கள் கரைகிறது. பிறவித் துயரு அதன் மூலமாகத்தான் அறுபடுகிறது. இந்த சம்பந்த தொடர்ற குணங்கள் இருந்தால் அழு; இறைவனை அழைவண்டாம்.



உ

நீங்கள் அனுவதன்மூலம் **உங்களை, அவனுக்கு,**
**அவனை, அதுவாக்கு,** மயமாக்கினால் அங்கு
உடல்களையோ, உலகத்தையோ, இவைகளை உண்டுபண்ணிய
இறைவனையோ, இவைகளின் "**தர்மாதர்மங்கள்**"
**எதிலுமில்லையும் ???**
எண்ணமும் இல்லை, அதைச்சார்ந்த மனமும் இல்லை!
பின் மனம் இல்லையானால் வினை ஏது? வினை இல்லையானால்
அது வினையாலும் உலகம் ஏது? உலகம் இல்லையானால்
அந்த இறைவன் தான் ஏது? இறைவனும் இல்லையானால்
"**நீங்கள் தான் எதற்கு?** ஒன்றுதான்
**அவனும், நீங்களும், அதுவும்**", என்றே
"தத் த்வம் அஸி" என அறிவிடுவீர்கள். அதன் அகந்த
ஞானம் "**அயம்**" "**ஆத்மா**" "**பிரம்மம்**"
நீங்களோ ஸத்யசபை அறிய பிரமாணமாகலாம்
"**அதனால் உன்னைப் (அதைப்) பெறலாம்**"
அதாவது!
அதுபுண்ணியபாப வினையைக் கழுவு, வினை கழிந்தால்
உடல் இல்லை, உடல் இல்லையானால் இறைவனும் இல்லை,
இறைவனும் இல்லையானால் இவ்வுலகம் தான் ஏது? ஆனால்
**அந்த ஒன்று உண்டு! அதுவே நீயே அது!!!**
இந்த மடல் முடிவுற்றது!
முடிவு அவன் வசம்!! யாம் உங்கள் வசம், அன்புடன் அருளகம்



ஓம்

முடிவான முக்தியான ஆசியுரை!

அன்பாகவும் அறிவாகவும் இருப்பீர்களாக!
ஆதரவுடனும் ஆற்றலுடனும் இருப்பீர்களாக!
இனிமையுடனும் இதமாகவும் பேசுவீர்களாக!
ஈகையுடனும் ஈர்ப்புடனும் நடப்பீர்களாக!
உண்மையுடனும் உணர்வுடனும் இருப்பீர்களாக!
ஊற்றாகவும் ஊக்கத்துடனும் துலங்குவீர்களாக!
எங்குமாய் ஆகி எண்ணமற்று சுகிப்பீர்களாக!
ஏகாந்தமாய் அந்த ஏகத்துடனும் இயங்குவீர்களாக!
ஐயமற்று அந்த ஒன்றில் ஐக்கியமாய் அமர்வீர்களாக!
ஒன்றில் ஒன்றாய் ஒப்புவமை அல்லாததாய் ஆகுவீர்களாக!
ஓங்காரமாய் உடல், உலக, நெஞ்சகமற்று ஓய்வு பெறுவீர்களாக!
ஔடதமில்லாமல் அழிவில்லாமல் அது ஆகுவீர்களாக!
ஃ தொன்றும் ஃ இல்லாததாய் ஆகி அது ஆகுவீர்களாக!

குழந்தைகளே!
முக்தியை அருள்பவனும் இல்லை! முக்தியின் சாதனையும் இல்லை! முக்தியும் இல்லை! சாதனை என்றும்

**சும்மா, சுகமாக** இருக்கவும்!
அதற்கு இப்போதே ஆசி கூறிவிடுகிறேன்.

ததாஸ்து.



ஓம்

# பிராரப்தத்தை பரகர்மா வெல்லும்!

குழந்தைகளே!

அவன் (**அது**) கருணையினால்

கிடைத்த ஓர் சிறிய விளக்கம், இதை உணர்வீர்!

**பரகர்மா :**— பரத்திற்கு கர்மா ஏது? கர்மா அற்ற இடம் தானே பரம்? எந்த கர்மாவாலும் பரமாகிய அந்த காலாதீத ஒன்றை அடைய முடியாதே! ஆமாம் வாஸ்தவம் தான், பிரமாண உண்மை தான், எந்த (லௌகீக, தெய்வீக) கர்மாவினாலும் அடைய முடியாது தான்! ஆனால் இந்த கர்மா பரத்திலிருந்து வந்ததில்லை. இது தெய்வீகத்தின் முடிவில் ஆரம்பமாகி "**பரத்திலுள்**" முடிந்து விடுகிறது! இதன் ஆரம்ப தெய்வீக நிலையில் இதை சொல்வது "**நின்மதி**"! இதனுள் சற்று ஆழ்ந்து போனால் விடை கிடைக்கும்.

நின்மதி என்றால், நின் + மதி = நின்மதி!

இது சர்வார்ப்பணத்தில் தான் கிடைக்கும். எப்படி கிடைக்கும் என்றால் எல்லாம் நீயே என்றும், உன்னையல்லால் வேறு கதி இல்லையென்றும், இந்த சரீரம் உன்னை பதுமையே என்று நீட்டி, நிமிர்ந்து விழுந்து விட்டால், செயலோ, அதன் தன்மையோ, அதன் பயனோ, இந்த தூலத்தைச் சாராது!

இங்கு தான் **விதியை (நின்) மதியால் வெல்லலாம்.**



உ

என்பது உண்மையாகிறது! அது எப்படி என்றால்?
நிம்மதி என்ற இடத்தில் மனதின் (புத்தியின்) கற்பனை
அவசியம் இருக்காது; இருக்கக் கூடாது!

திருப்தி ஏற்பட்டால் நிம்மதி உண்டு!!
போதும் என்ற நிறைவு ஏற்பட்டால் நிம்மதி உண்டு!!
எதையும் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டால் நிம்மதி உண்டு!
எங்கும் குற்றம் குறை காணாதிருந்தால் நிம்மதி உண்டு!!
எங்கும் இறைவனுடமையாக உணர்ந்தால் நிம்மதி உண்டு!!
கடும் ஆசைகள் அகன்று விட்டால் நிம்மதி உண்டு!!
எதிலும் போட்டி இல்லாதிருந்தால் நிம்மதி உண்டு!!
எதிலும் பொறாமை, பேராசை இல்லாதிருந்தால் நிம்மதி உண்டு!
இவை அனைத்திற்கும் மூலமான,

**போதுமென்ற திருப்தியும், நிறைந்த மனமும்,**
**இருந்தால் நிம்மதி உண்டு!!!**

**ஓர் உண்மை!**

பிராரத்வம் என்றால் வினையின் முடிவு. அந்த பிராரத்வம்
புண்ணிய பாப உடலுக்கும் அது சார்ந்திருக்கும்
உலகிற்குமே பொருந்தும். ஆன்மாவுக்குப் பொருந்
தாதே! அப்படியானால் ஆன்ம சாதனைக்கு எப்படிப்
பொருந்தும்? அதாவது,

**சாதனை, சாத்தியம், ஜீவன் முக்தி,**



உ

மூன்று

ஆகிய இந்த அதீத நிலைக்கும் பிராரப்தம் உண்டு என்றால் காலாதீதமான அந்த ஸத்ய சொரூபத்திற்கும் பிராரப்தம் உண்டு என ஆகிவிடும். அதாவது பரத்திற்கும் பிராரப்தம் உண்டு என ஆகிவிடும்.

1. சாதனை :- உண்மையை நோக்கிச் செல்லும் வழி!
2. சாத்தியம் :- உண்மையில் ஒடுங்கி கலத்தல்!!
3. ஜீவன் முக்தி :- உண்மையாகிய ஜீவன் முக்தி பெறுதல்!!!

இந்த மூன்றையும் பிராரப்தம் ஆட்படுத்தும் (அதாவது கட்டுப்படுத்தும்) என்றால் ஜீவன் முக்தியை எவரும் பெற முடியாது. அதற்கு சாதனை செய்கிறோம் என்பதில் அர்த்தமே இல்லை மேலே கூறிய "நின் மதி" இருந்தால் பிராரப்தத்தை வெல்லலாம் இது ஸத்யம்.

இதை கவனிக்கவும்.

"விதியின் வழியே மதி செல்லும்" இது உடலுக்கும் அது சார்ந்திருக்கும் உலகிற்குமே பொருந்தும்.

"விதியை (நின்) மதியால் வெல்லலாம்" இது பரநிலைக்கு (ஜீவன் முக்திக்கு) செய்யும் பயிற்சி, அதாவது முயற்சியாகும், இது தெய்வீக நிலையிலிருந்து பரநிலைக்கு செல்லும் "ஒருவழி" பாதையாகும். அதாவது இங்கு செல்பவர் மீண்டும் கீழே வர முடியாது! வரக் கூடாது!! வர இயலாது!!! இதுவே முடிந்த முடிவாகும்.



உ

இந்த விதியை மதியால் வெல்லலாம் என்ற வாசகம்
லத்தியத்திற்கு மட்டும் பொருந்தும். "உடல்
உலகத்திற்கு பொருந்ாது".
இந்தமதி (அறிவு) விதிக்கு அப்பால் பட்டதாகும்!
இந்தமதியாகிய அறிவை விதியாகிய பிராரப்தம் தொட
க்கூட முடியாது. பின் இந்த விதி "ஆத்ம சாதனையை"
ஒன்றும் செய்ய முடியாது இது உறுதி!
நன்கு கவனியுங்கள். உடல் உலக பொருள்களையும்,
அதன் குண தோஷங்களையும், அனுசரித்தே விதிக்கப்
பட்ட விதியின்படியே மனமய கற்பனையும் தோன்
றும். அது கர்மா சம்பந்த ஓர் விதி நிகழ்ச்சியாகும்.

ஆனால்?

பரத்திற்கும் கர்மா இல்லை. அதை அடையும்
ஆன்ம சாதனைக்கும் கர்மா (விதி) இல்லவே இல்லை.
ஆகவேதான் ஸ்ரீ ரிபு கீதையில் ஓர் வரி எப்படி இருக்
கிறது என்றால்?

தனது மன முயற்சியினால் பிரம்மாப்யாசம்
தவறாது செய்து மனோ ஜயம் பெற்றோர்க்கே,
அன்ய பரவுணர்வு எளிதில் உதிக்குமன்றி
அன்னியர்க்கு எளிதாக உதிக்காது.

என அழுத்தமாக ஸ்ரீ ரிபு முனிவன் சொல்கிறார்!
ஆகவேதான் பிரம்மாப்யாசம் (ஞானசாதனை) தன்
முயற்சியே தவிர விதியின் வழி இல்லவே இல்லை
என்பது முடிவாகிறது. மேலும் அதன் அடுத்த அடியில்
குறிப்பிடுவதாவது!



உ

சொன்ன உணர்வு சுகம் நல்கும்,
துயரைத் தீர்க்கும், சுபத்திற்கும் சுபமாகும்,
சுலபமாகும், ஜனனம் முதல் விகாரமெல்லாம்
தவிர்த்துத் தம்மை சத்திய சித் சுகனமாம்
"பரமேயாக்கும்." என்றார்.

இதிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால்? பண்ணு
1. கர்மா நிலையில் எல்லாம் உனக்கே என அர்ப்பணை
2. தெய்வ நிலையில் எல்லாம் நீயே என விட்டுவிடு!!
3. பர நிலையில் தொட்டதும், விட்டதும் அனைத்தும் நானே என எண்ணமற்று சும்மா சுகமா இரு!!

இது அனைத்தும் ஏற்றால் நடைபெறுகிறதென்றால் உண்மையாகவே நடைபெறுகிறதென உரைமுடிகிறது!

அப்படியானால்?

1. இந்த மனம் உடல் உலகத்திற்கு கட்டுப்பட்டு இயங்கினால் அது "விதியின் வழியே மதி செல்லும்" என விதிக்குட்பட்ட மதியாகிய மனதை சொல்கிறோம்.
2. இந்த மனம் உடல் உலகத்தை தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்த தன்மையினால் அனைத்தும் தெய்வீகமாகிவிட்ட தன்மையினால் மதியாகிய மனம் கூர்ந்த அறிவாகி வொங்க தெய்வீகத்தையும் விட்ட தன்மையினால் பரமாகக்கூடிய நிலையில் "விதியை(நின்) மதியால் வெல்லலாம்" என அறிவு சொரூபமாகிவிடுகிறது.



உ

ஆகவே,

உறுதியாகவும் இறுதியாகவும் சொல்கிறோம்!

பரத்திற்கு கர்மா இல்லை, எந்த கர்மாவினாலும்
பரத்தை அடைய முடியாது.

1. லௌகீகத்தை விட வேண்டும்!
2. தெய்வீகத்தை தொட வேண்டும்!!
3. பரம் ஆக வேண்டும்!!!

அதாவது லௌகீகத்தை விட்டாலன்றி தெய்வீகம்
ஆகமுடியாது. தெய்வீகத்தை முழுமையாக தொட்டாலும்
(பரிபூரண சரணாகதியினாலும்) லௌகீகம் விட்டுப் போகும்.
தெய்வீகத்தை தொடாமலும், வேறு எம்முயற்சியினாலும்
பரமார்த்தீகத்தை (பரத்தை) அடைய முடியாது.

மேலே சொன்ன நிம்மதியும் எந்த கர்மாவினாலும்
சாத்தியமாகாது. விட்ட நிலையில்தான் நிம்மதி சாத்தி
யமாகும், எதையும் தொட்ட நிலையிலும் நிம்மதி சாத்தி
யமாகாது. அதாவது லௌகீகமும் தெய்வீகமும் கூட
விட்ட நிலையில்தான் நிம்மதி கூடும். அதாவது நிம்மதி
என்றாலே சாந்தி, மௌனம், ஆனந்தம் என பொருள்படும்.

இங்கு பரகர்மா என யாம் குறிப்பிட்டது தெய்வீ
கத்தின் முதலிடமும் முடிவிடமுமான "**சரீணாகதி**"
ஆகும். இதை எந்த கர்மாவிலும் சேர்க்க முடியாதுதான்.
காரணம் இதை விட்ட நிலையும் அதை தொட்ட நிலையுமாகும்.
கர்மா என்றாலே விட்ட நிலையாகாது தொட்ட நிலையாகும்.
அதாவது பிரவர்த்தி (புறவிருத்தி) ஆகும் அதற்கு
அவசியம் பலன் உண்டு.



## ௨

"சர்வார்ப்பணத்தில்" எந்தபலனும் எவருக்கும் இல்லை காரணம் அது கொடுக்கும் வஸ்துவும் இல்லை. அதை வாங்கும் ஈஸ்வரனும் இல்லை. பின் சர்வார்ப்பணம் ஏன் செய்கின்றோமென்றால்?

"**மனதின் பிணைப்பும், வினையின் தொகுப்பும்**" எண்ணத்தாலே வந்தது தான். ஆகவே எண்ணத்தைக் கொண்டே எண்ணத்தை கெடுத்து இரண்டு எண்ணத்தையும் விடுவதற்கே சர்வார்ப்பணம் செய்கின்றோம். எண்ணத்தின் மூலம் வாசனை (குணம்) யாகும். ஆகவே நான் துர்குண வாஸனையை (லௌகீகத்தை) கெடுத்து ஸத்வ குண வாஸனையை (தெய்வீகத்தை) பெற்று நாம் தெய்வீகம் ஆனபின் அதையும் விடுத்து "அது" ஆகலாம்.

சர்வார்ப்பணம் என்பது எண்ணம், சொல் செயல்களை ("**கர்மாவை**") விடுவதாகும். ஆகவே கர்மா சம்பந்தமான பிராரப்தம் எப்படி ஞான சாதனையை பாதிக்கும் அதாவது உலகியலையும் தெய்வீகத்தையும் விடுவதற்கு? தான் சாதனை செய்கிறோம். அவ்விரண்டுமே அஸத் கர்மா ஸத்கர்மா என இருவிதப்பட்ட கர்மாவாக இருப்பதால் அதை விட எக்கர்மாவும் தேவை இல்லை. இங்கு இந்த இரண்டையும் விடுவதற்கு "**சாட்சி**" பாவனை ஒன்றே தான் வழி. சாட்சிபாவனையென்பது "**சும்மா, சுகமாக**" இருப்பதாகும். ஆகவே இதற்கு எந்த கர்மாவும் தேவை இல்லை. ஆகவே தான் ஆத்ம ஞான சாதனைக்கு எந்த (பிராரப்த) கர்மாவும் தடை செய்ய இயலாது என திடமாகச் சொல்கிறோம்.



உ

**சாட்சி:-** சாட்சியென்றால் என்ன? அது புண்ணிய பாவம் அறியாதது! அது நல்லது கெட்டது அறியாதது! அது இன்ப துன்பம் அறியாதது! காரணம் அனைத்தையும் பாரபட்ச தோஷமின்றி, எவ்வித பேத உணர்வின்றி, சமமாக தராசின் நிறை போல காணக்கூடியதல்ல, உணரக் கூடியது! இங்குதான் கண் இருந்தும் குருடாய், காது இருந்தும் செவிடாய், வாய் இருந்தும் ஊமையாய் "**மௌனாந்தம்**" சாதிப்பதாகும். இதுவே சாட்சி.

ஆகவேதான் ஞான சாதனைக்கு தூவபாவனையை விட்டு, சாட்சிபாவனையை ஏற்று அதன் முதிர்ச்சியில் அகண்டபாவனையாக இருப்பதுவே ஞான சாதனையாகும். இந்த அதீதபாவனையை பிராரப்தம் எப்படி பிடிக்கும்? ஆகவே இது "கருணையே வடிவாக" நடைபெறுவதால் செயலற்ற அந்த பரத்தின் செயல் சற்று இறங்கி கருணையே வடிவமாக "**நமக்காக இறங்கிவருவதால் இதை பரகர்மா**" என்கிறோம்.

பரதர்மாவின் கருணை!

தூவபாவனை:- கண்ணில் காணக்கூடிய ஜகத்தை "பொம்மலாட்டமாக"வும், அனைத்தும் "மண்ணே" என்றும், மற்றும் அனைத்து குணங்களும் மனதின் விகாரமென்றும், மனோவிகாரத்தை விட்டால் உலக விவகாரம் (பிரச்சனை) நேராதென்றும் நிதானமும், அதனால் அமைதியும் அதனால் சாந்தியும், அதனால் மௌனாந்தமும் அடைந்து விட்டால் தூவபாவனை முடிந்துவிடும்.



உ

சாட்சி பாவனை :- ஜகமும், அதன் பொருள்களும் அவைகளை வைத்து விளையாடும் மண் பொம்மைகளும், அவரவர் புண்ணிய பாப வினைப்படி ஒழுங்காக நடைபெறுகிறது என்றும், அவை நடைபெறுவதற்கு இறைவனின் மாயையின் ஆட்சி என்றும் அம்மாயைக்கு இறைவன் சாட்சி, அதாவது இயற்கையின் லீலா விநோத காரியம் என்று மனோ அசைவை நிறுத்துவது சாட்சி பாவனையாகும்.

அகண்ட பாவனை :- அனைத்து உலக தூல காரியங்களும், அதை விதிப்படி அசைக்கும் மாயா காரியங்களும்,

**"விதிக்கப்பட்ட ஒன்று"**

அதற்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென திட உணர்வோடு **"அது நாம், நாமே அது"** என்று எந்த நிலையும் மௌனந்தமாயிருப்பது அகண்ட பாவனையாகும்.

ஆகவே சாட்சி பாவனைக்கும் அகண்ட பாவனைக்கும் விதியாகிய பிராரப்தம் உண்டென்றால் அங்கு சாதனையும் இல்லை! சாத்தியமும் இல்லை!! ஜீவன் முக்தியும் இல்லையென்றாகிவிடும்!

ஆகவே!

எம் குழந்தைகளே! **இறைநாம உணர்வில் மனதை வைக்கவும்! ஸத்குரு வாக்கியத்தில் ஶ்ரத்தையை வைக்கவும்!!**

விதி என்று சொல்லக்கூடிய பிராரப்தம் இல்லவே இல்லையென பிரமாணமாகச் சொல்கிறோம்!



உ

## இதன் விளக்கம் என்னவென்றால்?

குழந்தைகளே!

நாம் ஆன்ம சாதனை செய்தாலும் அதற்கு விதி (பிராரப்தம்) இருந்தால்தானே கிடைக்கும்? என மயங்க வேண்டாம்! தயங்க வேண்டாம்! சந்தேகம் வேண்டாம்! கவலை வேண்டாம்! பயம் வேண்டாம்! அதிர்வு வேண்டாம் என உறுதியாகச் சொல்கிறேன்!

உங்கள் உடலுக்கும், அது சம்பந்த உறவுகளுக்கும், அதன் உடைமைகளுக்கும், நீங்கள் காணும் அனைத்திற்கும் விதி (பிராரப்தம்) அவஸ்யம் உண்டு!

உங்கள் ஞானசாதனைக்கு விதி இல்லவே இல்லை. எம்பிரபுவின் அழுத்தமான வாசகத்தை கவனிக்கவும் அதாவது **"தனது மனமுயற்சியினால்"** என்றான். அப்படியானால் இதன் உட்பொருள் என்ன?

"மனோமய மயக்கத்திற்கு விதி உண்டு"!

"மனோமஹா சாதனைக்கு அவஸ்யம் விதி இல்லை"!!

ஆகவே!

**"பர கருணை (கர்மா) யினால் விதியை வெல்லலாம்"** என இதை முடிக்கிறேன்!

[signature]



ஓம்

மாயைக்கும் மனதிற்கும் உள்ள

# "வித்தியாசம்"!!

உளம் அன்பில் தவழ்ந்து, அறிவில் முதிர்ந்து, ஞானப்பழம் என ஆகியிருக்கின்ற எம் செல்வங்களே!

இந்த சிறிய உரையை சற்று உணர்வீர். உணர்ந்தால் மனோநலம் பெறுவீர். ஆத்ம சுகம் பெறுவீர்.

ஈசன் மாயையை உடையவன். ஜீவன் மனதை உடையவன்.
ஈசன் மாயையைப் பற்றிய நிலையில் ஜகத்தை விளையாட்டுகிறான். ஜீவன் மனம் வசம் அகப்பட்டு ஜகத்தை விடமுடியாமல் அவஸ்தை படுகிறான். ஈசனுக்கு மனம் இல்லை. ஜீவனுக்கு மனம் உண்டு. ஈசன் வசம் மாயை இருப்பதால் இந்த ஜகத்தை உண்மை (தற்காலிக உண்மை) யென நிரூபிக்கமுடிகிறது. ஜீவன் மனோ வசப்பட்ட தன்மையினால் ஜகத்தின் சிக்கல்களிலிருந்து விடுபடமுடியவில்லை.

மாயை என்றால் மண்ணை பொன்னாகவும், பெண்ணாகவும் மாற்றிக் காட்டும் திறனுடையது.

மனம் என்றால் மாயையால் காட்டப்பட்ட மண்ணையும், பொன்னையும், பெண்ணையும் நான் என்றும் என்னால் என்றும் அஹங்கரித்தும் என்னுடையது என்று அபிமானித்தும் அதனால், "சொந்த, பந்த, பாச, வினைப் பிணைப்புகள்" அவைகளின் மீது செலுத்தி தீராத மோஹத்தை உண்டு பண்ணுவது மனம்.

ஈசனுக்கு தம் மாயையினால் இந்த ஜீவனை கெடுக்க வேண்டுமென்றோ, அவஸ்தைப்படவைக்க வேண்டுமென்றோ, துன்பத்தை கொடுக்க வேண்டுமென்பதோ லட்சியமில்லவே இல்லை. காரணம் இந்த ஜீவனும் தம் அம்சமாக "தாமாக" இருப்பதால் (உதாரணம்:- தாம் பெற்ற தம் அம்சமான குழந்தையை எந்த தந்தை எந்த தாய் தான் வெறுப்பார்கள்? கஷ்டம் கவலை, துக்கம், பயம் இவைகளை கொடுப்பார்கள்? இவைகளை செய்யமாட்டார்கள்)



உ

அந்த ஜீவனை ஈசன் எந்த கஷ்டத்திற்குள்ளும் ஆளாக்க மாட்டான்
ஈசன் கருணையே வடிவானவன். ஆனால் ஜீவனும் அப்படிப்பட்டவனே!
ஆனால் மனம் வசம் அகப்பட்டுக் கொண்ட தன்மையில் துஷ்ட அதாவது
வக்ர குணங்களுக்குள் அகப்பட்டுக் கொண்டான்.

ஒன்றைப் பலவிதமாகவும் விதவிதமான நாமரூபங்களைக்
கொடுப்பது இந்த மனமாகும்.

அப்படி கொடுக்கப்பட்ட நாமரூபங்களில் அழகையும், வசீக
ரத்தையும், ஓர் இனக்கவர்ச்சியையும் உண்டுபண்ணியது மாயையாகும்.

ஈசனின் மாயை என்ன கற்பிக்கிறது என்றால் எம் அம்சமான
(குழந்தாய்) ஜீவனே! இவ்வுலகம் நம் இருவருக்குமே (இருவரால்) கற்பிக்கப்பட்டது.
நாம் இருவரும் பார்த்து விளையாடலாம். ஆனால்
(அபிமானிக்கக் கூடாது) உரிமை கொண்டாடக் கூடாது.
தொடவும் கூடாது. (நான் என்னுடையது என அஹங்கரிக்கவும் கூடாது)
என அன்பாகச் சொன்னது.

ஆனால் ஜீவன் மனதின் வசம் அகப்பட்டுக் கொண்டதால்
அது என்ன விளையாட்டு? தொடாமலும், உரிமை கொண்டாடாமலும்
விளையாடும் விளையாட்டும் ஓர் விளையாட்டாகுமா? அது என்ன
உப்பு உறைப்பில்லாத விளையாட்டு? விளையாண்டால் நன்றாக கார
சாரமாக விளையாட வேண்டும் இல்லையானால் விளையாட்டு வேண்
டாமே எனச் சொல்லி மனதின் வசம் அகப்பட்டுக் கொண்ட தன்மை
யினால் விளையாட்டை விபரீதமாக்கிக் கொண்டு விளையாடிக் கொண்டே
(பற்பல சட்டைகள் போட்டுக் கொண்டே) இருக்கிறது ஜீவன் என்ற
குழந்தை. ஆனால் (தாயும்) தந்தையுமான ஈசன் நீ அலுப்பு தீர அதாவது
ஆசை தீர அதாவது போதும் என்ற நிறைவு பெறும்பரியந்தம் விளையாடு
யாம் உன்னை சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கிறோம் எனச்
சொல்லி நம் உடன் (உள்) இருந்தே சரிபார்த்துக் கொண்டு இருக்கிறது
மாயா சம்பந்த ஈசனாகிய தாய் தந்தை. அது விளையாடுவதில்லை.

இந்த மனவய ஜீவன் விளையாட்டின் சுவாரஸ்யத்தில் மயங்கி
யவனாய் தம்முள் (உள்) உள்ள தாய்தந்தையை மறந்து விடுகிறான். தம் செல்வ
குழந்தையின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருக்கும் அந்த தாய் தந்தை
தம் குழந்தைக்காக விதவித விளையாட்டுப் பொருட்களையும் பற்பலவிதத்தை
(விசித்ரமான அதாவது கலிகால நாகரீகமான) விளையாட்டுப் பொருட்களையும் கொடுக்கி
றார்கள்.



(ஏன் தாயும் தந்தையும் என சொல்கிறோம் என்றால் "மாயையும், கருணையும்" கொண்டவன் ஈசன்)

அந்த விளையாட்டுப் பொருள்களையும் ஏன் எப்படி கொடுக்கிறார்கள் என்றால் நம் குழந்தையின் (ஜீவனின்) காலமும் காலத்திற்குட்பட்டதே. அது விளையாடும் உலக பொருள்களும் காலத்திற்குட்பட்டதே. ஆனால் நம் குழந்தை (ஜீவன்) நம் போன்றே காலாதீதமானவன் என்ற "ஸ்வய உணர்வினால்" எந்த நொடியும் ஆனந்த பரர்களாய் இருக்கின்றனர் தாயும் தந்தையும்.

ஆனால் குழந்தையோ மனோநோயினால் பீடிக்கப்பட்ட தன்மையினால் "விஷயாதிகளில்" அதாவது உலக நாமரூப இணைதோஷங்களில் மயங்கி விளையாட்டையே வினையாக்கி, விபரீதமாக்கி, வினோதமாக்கி தன்னை இன்னார் என தெரியாமல் விளையாடுகிறது.

"தன்னை உணர்ந்தாலும் விளையாட்டு விட்டுப் போகும்"!

"விளையாட்டை விட்டாலும் தன்னை உணர முடியும்"!!

இதன் விபரம்:

**மாயை:-** மாயையென்றாலே "**ரூப நாமம்**" அது நாமரூபமல்ல. காலாதீதமான அந்த செயலற்ற ஒன்று செயலுக்கு தம்மை உட்படுத்தும் போது தம்மை ஓர் ஈசனாக (தெய்வமாக) வடிவெடுத்துக்கொண்டது. செயலின் நிமித்தம் வந்த அந்த ஒன்று தாம் விளையாடுவதற்கு இந்த ஜகத்தை (ஜட கடபடாதிகளை) உண்டாக்கிக்கொண்டது. ஜகம் என்றாலே ரூப நாமம். அதாவது முதலில் உருவத்தை உண்டாக்கி அவற்றிற்கு இயற்கையின் நிமித்தம் ஓர் பெயரையும் வைத்தது இது யோகமாயையின் (மூலப்பிரகிருதியின்) அம்சம். பின் ஜகத்தில் விளையாடுவதற்காக அந்த ஒன்றே தம்மிலிருந்து ஓர் அணுவை (ஆத்மாவை) பிரித்தெடுத்து "ஸ்வய ஆத்ம ஸ்வரூபம்" என ஆக்கிக்கொண்டது. இது இந்த ஜடகடபடாதிகளாகிய ஜகத்தில் விளையாட ஆரம்பித்தது. இந்த ஆத்மஸ்வரூபம் இந்த ஜகத்தில் விளையாட வேண்டுமானால் தமக்கும் ஜகத்தை யொத்த ஓர் வடிவம் வேண்டும். அந்த ரூப நாமத்தோடு விளையாட தமக்கும் ஓர் வடிவும் எடுத்தாக வேண்டும்



உ

அந்த காலாதீத ஒன்றே தம்மை இறைவனாக்கும் போது
தம் நிழலை யோகமாயையாகிய மூலப்பிரகிருதி ஆனது.
தானே ஆத்மஸ்வரூபமாகி விளையாடவும் நிமித்தம் தம்
நிழலை யோகமாயை அதாவது விளையாட்டுமாயை அதாவது விஷ்ணு
மாயை அதாவது மஹாமாயையென உண்டாக்கிக் கொண்டது
யோகமாயை கலப்பில்லாதது, உபாதை இல்லாதது. அங்கு இரண்டு
தான் இருக்குமே தவிர மூன்றில்லாதது ஆனால்
யோகமாயை பலவாகத் தோற்றும் சக்தி உடையதாகும். இந்த
யோகமாயையின் முதல் அம்சமே மனமாகும்

**மனம்:**— மனதின் வடிவம் "எண்ணம்", எண்ணம் என்றால்
பசை அதாவது பிடிப்பு அதாவது பிசின் போன்று ஒட்டிக்கொள்வது.
தாய்தந்தையான அந்த இறைவன் தம் யோகமாயையினால் சிருஷ்டித்த
"ரூப நாமத்தை" தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள அந்த ஒன்றி
லிருந்து வந்த ஆத்ம ஸ்வரூபம் அந்த ரூபநாமத்தை "**நாமரூபமாக**"
மாற்ற எது ஹேது என பார்க்கும் போது தம் நிழலில் தோன்றிய ஒன்று
இதை "**ஸ்வயம்**" என பற்றிக் கொண்டது இதுவே மனமாகும். ஏன்
இதை இப்படிச் சொல்கிறோம் என்றால் திடீர் திடீரெனப் பற்றுவது தான்
மனமே தவிர இது நிரந்தரமாக இருப்பதில்லை. மனம் என்றாலே எண்ண
வடிவில் "வரும், மாறும், மறையும்" இதுவே மனதின் இயல்பு. ஆக
இந்த மனம் ஆத்ம ஸ்வரூபத்தை பற்றும் போது ஜகத்தை நித்தியமாயும்
ஸத்யமாயும் இருப்பதைப் போல் காட்டுவதற்காக "எண்ண வடிவில்
புகுந்து இப்படி இருப்போம், இப்படி ஆவோம், இப்படி வளர்வோம் என
பல கற்பனைகளைப் புகுத்தி தாம் புசித்து விளையாட இந்த ஜகமானது
ரூபநாமமாக இருந்தால் தமக்கு ஒத்து வராது எனத் தெரிந்து அந்த



௨

ஜடகடபடாதிகளை தம் கற்பனைக்குத் தகுந்தபடி ஓர் "நாமத்தை"க் கொடுத்து பின் இவைகளை எப்படி அமைக்கலாம் என அதையும் தம் மனவடிவில் ஓர் "ரூபத்தையும்" கொடுத்து முடிவில் அனைத்தையும் "**நாமரூபமாக்கி**" ரசித்து விளையாட ஆரம்பித்தது விபரம் அறியாக் குழந்தையாகிய ஆத்மஸ்வரூபம்.

முன்னே கூறியபடி இந்த ஆத்மஸ்வரூபம் இந்த ஜகத்தில் விளையாட வேண்டுமானால் தமக்கும் ஜகத்தை ஏற்ற ஓர் வடிவம் வேண்டுமென தம்மைப் பற்றிய மனோ சொரூபத்தின் மூலமாக (தம் தாய் தந்தையரை மறந்து) "**நான், எனது, என்னுடையது**" என்ற கர்த்தத்துவத்தை உண்டுபண்ணி, அந்த மனோ எண்ணப் பதிவினால் "புண்ணிய பாபம்" என்ற ஓர் வினையை தமக்குத்தானே உண்டு பண்ணிக் கொண்டு, அதன் மூலம் தமக்கு ஓர் வடிவத்தையும் (தூலத்தையும்) தோற்றுவித்து அதன் மூலமாக இந்த ஜகத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறது (முன்பு அறியாக் குழந்தை இன்று) அனைத்தையும் புத்திபூர்வமாக அறிந்த குழந்தை. இப்படி புத்திபூர்வமான குழந்தையாக இது மாறி விட்டதால் இதற்கு ஆத்மா என்றோ ஆத்மஸ்வரூபம் என்றோ அழைக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது ஆகவே இதன் பெயர் இனி "**ஜீவன்**". (புத்தியை விட்டால் இதுவே ஆத்மா)

முக்கிய குறிப்பு!

யோகமாயையில் உதித்தது "ரூபநாமம்". இவை இயற்கையின் நிலையில் ஜடகடபடாதிகளாக இருந்தது. காலாதீத அந்த ஒன்றிலிருந்து தம்மைத்தானே தோற்றுவித்துக் கொண்ட ஈசனின் படைப்பு எனச் சொல்லலாம். ஆகவே இப்படைப்பும் அதன் இயக்கமாகிய யோகமாயையும் ஈசனுக்கு கட்டுப்பட்டே இருந்தது. இவனையே பரமாத்மா எனவும் சொல்லலாம். இவன் அந்த யோகமாயையை தம் கரங்களில் வைத்துக் கொண்டிருப்பதால் அவனை அது எதுவும் செய்ய முடியாது. எந்த வினாடி அதை அவன் விடுகிறானோ அந்த க்ஷணமே அவன் அது ஆக முடியும். இங்கு இவ



உ

னுக்கு வேறு எந்த நடைகளும் இல்லையெனலாம். ஆனாலும் இவன் குழந்தைகளை (ஆத்மஸ்வரூபத்தை) பெற்று தாயும் தந்தையும் ஆகி விட்ட தன்மையினால் அதாவது இந்த ஜீவர்களுக்காக நாற்பத்தி எட்டு சதுர்யுகமும் இருந்தே ஆகவேண்டும். அதாவது ஈசனுக்கு முக்தி இல்லையென்றும் சொல்லலாம் அதாவது இவன் அந்த காலாதீத ஒன்றுடன் கலக்க முடியாது. ஆனாலும் "**அதன் அம்சமாகவே இருப்பான்.**"!!

லோகமாயையில் உதித்தது "**நாமரூபம்**"! இவை செயற்கையின் நிலையில் உண்டானது. காலாதீத ஒன்றிலிருந்து இயக்கத்தின் நிமித்தம் வந்த ஈசனின் குழந்தையாகிய இந்த ஆத்மஸ்வரூபத்தின் நிழலே மனம். இதில் என்ன வித்தியாசம் என்றால் "**ஈசன் கையில் மாயை**"!

"**மனதின் கையில் ஜீவன்**"!!

அதாவது ஈசனின் குழந்தையாக வந்த இந்த ஆத்மஸ்வரூபம் மன (மாயையின்) தின் கைகளில் அகப்பட்டுக் கொண்டதால் "**ஜீவன்**" என ஆனான். இந்த ஜீவன் மனதின் குணதோஷங்களை விட்டால் போதும் அவஸ்யம் நாமரூபம் மறைந்து அனைத்தும் அதன் பிறப்பிடமாகிய "**மௌனமே**" என ஆகிவிடும். அந்த மனம் இயற்கையாகவே ஆகிவிடுவதால் மனோமய குணதோஷங்களும் மனோமய சிருஷ்டியாகிய செயற்கையும் நிர்மூலமாகிவிடும். செயற்கையில் விளைந்த இந்த மனோமய குணதோஷங்கள். இந்த குணதோஷங்களே மனதின் வடிவமாகும். இந்த குணதோஷங்களை "நான் எனது" எனப் புசிப்பதால் வந்ததே இந்த ஜகமும் அதன் விளையாட்டும். நான் எனதை விட்டாலே குணதோஷங்கள் தாமே மறையும்! குணதோஷங்களை மறந்தாலும் அவஸ்யம் இந்த நான் எனது விட்டே போகும். குணதோஷங்களை மறப்பது என்றால் அனைத்தும் "மௌனமே" இந்த மௌனத்தைக் கன்னியமில்லை என்ற மனதை உறுதியில் வைராக்யம் வேண்டும். இதனால் ஜகமும் இல்லை விளையாட்டும் இல்லை!



உ

**ரூபநாமம்** :- இது இறைவன் சிருஷ்டி. இங்கு ஓர் தோற்றத்தை உண்டுபண்ணிய பின் அதற்கு ஓர் பெயரை வைத்தான் இறைவன். தோற்றம் என்பது ஜடம், அதன் பெயர் அதன் குணமாகும்! ஜடம் அசைவற்றது, குணம் அசைக்கக் கூடியது. அதாவது மனதை அசைக்கக் கூடியது. அதாவது இது இதால் ஆனது, இது இன்னது செய்யும் என இன்ப துன்ப குணங்களை புகுத்துவது. இதுவே அசைவாகும். இங்கு ரூபம் வலுப்பட்டுவிட்டது, குணம் மெலிவாக இருக்கிறது, ஆகவே ரூபநாமத்தில் அதிக அசைவில்லை.

**நாமரூபம்** :- இது ஜீவன் சிருஷ்டி. இங்கு இது இப்படி இருக்க வேண்டும் இப்படி செய்ய வேண்டும், இப்படி அனுபவிக்க வேண்டுமென மனமே கற்பனையை முதலில் நாம (ஒலி) வடிவில் முதலில் பண்ணிக்கொண்டு பின் அதன் வடிவம் (ரூபம்) அமைத்துக் கொண்டது. ஆகவே இங்கு ஒலி வடிவின் குணம் முதலில் வலுப்பெற்றது, ஆனால் ரூபம் வலுப் பெறவில்லை. இந்த குணம் அதாவது அசைவு அதாவது தோஷ குணங்கள் முதலில் மனம் கற்பனை பண்ணியதால் அந்த குணங்களை இந்த மனம் மறக்க முடியவில்லை. ஆகவே இந்த பதிவேட்டின் குணங்களிலே திரும்பத் திரும்ப இந்த ஜீவனுக்கு பிறவி அமைகிறது. ஆகவே இந்த நாமரூபத்தில் அசைவே முக்கியமாகிவிட்டது.

மாயையின் சிருஷ்டி இயற்கை, மனதின் சிருஷ்டி செயற்கை. மாயை என்றால் ஈசன். மனம் என்றால் ஜீவன் (மனிதன்) மாயை என்றால் நாம ரூபம், மனம் என்றால் அதன் குண தோஷங்கள். மாயையின் இருப்பிடம் ஸத்வ குணமுள்ள ஈசன், ஆனால் இந்த மனதின் பிறப்பிடமும் இருப்பிடமும் நான் என்னால் என்ற அஹங்காரமும், என்னுடையது என்ற அபிமானமும் ஆகும். மாயை என்றால் தோற்றம், மனம் என்றால் அதில் ஏமாற்றம். மாயையின் அதிபதியாகிய ஈசன் தம் ஸத்வ குணத்தினால் மேலான பிறவியை கொடுக்கவும் முடியும் அதுவே பின் குணாதீத நிலைக்கும் (நிர்குணம்) சென்று பிறவா நிலையையும் கொடுக்க முடியும். ஆனால் இந்த மனிதனின் மனமோ பிரவர்த்தியில் ஆழ்ந்து விட்டால் விஷயானந்தத்தில் மூழ்கி கீழான பிறவிகளும் கொடுத்து திரும்பத் திரும்ப ஜனன மரணத்தை கொடுக்கும்.



உ

ஆனல்???

அன்பின் குழந்தைகளே!

மாயையின் பிரதிபிம்பமே மனம்.

இதை ஓர் அன்பர் பாடும் போது "மாயை என்றொருத்தி தன்பால் மனம் என்னும் மைந்தன் தோன்றி, தூய நல்லறிவன் (அந்த) தன்பால் தோற்றம் உண்டாக்கி வைத்தான்" எனச்சொன்னார். ஆகவே இந்தமனம் தோன்றிய இடம் மாயை யென்பது உறுதியாகி விட்டது. இந்தமனமே ஜனனமரணத்தின் வித்தாகி இருக்கிறது. ஆகவே இந்த மனதை இல்லாமல் செய்ய, அதாவது நம் வசப்படுத்தி இறைவா நிலை பெற ஒரேவழி தான் உண்டு!

அந்தவழியாவது மனதை அது பிறந்த இடத்திற்கு அனுப்புவதைத் தவிர வேறுமார்க்கம் இல்லை. மனம் பிறந்த இடம் மாயை. அதாவது மனதை மாயையிடம் ஒப்படைக்க வேண்டும். மனதை இல்லாமல் செய்வதல்லாது வேறுமார்க்கம் இல்லவே இல்லை. இதைத்தான் எம் தாயுமானவரும் அழகாகச் சொன்னார்.

"சினம் இறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும்,
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே!!" என்றார்

இதைத்தான் இடைக்காடர் சொன்னார் இந்த மனதிற்கு மூன்று நிலைகளும் மூன்று வடிவங்களும் கொடுத்து பாடினார். அதாவது

சினம் என்ற பாம்பு (மனம்) இறந்தால் தாண்டவக்கோனே,
எல்லாம் சித்தியென்றே நினையடா தாண்டவக்கோனே!

ஆசையென்ற பசு (மனம்) மாழில் (இறந்தால்) தாண்டவக்கோனே,
எல்லாம் வாய்த்ததென்றே நினையடா தாண்டவக்கோனே!
மனம் என்ற மாடு (மனம்) இறந்தால் தாண்டவக்கோனே,
இந்த அண்டமெல்லாம் நீ நிறைவாய் தாண்டவக்கோனே!

என அழகாக இந்த மனதை மாய்க்க வேணுமென்று சொல்லிருக்கிறார்கள். அந்த ஒரேவழி அது பிறந்த இடமாகிய மாயையிடம் ஒப்படைக்க



உ — யோகசித்தி, அஷ்டசித்தி,
வேண்டியது தான் அந்த ஒருவழி. மற்றும், யோகம், தாரணை,
மந்திர ஜபம், ஆத்மநிலை தியானம், பஜனை, நாமாவளி, நாம ஜபம்
மற்றும் ஆயிரக்கணக்கில் மார்க்கம் உண்டு. இப்படி
எத்தனை வழிகளில் ஈடுபட்டாலும்,

## "மனம் அடங்குமேயன்றி அழியாது"

மனதைக் கொடுத்தமாயையிடம் அதன் விபரம் சொல்லி ஒப்
புக்கொடுத்துவிட்டால் (பரிபூரண சரணாகதி செய்துவிட்டால்)
நம்மைவிட்டு போன மனம் திரும்ப நம்மிடம் வராது. அதனால்
ஜனன மரண பயமும் நமக்கில்லை. அதாவது நம் மனதிடமும்
அதன் தாயிடமும் (மாயையிடமும்) பணிந்து கெஞ்சி, கொஞ்சி,
கேட்டு விட்டு விடவாம். **மனதைவிடும் முறை!!**

1. <u>முதலில் மனதிடம் கெஞ்சுவது</u>:– ஹே மனமாகிய மஹானுபாவா!
பற்பல பிறவிகளில் விதவிதமான சட்டையைப் போட்டு அதாவது
ஆன்மாவாகிய யாம் உன்னுடைய <u>கூட்டுறவினால்</u> உன்னுடன் நெருங்கிய காவ
மாக பிறந்து இறந்து, பிறந்து இறந்து விளையாடிவிட்டோம். ஹே தயா
நிதி! ஆடி, ஓடி, பாடி, தேடி ஓய்ந்துவிட்டோம். ஏ மனமே! யாம் பற்பல
ருக்கும் தாய்தந்தையாக இருந்திருக்கிறோம். பற்பலரும் எம்மை சேயாக
பெற்றுப்போட்டு அழுத்திவிட்டார்கள். கருவறை என்ற இருள் அறைக்
குள் திரும்ப திரும்ப புகுதலும் வெளி வருதலும் வெகுவாக வருந்தி மிக
வும் அழுத்துவிட்டோம் ஐயனே. நீயாக எமக்கு கருணை காட்டாவிட்
டால் எமக்கு உதவுபவர் யார்? ஓ எம் ஐயனே மனதேவா! நீயே எம் கண்
கள் மூலமாக பசையே வடிவமான இந்த ஜகத்தை பார்க்கச் செய்தாய்
நீயே எம் காதுகள் மூலமாக பற்பல ஒலி அலைகளை கேட்கச் செய்து அதை
விபரீதப்படுத்தி, விநோதமாக்கி, விகாரமாக்கி விவகாரத்திற்கு (பிரச்
சனைக்கு) உட்படுத்தி வெறியையும் வேகத்தையும் பெருகச் செய்தாய்
இந்த இரண்டுமே உனக்கு பிரதான வாயில்வாகும். எம் கண்கள் உன் மூல
மாக காண்கிறது அது உண்மையை பேசுவதில்லை, பேசமுடிவதில்லை.
எம் காதுகள் உன் மூலமாக கேட்கிறது ஆனாலும் அது அதன் மூலமாக
உண்மையைப் பேசுவதில்லை. பேசமுடிவதில்லை. ஆனாலும் இந்த இரண்
டையும் மனம் என்ற உன் தன் கற்பனை மூலமாக பற்பல குணதோஷங்க
ளினால் எம் வாக்கு மூலமாக நீயே பேசி விரோதத்தையும் வேதனையையும்



உ

பற்பல தேவையற்றவைகளையும் பேசி கலகத்தை உண்டுபண்ணி கலகத்தையும், அதனால் கலக்கத்தையும் உண்டுபண்ணி விடுகிறாயே? இது தகுமா? இது தருமம் தானா? எம்பொன்னான மனமே நீ எம் வாக்கில் இருந்து கொண்டு பந்தபாச உறவு சம்பந்தமாக பேசியும்; பெண்ணின் காமத்தைப் பற்றி பேசியும்; பொன் பொருள் சம்பந்தமான பேராசையைப் பற்றிப் பேசியும்; சர்வசதாவும் பிறருடைய வாழ்க்கை வசதிகளை பொறுக்கமுடியாமல் பொறாமையாகப் பேசியும் இப்படிப் பல நிலைகளிலும் வீண் பெருக்கத்திலேயே இருக்கிறாயே இவைகளை விட்டொழிப்பது எக்காலம்? எம்மனமே! நீ இந்த குணதோஷங்களை எண்ணமல் இருந்தால்லவோ இந்த பிறவிப் பிணி நீங்கும். ஓ எம் அன்பான மனமே! எம் பண்பான மனமே! கள்ளங்கபடில்லாத வெள்ளைமனமே உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றை மறந்தே போனேன்; ஆமாம் நீ உன் அம்மா (மாயை) வீட்டை மறந்துவிட்டாயே! அவர்களும் நம்மகளை காணுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். நீயும் உன் தாய் வீடு சென்று வந்தால் இன்னமும் புஷ்டியாக அழகாக இருப்பாய். அந்த இடம் உன் ஆட்டத்திற்கும் பாட்டத்திற்கும் நல்ல வசதியான இடம். உன் அம்மா அஷ்டலக்ஷ்மி அல்லவோ அங்கு பொன்னுக்கோ போகத்திற்கோ பொருளுக்கோ பஞ்சமில்லை அங்கு நீ ஆடலாம், பாடலாம், குதிக்கலாம், அடம்பண்ணலாம், நீ எண்ணியதை அங்கு சாதிக்கலாம் அது உன் ராஜ்யம் தானே! இந்த பரதேசி பயலிடம் என்ன இருக்கிறது? எல்லாவற்றையும் இழந்து ஓட்டாண்டியாக இருக்கிறேன் நீ அங்கு சென்றால் சுகமான வாழ்வு வாழ்வாய். இந்த

(அன்பர்கள் இதைக் கவனிக்கவும்:- யாம் தாய்வீடெனச் சொன்னது மாயா சொரூபமான ஈசன். இது அவன் அம்சமான அன்னை மஹாலக்ஷ்மிக்கும் பொருந்தும். அந்த மாயையாகிய அன்னை இருப்பிடமோ பாற்கடல் என்ற சமுத்திரம். அந்த மாயா பாற்கடலில் பிறந்ததே இந்த "உப்புப் பதுமையாகிய மனம்". இப்போது இந்த உப்பு பதுமையாகிய மனதை அது பிறந்த இடமாகிய சமுத்திரத்திற்கு அனுப்பி விட்டால் அது திரும்புமா???) பரதேசியைவிட்டுவிடு என கெஞ்சி கெஞ்சி கெஞ்சி, கேட்டால் அந்தமனம் இந்த துப்புகெட்டபயலிடம் இருந்து என்ன சுகம் கண்டோம்? இனியும் என்ன காணப்போகிறோம் என்று உன்னைவிட்டு அதன் அன்னையிடம் ஓடிவிடும்!

எம் குழந்தைகளே! இதைப்போலவே மாயை(ஈசன்) யிடமும் கொஞ்சியும் பேசவேண்டும்.



உ

உ மாயையாகிய சக்தியிடம் கொஞ்சிப் பேசும் முறையாவது:—
மாயைக்கு அதிபதியாயும், உலகின் கர்த்தாவாயும், எம் அருமைத் தந்தையும் தாயும் ஆனவனையும் (கருணையும் சாமர்த்திய மாயையையும் உடையவனையும்) காலாதீத அந்த ஒன்றில் எம் பரிபூரண அம்சமாயும் உடைய எம் இறைவா! யாம் சொல்லி உனக்கு தெரிவதென்றில் உனக்கு சர்வக்ஞன் என்னும் தஸ்கர ஐம்பகு என்ற நாமமும் பொருந்தாது!! இருந்தாலும் எம் தாலவினையும் உண்மையே அசையும் எம்மை படாதபாடு படுத்துவதால் உன்னிடம் சொல்லி அழுதுதான் தீரவேண்டும் வேறுமார்க்கம் எமக்குத் தோன்றவில்லை!

நீயோ எம் தந்தை மேலும் யாம் உம் அம்சம் நம் இருவருமே இந்த ஜகத்தையும் அதன் பொருள்களையும் நம் விளையாட்டார்த்தமாக சிருஷ்டி செய்தோம். சிருஷ்டித்த மாயையை நீ சாமர்த்தியமாக உன் கைகளில் வைத்துக் கொண்டாய். யாம் இது என்ன? என விபரீதமாகவும், வித்தியாசமாகவும், விநோதமாகவும் சற்று கூர்ந்து நோக்கினோம். ஆனால் உன் கையின் சாமர்த்தியமாய், அதில் உள்ள மாயையின் (குழந்தை) சொரூபமாயும்

## “எம்முடைய நிழலுமாய்”

அமைந்த விநோத சிருஷ்டியான வெட்டவெளியில் திடீரெனத் தோன்றும் சுழல் காற்றைப் போல,

## “ஓர் மாயமனம்”

எம்மை “**லபக்**” கெனப் பற்றிக் கொண்டது. அதன் பிடியிலிருந்து எம்மால் மீளவே முடியவில்லை. அது படுத்தும்பாடு கொஞ்ச நஞ்சமில்லை ஓயாத ஆட்டம் தான். குரங்காட்டம் ஆடுகிறது. அந்த ஆட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால் பார்ப்பதிலும் கேட்பதிலும், நுகர்வதிலும், சுவைப்பதிலும், தொடுவதிலும் பரிபல குண தோஷங்களை தமக்குத் தாமே கற்பனை பண்ணிக் கொண்டு



உ
அதை மேலும் மேலும் விருத்தி செய்து கொண்டு அதை

# “வாக்காக புலம்பி புலம்பி”!!

அந்த புலம்பலுக்காகவும், அதன் குணதோஷங்களுக்காக வும் கோடானுகோடி சட்டை (ஜன்மா) போட்டு போட்டு வெகு அலுத்துப்போனேன். அதாவது உன் மாயையின் சிருஷ்டியை அப்படியே நோக்காமல் விதவிதமான கற்பனை பண்ணி மனோமய சிருஷ்டியாக்கி, அப்படி விட்டாலும் பரவாயில்லையே தேவையில்லாத குணதோஷங்களையும் கற்பனை பண்ணிப்பண்ணி ஒவ்வொரு ஜன்மாவிலும் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிக் கொண்டே இருக்கிறது.

எம் இறைவா!

இந்த மனதின் எண்ணங்களையும் அதன் செயல்களையும் உன்னிடம் விடுவதல்லாது வேறுமார்க்கம் தெரியவில்லை. ஏன் வேறுமார்க்கமும் இல்லவே இல்லை கருணைபுரிவாய், கருணைக்கடவுளே, உன்னையல்லால் வேறுகதியும் இல்லை. இதை எம்மிடம் விட்டாலன்றி யாரும் காலாதீதமான உம் ஸத்ய சொரூபத்துடன் யாரும் இரண்டற கலக்கமுடியாது. ஓம் இறைவா! எம் தலைவா! ஓர் ஒப்புதலுக்காக இதைச் சொல்கிறோம் உடனே எம்மீது ஆத்திரப்பட்டு விடாதே! எமக்குத் தெரியும் நீ ஆத்திரமோ வேகமோ அவசரமோ படமாட்டாய் எனத் தெரியும். “இறைவன் என்றால் கருணை! கருணை என்றால் இறைவன்” இது தான் அன்றும் இன்றும் என்றும் ஸத்ய வசனம் இருந்தாலும் மூத்திரத் தொட்டை போல் முந்தி முந்தி வந்து தேவையற்றதை புலம்புது எமக்கு கஷ்டமில்லை. அது உனக்கும் பொருந்தாது தான்; இருந்தாலும் அந்த ஒன்றை சொல்லி



உ

அழுது புலம்பி விட்டு உன்னிடமே முடிந்து விடுகிறேன்

எம்பிரபுவே! சர்வஜீவதயாபரா! எங்கும்
நீக்கமற நிறைந்திருக்கும் சர்வேஸ்வரா! கருணைமூர்த்தி!

இந்தமாயாமனதை வைத்து கோடானுகோடி அரிய பெரிய வித்தைகள் எல்லாம் அநாயசமாக எம்மால் செய்து முடிக்க முடியும் அதாவது:— மதயானை, கரடி, புலி, சிம்ஹம் இவைகளை எல்லாம் அடக்கி ஆள முடியும். விண்மீன்களை அனைத்தும் எண்ணியும் விடலாம். அவைகளை ஓர் ஆரமாக கோர்த்தும் விடலாம். சமுத்திர கரையின் மணல்களை கூட எண்ணிக் கணக்கிடலாம். சமுத்திரத்தில் எத்தனை துளிகள் உண்டு எனக்கூட எண்ணி விடலாம். ஏழுசமுத்திரத்தையும் குடித்து ஏப்பம் விடலாம். மற்றவர்கள் காணாமல் உலகத்தில் உலாவலாம். விண்ணவரை (தேவர்களை) ஏவல்கொள்ளலாம். நீர்மேல் நடக்கலாம். அனல் மேல் படுக்கலாம். சமுத்திரத்தின் அடியில் பல ஆயிரம் வருஷ காலம் இருக்கலாம். ஆகாரம் இல்லாமல் காற்றை மட்டும் ஏற்றுக்கொண்டு பல வருஷ காலம் ஆனந்தமாக இருக்கலாம். காயகல்ப வித்தையினால் பல ஆயிர வருஷங்கள் வாழ்ந்து காட்டலாம். அணிமாதி அஷ்டசித்திகளையும் கற்று யோகிகள் வாழும் இடமாகிய வடவால விருட்சத்தின் வட கோடிக்கிளையில் பல கல்பகோடி வாழலாம். திரிகர்த்தாக்கள் பிரளய காலத்தில் மறைந்தாலும் தான் மறையாமல் நிலைக்கத் தகுந்தபடி தோற்றத்தை மாற்றம் செய்து பல கல்பங்கள் வாழ்ந்து காட்டலாம்.

ஆனால்???

இந்த வஞ்சமாயாமனதை (குரங்காட்டம் ஆடும் இந்தமனதை)

**"அரைவினாடி நிறுத்த முடியவில்லையே"**

!!!



உ

ஓ எம்பிரபுவே! தயாஸாகரா! கடைக்கண்பாராய்! உன் மாயையிடம் தோன்றியது தானே இந்த மாயா மனம். இந்த மனதை உன்னிடம் ஒப்படைப்பது அல்லாது ஒரு மார்க்கமும் இல்லை ஐயனே! பாவி மனக் குரங்கு காட்டும் சகிக்கமுடியவில்லையே எம் தெய்வமே! ஓ எம் தயாஸாகரா! இந்த மன ஆட்டத்திலே விதவிதமான ஆசைகள், விதவிதமான காட்சிகள், விதவிதமான குண தோஷங்கள், அப்பப்பா இதை சகிக்க முடியவில்லையே எம் பிரபுவே. எம் ஐயனே ஒன்றை விட்டால் அடுத்த க்ஷணம் ஒன்றைப் பற்றிக் கொள்கிறது. என்றோ நடந்த சம்பவத்தை இன்னமும் மறக்கமாட்டேன் என்கிறது, அதற்கு பழிவாங்க சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறது. என்றோ கேட்ட வார்த்தைகளை எண்ணி எண்ணி எம்மை புண்படுத்திக் கொண்டே இருக்கிறது. எம் தயாநிதி! இந்த மனமானது கேட்கும் வார்த்தைகளில் விரோதம் குரோதம், காணும் காட்சிகளில் காமம் ஆசை மோஹம், தீராத வெறி, சந்தேகம் இப்படி சர்வசதாவும் அலைக்கழிக்கிறதே எம் ஐயனே!

"மண், பொன், பெண் ஆசை மயக்கத்திலே இருந்து,
கண் கெட்ட மாடு போல் கலங்குகின்றோமே"

எம்மைக் கடைக்கண் பார்த்தருள்வாய். உம்மையல்லால் வேறு கதியில்லை ஐயனே! இந்த மனம் உம் குழந்தையாகிய எம்மை இந்த பாடுபடுத்த எமக்கு உள்ளும் புறம்புமாய் இருக்கின்ற நீ அறியாததா? உம்மையல்லால் இந்த மனம் எங்கிருந்து வந்தது? இது உன் சூதே தவிர வேறொன்றும் இல்லவே இல்லை. சூதறிந்த கள்வன் நீயே! நீயே உன்னில் தோன்றிய இந்த மனதை நீதான் உன்னிடம் கட்டிப்போட்டாலும் சரி, கூண்டோடு அழித்தாலும் சரி! என



உ

மாயையாகிய ஈசனிடம் கொஞ்சி, கொஞ்சி, கொஞ்சி அந்த மாயா மனதை விட்டு விடுங்கள்.

ஆக கெஞ்சியும், கொஞ்சியும் முறையிட்டு இந்த மாயா மனதை நிர்மூலமாக்குவதல்லாது வேறு மார்க்கம் இல்லை.

இந்த மனதை யுத்தம் செய்தோ வேகத்தாலோ, கோபத்தாலோ, ஆத்திரத்தாலோ, அவசரப்பட்டோ, அடாவடித்தனம் செய்தோ வேறு எந்த முகாந்திரத்தைக் கொண்டும் மனதை அழிக்க முடியாது. ஆகவே தான்

**மனதை உறவாடிக் கெடுக்க வேண்டும்!!**

என்பர் சான்றோர். எம் வசிஷ்டர் தம் வாசிஷ்டத்தில் அழகாக சொல்கிறார் பிச்சிப்பூவின் இதழ்களை நசுக்குவதற்காவது இந்த விரல்கள் நோகும்! ஆனால் இந்த மனதை நசுக்குவது

**"வெகு வெகு சுலபம்"** என்றார்

ஓம் மெய்யன்பர்களே!

இங்கு வசிஷ்டர் சொல்லும் வாசகம்

எம் நிலையிலிருந்து பார்த்தாலல்ல, உணர்ந்தால் வெகு வெகு வெகு சுலபமாகத் தோற்றுகிறது தான்.

ஆனால்?

உங்கள் நிலையில் சற்று கடினம் தான். ஆனால் வெகு கடினமல்ல இது உறுதி இப்படி உறுதியான வாசகத்தை உங்களுக்கு எப்படி சொல்கிறோம் என்றால், **நீங்கள் எம் குழந்தைகள்!!**

ஆகவே உங்களால் முடியும் என பிரமாணமாகச் சொல்கிறோம்.

ஒரே மார்க்கம்.

**"சர்வார்ப்பணம்"** அதாவது. **"எல்லாம் நீ"**

என முடியுங்கள் அது முடிந்துவிடும்!

உங்கள் வினையும் மனமும் முடிந்துவிடும்!!

பாபா



ஸத்யம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

# வைத்தியத்தின் வைத்தியம்!!!

எம் ஞானமழைகளே! அனைத்தும் காலாதீத ஒன்றே!
அனைத்தும் அந்தபரமே! அனைத்தும் நலமே!
அனைத்தும் சுகமே! **"அது நீங்களே"** இது ஸத்யம்!!!

இந்த வைத்தியம் எழுதும் வாசகங்களை யெல்லாம் உணர்ந்து படிக்கிறீர்களா! இந்த சந்தேகம் உங்களுக்கு வரவில்லையா??? அதாவது!

இந்த வைத்தியக்கார அப்பா தம்மையே அனைத்து இறைவனாக பாவனை செய்கிறார்! அனைத்து மஹான்களாகவும் பாவனை செய்கிறார்! அனைத்து அவதார புருஷர்களாகவும் பாவனை செய்கிறார்!!! இது எப்படி சாத்தியமாகும்? இவைகளை எப்படி நம்ப முடியும்? பொய் சொன்னாலும் சற்று பொருந்தும்படி சொல்ல வேண்டாமா? வெள்ளைக் காக்கா பறக்கிறது என்றால் உடனே நம்பி விடுவதா? யாம் இறைவனை கண்டோம், பேசினோம், விளையாடினோம், அளவளாவினோம், உரையாடி உறவு கொண்டோம், என எல்லாம் கதை கதையாக அளக்கிறாரே, "ஓர் வைத்தியம் பத்தும் செய்யும்" என்பது இவர் வகையில் சரியாக இருக்கிறதே? நாமும் எத்தனையோ ஞானிகள், எத்தனையோ மஹான்கள், எத்தனையோ அவதாரர்கள் ஆகிய இவர்கள் சரித்திரங்களை படித்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம் ஆனால் இவரைப் போல் "அண்டப்புளுகு" புளுகும் ஓர் வைத்திய மனிதரை பார்த்ததில்லையே? ஆனால் இவரிடம் எந்த மாயமோ, மந்திரமோ, சித்துக்களோ இருப்பதாக இது நாள் பரியந்தம் நாம் கண்டதும் இல்லை இவர் செய்வதைப் பார்த்ததும் இல்லை. இவர் சொல்லும் செயலும் இவரை ஓர் வைத்தியமாகத்தான் மதிக்கத் தோணுது. இவர் உலகின் வைத்தியமா? உண்மை வைத்தியமா? என கேட்கிறீர்களா?



உ

மிக்க நல்லது எம் செல்வஞானக் குழந்தைகளே!
உங்களுக்குச் சில விளக்கம் தருகிறோம். இல்லை இல்லை, இங்கும்
எமதய்யனே பதில் தருகிறான் உணருங்கள். இங்கும் ஓர் பொய்
யெனத் தான் தோனும். இறைவனாவது இவர் கேள்விக்காவது
விளக்கம் தருவதாவது? நம்மையே ஓர் **பைத்தியமாக்கி**
விடுவார் போலத் தெரிகிறதே என குழம்புகிறீர்களா?

**“குழம்பினால் தெளியலாம்”!** ஆனால்? பிறர்
**“குழப்பினால் தெளிய முடியாது”!**

அதாவது?

நீங்களாக குழம்பினால் தெளிந்து விடலாம்!
உங்களை ஒருவர் குழப்பிக் கொண்டிருந்தால் தெளிய முடியாது!
வெகு குழப்பமாக இருக்கிறதா இனி கீழே கவனிக்கவும்.

**கண்ணன்; எமதய்யன் வாசகம்”!!!**

அன்பான குழந்தைகளே! உலகின் நிலையில் பைத்தியம்!

1. சிரிக்கவும் செய்யும், அழவும் செய்யும்!
2. பேச்சில் அர்த்தம் இராது!
3. துணிமணிகளை கிழித்துக் கொள்ளும்!
4. எந்த இடத்திலும் படுத்துக் கொள்ளும்!
5. பந்தம், பாசம், உறவு, தெரியாது!
6. விபரம் தெரியாமல் திருடவும் செய்யும்!
7. தனக்கென சேமிக்கத் தெரியாது!
8. தெய்வநாமாவை சொல்லும்; உண்மையின் பிடிப்பு இராது!
9. கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும், அதன் உண்மை தெரியாது!
10. கண், காது, மூக்கு, வாய் செயல்படும்; ஆனால் அர்த்தம் இராது!

இப்படி பத்து நிலைகளில் ஓர் ஜீவன் இருந்தால் அது உலகின்
நிலையில் பைத்தியம் எனக் கொள்ள வேண்டும். இனி உண்மையின்
நிலையில் பைத்தியம் எப்படி என சொல்கிறோம் உணர்க.



உ

## உண்மையின் நிலையில் வைத்தியம்

1. அழுவதும் சிரிப்பதும் உண்மையின் உணர்வோடு இருக்கும்!
2. அதன் எந்த வார்த்தையிலும் உண்மையின் உள்அர்த்தம் இருக்கும்!
3. துணியின் அளவுகளை குறைத்துக் கொள்ளும்!
4. இறைவனின் திருப்தியில் எங்கும் படுக்கும்!
5. ஓர் மதம் ஓர் இனம் என அன்பின் பிணைப்பில் ஆட்படுத்தும்!
6. ஒன்றென்ற உணர்வில் எடுக்கும் கொடுக்கும், கருத்து ஒன்றுபடும்!
7. அனைத்தும் இறைவனுடையது என்ற காருண்யமும் உண்டு; அனைத்தும் நாமே என கருணையும் உண்டு!
8. தெய்வநாமத்தை அறிந்து சொல்லும், தன் உணர்வில் உணர்ந்து நிற்கும்!
9. கூர்ந்த திருஷ்டியில் அனைத்தும் நாமே என உணரும்!
10. கண், காது, மூக்கு, வாய் தம் கட்டுக்குள் அடங்கி இருக்கும்; அங்கு ஒன்றுக்கு அன்னியமில்லை!

இப்படி பத்து நிலைகளில் ஓர் சத்திய ஆன்மா இருந்தால் அது உண்மையின் வைத்தியமென உணரவேண்டும்! இதன் நிலையில் நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்று உங்களை நீங்களே சரி பார்த்துக் கொள்ளவும்.

அன்பான குழந்தைகளே!

உங்கப்பனாகிய எங்கப்பன் எப்படி எம்மை உணர்ந்தான் என சற்று சுருங்கச் சொல்லிவிடுகிறோம். இதை அவன் சொன்னால் அது தற்புகழ்ச்சியாகும்; இதை யாம் சொன்னால் அது அற்புத நிகழ்ச்சியாகும்.

**அவனும், யாமும் ஒன்றே!**

**சத்தியத்தில், அவனும், யாமும், நீங்களும், ஒன்றே!!**

இனி உங்கள் மறைமைய புலம்பலுக்கு அதாவது முதற்பக்கத்தில் உங்கள் புலம்பத்திற்கு சில விளக்கம் தருகிறோம். ஆனால் ஏற்பதும் ஏற்காததும் உங்கள் புத்தியின் சஞ்சலமா? உங்கள் அறிவின் கூர்ந்த திறமையா என்பதை நீங்களே முடிவு செய்யவும் ?????



உ

அன்பான குழந்தைகளே! **நீங்களும் இறைவனே,**

1. எப்படி என்றால் எம் மாயையில் நீங்கள் மயங்காத நிலையில்!
2. எப்படி என்றால் உறவு சுற்றத்தால் பற்றப்படாத நிலையில்!
3. எப்படி என்றால் குணதோஷங்களில் மயங்காத நிலையில்!
4. எப்படி என்றால் அனைத்து நாமரூபங்களும் மண் என்ற தன்மையில்!
5. எப்படி என்றால் அனைத்து காட்சிகளும் பொம்மலாட்டம் என்ற நிலையில்!
6. எப்படி என்றால் அனைத்து வார்த்தைகளையும் ஒலி அலைகள் என்ற நிலையில்!
7. எப்படி என்றால் உங்கள் மனமே கற்பனைகளை ஒழித்த நிலையில்!
8. எப்படி என்றால் நாம் ஜீவனல்ல இறைவன் குழந்தை என்ற நிலையில்!
9. எப்படி என்றால் நம் எண்ணத்தால் பிறப்பு, நம் மறப்பால் இறப்பு என்ற நிலையில்!
10. எப்படி என்றால் இறைவனே நாம், நாமே இறைவன் என்ற **உறுதியில்!**

இப்படி சுத்தப் பைத்தியக்காரத்தனமான மனோ உறுதியும், அதே நிலையில் உங்கள் அறிவுமயமாகி கலக்கம் பயம் அற்று விட்டால் நீங்களும் யாமும் ஒன்றே, **நீங்களும் இறைவனே!!**

அன்பான குழந்தைகளே! **நீங்களே பரம்பொருள்,**

1. எப்படி என்றால் நாம் மாயையை பற்றிய நிலையில் இறைவனுமே, சற்று கீழ் இறங்கி அவித்தை (உவகை) யால் பற்றப்பட்ட நிலையில் ஜீவனுமே, இவ்விரண்டையும் விட்ட நிலையில்!
2. எப்படி என்றால் இறைவன் மனக் கணக்கு, ஜீவன் வினை கணக்கு ஆக இவ்விரண்டையும் நீங்கள் விட்ட நிலையில்!
3. எப்படி என்றால் மாயை மனதின் மயக்கம், வினை நம் மனதின் நெருக்கம் என உணர்ந்து இவ்விரண்டையும் விட்ட நிலையில்!
4. எப்படி என்றால் இறைவன் சற்குண சொரூபம், நம் வினை துர்க்குண சொரூபம் என உணர்ந்து இரண்டையும் விட்ட நிலையில்!
5. எப்படி என்றால் மாயை மயக்கத்தால் வந்த விளையாட்டு, நம் வினை சொந்த, பந்த, பாச, உறவுகளால் வந்த கேடு என உணர்ந்து இந்த இரண்டையும் விட்ட நிலையில்!
6. எப்படி என்றால் உலகம் உடல் உறவு என்ற நிலையில் வினையை வளர்த்தேன், இறைவன் என்ற சொரூபத்தில் மாயை என்றதனை வயமாக்கினேன், இவ்விரண்டுமே சிப்பியின் வெள்ளியெனவும், கட்டையில் வந்த கள்வன் என உண்மை உணர்வில் உணர்ந்த நிலையில்!



உ

7. எப்படி என்றால் நாமரூப குணதோஷத்தால் உலகம் என்ற வினைக்கூட்டை உண்டுபண்ணினோம், நம்மையே மயக்கும் கற்பனைவழியில் இறைவனை உண்டுபண்ணினோம். பின்னைய இறைவனிடம் சேர்ந்தோம், இறைவனை எம்முள் ஆக்கியாம் அது ஆகிவிட்டோம் என்ற நிலையில்!

8. எப்படி என்றால் இறைவன் என்றமாயையோ, உலகம் என்ற அவித்தையோ மஹத்தான மனதின் விளையாட்டென, நாம் அது என உண்மையில் உணர்ந்த நிலையில்!

9. இறைவன் என்றமாயையும் இல்லை, உலகம் என்ற அவித்தையும் இல்லை, இதுயோகமாயையின் விளையாட்டென்று உணர்ந்தநிலையில்!

10. காலாதீத அந்த ஒன்றே தானேஇரண்டானது, ஒன்று சாட்சி ஆனது, ஒன்று விளையாடியது, விளையாட்டில் தானே பலவானது பின் அப்பலவும் இரண்டானது, அவ்விரண்டும் ஒன்றானது, அந்த ஒன்றும் இல்லையென்றாகிவிட்டது, எனவுணர்ந்த நிலையில்!

அன்பான குழந்தைகளே!

இப்படி வைத்தியக்காரத்தனமான மனோநாசனும் (மனம் மறத்தல்) அறிவு அந்த ஒன்றில் நிலைத்து அது ஆகிவிட்டால், இங்கும் உலக கலக்கமும், தெய்வமயக்கமும் நீங்கி நீங்களும் அந்தநிலை பெற்றுவிட்டால், **நீங்களே பரம்பொருள்!!**

எம் அன்பான மழலைகளே!

உங்கள் அன்புக்குரிய உங்களுக்குரிய "உங்கள் வைத்தியத்தந்தை" இப்படிப்பட்ட வைத்தியம் பத்தும் செய்யும் என்ற நிலையைப் பெற்றுவிட்டானே, "**யாம் என் செய்வோம்**" இதைஅவன் சொல்லக்கூடாது இறைவனாகிய யாம் சொல்வோம். பிரமாணமாகச் சொல்கிறோம். இப்படிப்பட்ட ஓர் ஸாதுவை இவ்வுலகில் அவ்வளவு எளிதில் காண முடியாது. எப்படி அத்வைதம் உலகில் பிரகாசிக்கவில்லையோ அப்படியே; இவனும் தம்மை வெளி உலகில் காட்டிக்கொள்ளாவண்ணம் தமக்குள்ளேயே சர்வத்தையும் லயமாக்கி தானும் லயமாகிவிடுவான். "இது கலியுகம்" இதில் இப்படித்தான் லயமாக வேணுமென்று பரம்ஹம்ஸர்களின் தீர்ப்பு. இது ஸத்யம் **கண்ணன்!**



உ

ஜீவன் :— அறியாமையினால் அதாவது தம் மனோகவனக் குறைவினால். இறைவன் ஒருவன் இருக்கிறான் என்று உணராமல் குணதோஷங்களினால் பாதிக்கப்பட்டு, நாம ரூபங்களில் மயங்கி தம் மனோமய கற்பனையினால் திரும்ப திரும்ப பிறக்கிறவன் ஜீவன்.

பக்குவ ஆன்மா :— பற்பல ஜன்மாவின் புண்ணிய விசேஷத்தால் மனுஷ்ய ஜன்மா கிடைத்து, ஒழுக்கத்தை கடைப்பிடித்து நிஷ்காமிய கர்மாவும், அதனால் நிஷ்காமிய பக்தியும் அதனால் வைராக்யமும் பெற்று இறை உணர்வோடு இருப்பவனே பக்குவ ஆன்மா.

பக்தன் :— பற்பல ஜன்மாவின் புண்ணிய விசேஷத்தால் மனுஷ்ய ஜன்மா கிடைத்து, ஒழுக்கத்தை கடைப்பிடித்து, நிஷ்காம்ய கர்மாவினால் பிரேமபக்தியை வளர்த்து ஸ்ரீ பகவத் தரிஸனார்த்தத்திலேயே ஒன்றியிருப்பவன் பக்தன்.

ஆத்மஞானி :— மேலே கூறிய அனைத்தையும் முறையோடு கடைப்பிடித்து, அப்பிரேமபக்தியினால் அந்த ஸ்ரீ பகவானிடம் மயங்காமல், அவனிடம் தம் ஜீவத்துவத்தை முழுமையாக ஒப்படைத்து ஸ்ரீ குருதேவரின் ஆசியினால் உலகமயத்தையும், தெய்வமயக்கத்தையும் முழுமையாக விட்டு நாம் ஆத்மாவே, நாமும் இறைவனும் ஒன்றே, நம் இறைவனும் நாமும் அந்த காவரநீத ஒன்றும், இக்ஷேத்ரமும் ஒன்றே என தம் ஸ்வய அனுபவத்தினால் உணர்ந்தவனே ஆத்மஞானி.

அவதார சொரூபி :— இது இறைநிலையாகும். இது தர்மம் மறைந்து அதர்மம் மேலோங்கும் போது தர்மத்தை காக்கும் நிமித்தம் அப்போதைக்கப்போது தம்மை தோற்றுவித்துக் கொள்ளும் ஓர் "மாயா சொரூபம்" அவதார சொரூபி.

அவதார புருஷன் :— இது குருநிலையாகும். இவ குறிப்பிட்ட இடங்களில் தம்மை ஓர் மனித வடிவில் தோற்றுவித்துக் கொண்டு, மாண்ட தர்மத்தையும் காப்பாற்றி பக்குவ ஆன்மா பக்தன் ஆத்மஞானி இவர்களுக்கு நிலை கண்டு வழிகாட்டி எந்த அற்புத சக்தியையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் தாம் வாழ்ந்து காட்டி, போதனை அதிகம் இல்லாமல்



உ

தம் அடக்கத்தால் அவர்களை அடங்கும் நிலை கூட்டுவித்து
வியாபாரம், விளம்பரம், படாடோபம் இல்லாமல்
எளிமை, இனிமை, பொறுமை, அன்பு, கருணை ஆகிய
இந்த ஐந்திணையும் மேலே சொன்னவர்களுக்கு மட்டும்
உண்மையை உணர்த்தி தம்மோடு இணைத்து கரைத்து
காலாதீத ஒன்றுக்கு வந்த "சத்திய சொரூபமாகும்".
ஆனால் ஓர் உண்மை என்னவென்றால் இது நேரடியாக
பரத்திலிருந்தே இறங்கும்; இரும்ப பரத்திலேயே
தம்மை மயமாக்கிக் கொள்ளும். இதனால் அனைத்து
வல்லப சக்திகளும் இறை ஆற்றலும் அடங்கும்
ஆனால் எக்காரணம் கொண்டும் அவைகளை வெளிக்
காட்டிக் கொள்ளாது. "அதுவே மஹாமௌனம்".

"இறை சொரூபம் அவதார சொரூபம்!
"குரு சொரூபம் அவதார புருஷன்"!!

"எம் ஞானக் குழந்தைகளே!
**நீங்கள் எம் "நிலை" பெற முடியாது தான்"!!!**
ஆனால்?
**"அது" ஆக முடியும்!!!**

"**நிலை**" என்றால் ஆற்றல்! "**அது**" என்றால் அமைதி! ஆனந்தம்!
"நிலை" என்றால் நாம் நாமே தோன்றும் "நிலை"!
"அது" என்றால் முக்காலமும் தோன்றாத பிரம்மானந்தம்
"நிலை" என்றால் பக்குவ ஆன்மாக்களை மட்டும் ரக்ஷிக்கத் தோன்றும்!
"அது" என்றால் எக்காலத்தும் ஒளியல்பாக ஆனந்தமாயிருக்கும்!
"நிலை" என்றால் தனக்குத் தானே ஆதாரம், ஆதரவு, ஆகாரமாயிருக்கும்!
"அது" என்றால் "அதுவே நாம் நாமே அது" என்ற ஒளியல்பாக இருந்து
சொல்வதற்கொன்றும் இல்லாததாயிருக்கும்!

**உண்டு** ஆனால் **இல்லை**!!!



உ

# குருவுக்கும் குரு!

எம் அன்பும் கருணையும் இணைந்த ஆத்மஸ்வரூபங்களே!

துவாபரயுகம் கடைசி, கலியுக ஆரம்பம் எம் கண்ணன் துவாரகையில் ஆட்சி செய்யும் காலம். ஓர்நாள் தம் உத்தம "சிஷ்யையான, புல்லாங்குழலான எம் "ராதையை" காண்பதற்காக மதுவனத்தில் அவள் ஆஸ்ரமம் வந்தான் எம் கண்ணன்.

ஓர் பர்ணசாலையில் சற்று உயரமான ஓர் பீடம் அமைத்து அதை "குருபீடம்" என்றநிலையில் சூட்டி வைத்து அதன் கீழ் தாம் ஓர் ஆசனமிட்டு தியானபரையாய் அமர்ந்திருந்தாள் ராதை. தேரில் வந்த கண்ணன் தேரை விட்டு இறங்கி அந்த ராதையின் ஆஸ்ரமத்தினுள் குனிந்து வந்தான். எம்பெருமான் வரவு கண்டு ராதை எழுந்து வணங்கினாள். பின் கண்ணன் மலரடிகளில் திருத்துழாயை போட்டு மண்டியிட்டு வணங்கி

ராதை:— ஓம் ஸ்யாம்! துவாரகாதீசனே கண்ணா! எம் பிரபுவே! உன் பாதாரவிந்தங்களில் அனைத்தையும் சமர்ப்பிக்கிறேன். உன்னையல்லால் வேறு கதியில்லை, "எல்லாம் நீயே" அஞ்சலியஸ்தையாய், கண்ணீர் குளமாக நெகிழ்ந்து வரவேற்கிறாள் ராதை.

கண்ணன்:— உருக்கத்துடன் எம்மைக்கவர்க்கும் "தாரா" (தாரா என்றால் ராதா. தாரா என்றால் அன்பின் உருக்கம்) உன் பொற்பாதங்களில் அடியேனின் நமஸ்காரங்கள் என ராதையின் திருவடிகளில் வீழ்ந்து அவள் திருவடித் தூளியை எடுத்து தம் சிரமேல் வைத்துக்கொண்டு, "அம்மா நவமா" ???

ராதை:— எம்பிரபுவே! இது என்ன பழக்கம்? யார் திருவடியில் யார் விழுவது என்றே கணக்கில்லையா? ஆனால் உன் நிலையில் உபசாரமும் அபசாரமும் ஒன்றே! ஆனால் இதை உலகம் அறியாது. அனைத்தும் நவமே; அனைத்தும் சுகமே!



## உ

ராதா:— எங்கே இத்தனை தூரம்? உனக்கு உன் ராஜ்ய பாரமே சரியாக இருக்குமே! இங்கு இவ்வேழையைத் தேடி வந்ததன் நோக்கம் என்ன என்பதை தெரிந்து கொள்ளலாமா?

கண்ணன்:— அம்மா! இந்த கடையேறிய இடையன் வேறு எதற்காக வரப் போகிறேன்? பக்தாளின் தரிசனம் பாப விமோசனம். எம் இந்த அவதாரமே துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம். யாம் கர்மா சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும் கர்மா சம்பந்தப்பட்டவர்களை அவர்கள் கர்மாவால் அழித்ததால் அந்த கர்ம பாபங்கள் எம்மை தொடமுடியாமல் ஆனாலும் எம்மைத் தொடர்கின்றன. அதற்கு ஓர் போக்கிடம் காட்ட வேண்டுமே. அதற்காகவே உன் போன்ற ஸ்ரீ மஹான்களையும் ஞானிகளையும் யாம் தானே தேடி வர வேண்டும்?

எம் பார்வையில் ஒட்டாமல் எம்மையின் தொடரும்!
அவை உன் பார்வையில் (ஆனால்) அனைத்தும் சாம்பலாகும்!
ஸ்ரீ மஹான்கள் கூட்டங்களை விரும்புவர்!
ஓர் ஞானியை கூட்டங்கள் அண்டா!
எப்படி யென்றால்?
ஸ்ரீ மஹான்களுக்கு கூட்டங்களோ பரோபகாரம்!
ஓர் ஞானிக்கு தனிமையே தன்னுபகாரம்!

ஓர் ஞானிக்கு பரோபகாரம் என்ற கர்மா இல்லை! ஆனாலும் தன் நாட்டத்திலேயே நவமாக இருக்கப்பட்ட ஞானியின் தேஜஸ்தாமாக செயல்பட்டு பிறருடைய பாபங்களை சுத்திகரிக்கும். ஸ்ரீ மஹான்களுக்கு தம் சக்தியினால் நிலை கண்டு இடம் கண்டு, பொருள் கண்டு பிறருடைய பாபங்களை போக்கிறதால்தான் கூட்டம் சேரும். ஞானிகளுக்கு அவர்கள் நிழல் போல் அவர்களிடம் ஒட்டாமல் தனித்திருக்கும் அவர்கள் சக்தி. ஆனால் ஸ்ரீ மஹான்களுக்கு அவர்கள் உடையைப் போல் அவர்களுடனே இணைந்து இருக்கும் அவர்கள் சக்தி! ஓர் ஞானியின் சக்தி



உ

கண்ணன்:- சூரிய ஒளிக்கு சமம். ஸ்ரீ மஹான்களின் சக்தி அக்னி
யின் ஒளிக்கு சமம்.
சூரிய ஒளியில் என்றும் எவ்வும் தீமையில்லை!
அக்னி ஒளியில் நிலைகண்டு பொருள் கண்டு இடம்
கண்டு ஓரளவு தீமை உண்டு!
ஆகவே எம்மாதாவான ராதா! யாம் ஞானிகள் உன்னை அண்டி
வந்தோம். யாம் வந்த காரியம் முடிந்துவிட்டது. உன்
ஸ்ரீ பாதஸ்பரிசனமும் உன் பார்வையின் தரிசனமும்
பெற்று விட்டோம் இனி வருகிறோம்!

ராதா:- எமக்கு இருப்புத்தன்மையை கொடுத்த எம் கண்ணா!
உன்பாதத்திலே ஒட்டி இருக்கும் இத்தாசிக்கு நீயே
இத்தனை மதிப்பு கொடுக்கிறாயா? உன் திருவடி அன்றி
இவ்வேழைக்கு போக்கிடமேது? ஆதியிலிருந்தே
எம்மைத் தனிக்க வைத்தே எம்மை உயர்த்திவிட்டாயே!
உயர்வும் தாழ்வும் ஒன்றே, அது உன் திருவடி ஒன்றே
புகலிடம். ஆமாம் நீயோ புவி ஆளும் சக்ரவர்த்தி
ஆயிற்றே? செங்கோல் ஏந்தும் கைகளில் பழைய
புல்லாங்குழல் எதற்கு?

கண்ணன்:- கடகடவென சிரித்தான் இக்குழல் உனக்கு
அத்தனை ஏளனமாகத் தெரிகிறதா?

ராதா:- அபசாரம் அபசாரம் யாம் அந்த நிலையில் சொல்ல
வில்லை. உலகை ஆளும் சக்ரவர்த்தியாயிற்றே! இப்போ
து அக்கரம் செங்கோல் பிடிக்க வேண்டுமே வெறும்
புல்லாங்குழல் தாங்கி இருக்கிறதே என உன் நிலையை
உயர்த்திச் சொன்னேன்! அக்குழலைத் தாழ்த்த முடியு
மா என்ன? அது சாமான்யப்பட்டதா என்ன? இதை
வைத்துத்தானே உலகையெல்லாம் ஆட்டுவைக்கிறாய்
இந்த ரகஸ்யம் அடியாள் புரியாததா?

கண்ணன்:- அது சரி இங்கு நீ தனிமையில் இருக்கிறாயே சத்சங்கம்
சாதுக்கள் சேவை என ஏதேனும் உண்டா? இல்லையேல்
ஏகாந்தமே பேரானந்தம் என இருக்கிறாயா?

ராதா:- ஏ கண்ணா! தனிமையில் இருந்தால் தானே ஏகாந்தம்? இங்கு
இருவர் இருக்கிறோமே பின் எப்படி அது ஏகாந்தமாக முடியும்?



## உ

ராதா:— யாம் இருவராக இருப்பதால் ஸத்சங்கமும் உண்டு ஸாது சேவையும் உண்டு!

கண்ணன்:— என்ன ராதா புதிர் போட்டு பேசுகிறாய்? உன் ஸத்சங்கத்திற்கும் ஸாது சேவைக்கும் உரியவர் யார்? இங்கு அப்படி எவரும் தென்படவில்லையே?

ராதா:— நமக்கு முன் வைத்திருந்த சற்று உயர்ந்த பீடத்தை காட்டினாள். இதுவே அந்த "ஸாதுமஹாத்மா" இதுவே சத்சங்கமும் ஆகும் சாதுசேவையுமாகும்!

கண்ணன்:— குருமணியான எம் ராதா! இதை முன்னதாகவே சொல்லியிருக்கக் கூடாதா? என உரைத்துக்கொண்டே அப்பீடத்திற்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான். பின் எங்கு இந்த பீடத்தின் ரகஸ்யம் என்னவோ?

ராதா:— அப்பீடத்தில் மேலுள்ள புஷ்பம் திருத்துழாய் இவைகளை பவ்யமாக எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டுவிட்டு அப்பீடத்தின் மேல் உள்ள அங்கியையும் அகற்றினாள் அங்கு ஓர் ஆஸனப்பலகைமேல் ஓர் வேலைப்பாடுள்ள மரப்பெட்டி இருந்தது.

**இதுவே எம் குருபீடமாகும்!!!**

எம் ராதா இதை சொல்லும் போதே நெக்குருகி கரைந்து பாகாக ஆகிவிட்டாள் - - - - - - - - - - - - - -

இதை சற்று உணர்ந்து மேலே செல்லவேண்டியுள்ளது

எம் கண்ணன் தம் பக்த வாத்ஸல்யத்தால் கரைந்து உருகிப் போன பாகை ஒன்று திரட்டினான் அது ஓர் உருவமானது அது தான் **தாரா** என்ற உருவே **ராதா!!!** ஆனது.

எம் கண்ணன் அப்பேழையை அதி கவனமுடன், அதிசிரத்தையுடன் அதிக கனிவும் பணிவும் இணைந்தவனாய் இருகரம் கொண்டு இலேசாக திறந்தான். அங்கே அவன் கண்ட காட்சி எம்மையே மெய் சிலிர்க்க வைக்கிறது. அது என்னவென்றால்

**எம்பெருமானின் பழையபாதுகை!!!**



## 2
## பழைய பாதுகை!

எம் கண்ணன் குழந்தையாக எம் ராதாவுடன் பிருந்தாரண்யத்தில் விளையாடிக்கொண்டிருக்கிறான். மற்றும் கோபால சிறுவர்களும் உண்டு. கம்சனால் அனுப்பப்பட்ட ஓர் அரக்கன் பெயர் சங்ககூடன் கண்ணனை கொல்ல எண்ணம் கொண்டு அக் கோபால சிறுவர்களில் ஒருவனாக வேடம் தரித்து வந்தான். அந்த அசுரனை இவன் இன்னார் என தெரிந்து கொண்ட மாதவன், ஓர் சூழ்ச்சி செய்தான். அந்த விளையாட்டானது ஒருவன் குதிரை போல் இருந்து மற்றவனை சுமந்து கொண்டு ஓர் குறிப்பிட்ட எல்லை வரை சென்று திரும்ப வேண்டும். இதில் எம் கண்ணன் அந்த அசுரனாகிய கோபாலனை தேர்ந்தெடுத்துக் கொண்டான். அவனும் இதுதான் கண்ணனைக் கொல்வதற்கு நல்ல சந்தர்ப்பம் என எண்ணி, நம் கண்ணனை தோளில் தூக்கி வாறான். அதுசமயம் கண்ணன் காலில் அணிந்திருந்த பாதுகை இரண்டும் ஓர் ஓரமாக கண்ணனையே எண்ணி எண்ணி கண்ணீருடன் அமர்ந்திருக்கும் அந்த ராதாவின் மடியில் விழுந்துவிட்டது!

இதை ராதை அறிந்து உணர்ந்தாள்! ஆனால்?

எம் மாயக்கண்ணனை அறியாதவன் போல் இருந்தான்!!!

அந்த அரக்கனும் கண்ணனைச் சுமந்து சென்றான். சற்று தூரம் சென்றதும் அவன் தன் கோர ஸ்வரூபத்தை எடுத்தான். நம் கண்ணனும் தன் முஷ்டியால் ஒரே அடி அடித்தான். அரக்கன் ரத்தம் கக்கி மாண்டான். கண்ணன் கோபால சிறுவர்கள் இருப்பிடத்திற்கு வந்தான். எம் ராதாவை கண்டான். அப்பாதுகையை கொடு எனக் கேட்க இல்லை ஆனால் ராதாவை ஓர் கேள்விமட்டும் கேட்டான்:— இப்பாதுகை உனக்கெதற்கு என்றான் அவள் சொன்னாள்: **கொடுப்பது உன் கருணை!**

அதை ஏற்பது **எம் சிரத்தை** என்றாள்.



## உ

கண்ணன் மெய் சிலிர்த்துப் போனான். அவனே ஓர் ஸ்த்ரீதான்! அவள் என்ன செய்கிறாள் என அவள் அறியாமல் அவளை கண்காணித்தான். அப்பாதுகை இரண்டையும் இரு கரங்களாலும் தாங்கி தம் சிரசின் மேல் பிடித்தபடி யாரும் அறியாமல் அந்த பிருந்தாவனத்தில் மரங்கள் அடர்ந்த பகுதியில் ஓர் கடம்ப விருக்ஷத்தில் ஓர் பொந்தில் தம் சேலைத் தலைப்பை கிழித்து வைத்துவிட்டு அதையே ஆசனமாகவும் மேலும் கவசமாகவும் போட்டு அதை மண்டியிட்டு வணங்கி **"ஹே குருதேவா"** என ஸ்மரித்தவண்ணம் கண்ணருவி பெருக்கெடுத்தோட தினமும் வணங்கி வந்தாள்.

இதில் ஓர் ரகசியம் என்ன வென்றால் தினமும் எவரும் அறியா வண்ணம் அங்குசென்று அப்பாதுகையை மெதுவாக எடுப்பாள்; "நடந்த நிலையில் பாதுகையில் **"தூசி"** எப்படி ஒட்டுகிறதோ அதே நிலையில் அப்பாதுகையில் தூசி ஒட்டியிருக்கும்.

**"இது அதன் கருணை"!**

அப்பாத தூசியை தம் கரங்களில் தடவி அவற்றை அதிக பணிவுடனும் கனிவுடனும், அதிசிரத்தையுடனும் தம் சிரம் மேல் தடவிக் கொள்வாள். பின் அப்பாதுகையை தம் சேலை தலைப்பால் துடைப்பாள் அதை அதன் பீடத்தில் (மரப்பொந்தில்) வைத்து விட்டு சில புஷ்பங்களையும் திருத்துழாயையும் மேலே வைத்து வணங்குவாள். பின் அப்புஷ்பங்களில் ஒன்றையும் திருத்துழாய் இரண்டு இலைகளையும் பணிவாக எடுத்து தம் சிரசில் தரித்துக் கொள்வாள். பின் அத் திருத்துழாய் சில எடுத்து தம் வாயில் போட்டுக் கொள்வாள். அது ஜன சஞ்சாரமில்லாத இடமாக இருப்பதால் தியானத்தில் அமர்வாள். சில சமயம் மெல்லிய குரலில் கண்ணனின் இனிய கீர்த்தனைகளை பஜனையாக கைத்தாளம் போட்டவண்ணம் செய்வாள். இதுதான் எம் ராதாவின் பிருந்தாவனத்தில் நித்யபூஜை நித்ய கைங்கர்யம்.



2

காலத்தின் வேகத்தால் கண்ணன் மதுரா சென்றான் பின் துவாரகையை நிர்மாணித்து துவாரகாதீசன் ஆனான். நம்ராதையும் பிருந்தாவனத்தை விட்டாள். மதுவனத்தில் பிரவேசித்தாள். அங்கு ஓர் குடிசையைப் போட்டுக் கொண்டு ஓர் மரப்பலகையின் மேல் ஓர் மரப்பெட்டி ஒன்றை வைத்து அதனுள் இப்பாதுகையை எழுந்தருளப் பண்ணி

**"நித்திய குருபூஜை செய்து"**

நம் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய

**"ஸத்குரு, ஸ்ரீமத் க்ஷேத்ராச்சார்யருக்கும்!!"**

ஸத்ய தெய்வம்;
நித்ய ஸத்குரு;
பரத்தின் ரூபம்;

**"அப்பாதுகையே!!!"**

பல காலங்களுக்குப் பிறகு இன்று கண்ணன் கண்டான். அவன் கண்களும் குளமாயின. அக்கண்ணீரின் குளம் மறுகால் ஓட எத்தனித்தது. எம் கண்களிலும் நீர் ஊற்று ஓடி விட்டது. கண்ணனின் கண்ணீர் கீழே பட வாகாது என சமீபம் இருந்த எம் ராதா தம் சேலைத் தலைப்பால் துடைத்தாள். அவன் முகத்தில் பேரானந்தப் பெருக்கினால் ஏற்பட்ட வேர்வைத் துளிகளையும் எம் ராதா துடைத்தாள்.

எம்பெருமானும் தம் பீதாம்பரத்தால் எம் கண்ணீரையும், வியர்வையையும் துடைக்கிறான் சந்தோஷமாகவும் எம்பிரபு ஆகிய கண்ணனும் அப்பாதுகையை இருகரம் கொண்டு எடுத்தான்.

மேலும் வந்த இருகரங்களாலும் நவரத்ன சகிதமான மகுடத்தை கழற்றினான்.

பாதுகையை எடுத்த கரத்தால் அப்பாதுகைகளை தம் சிரசில் லேசாக தட்டினான்.

**திருபாததூளிகையை தம் சிரசில் ஏற்றான்!!!**



உ

என்னடா இந்த வைத்தியக்கார அப்பன் இப்படியும் கதை அளக்கிறானே என பார்க்கத் தோணுதா? கேட்கத் தோணுதா? நீங்கள் எப்படி பார்த்தால் என்ன கேட்டால் என்ன? சிரித்தால் என்ன? யாம் என்றென்றும் வைத்தியம் தானே???? இது வரிவடிவின் கதை யென்றால் வெறும் கதைதான்!

தற்காலிக உண்மையின் நிமித்தமும் தெய்வீகமும், பரமும் இணையும் ஓர் அற்புத நிகழ்ச்சியாக "**கருத்துடன்**" மேல் நோக்கிய "**மனமே**" பாவனை செய்தால், நீங்களும் அனுபவிக்கலாம்!!

இயலவில்லை யென்றால் அது வாஸனையின் பிடிப்பு என உணருங்கள்
இல்லையாயின்?

நீங்கள் எம்மிலும் அந்த நிலையில் (அத்வைதத்தில்) லயித்திருந்தால் இது முடியாதுதான்.

எம் நிலை இன்னமும் உயரவில்லையே!!

யாம் இன்னமும் ஓர் வைத்தியமாகத்தானே இருக்கிறோம்!

"**பழைய பாதுகை**" நிலை சம்பூரணம்!

இனி கதைக்கு வருவோம்! சிரிப்பாக இருக்கிறதா? இன்று இப்வைத்தியம் வெகுசுவாரஸ்யமாக கதை அளக்கிறது. நாமும் கேட்டுத்தான் பார்ப்போமே என சற்று ரசித்து கேளுங்கள்! பின் தெளிந்து கேளுங்கள்! பின் உணர்ந்து உருகுங்கள்! பின் எம்மோடு கலந்து மயமாகுங்கள்! அப்புறம் பாருங்கள் வேடிக்கையை???

நீங்களும் இல்லை! இதை சொல்லும் யாரும் இல்லை! கதாநாயகன் கண்ணனும் இல்லை! கதாநாயகி ராதாவும் இல்லை!" யென்றாகிவிடும்! "ஒன்றுமே இல்லை ஆனால் ஒன்றுண்டு" என்றாகிவிடும்!

கண்ணன் புறப்பட்டான். எம் ராதா தடுத்து நிறுத்தினாள். இப்போது ராதா பேச்சில் ஓர் தெளிவு ஏற்பட்டது.

ராதா :- ஹே மாயக் கண்ணா! மாட்டுக்காரன் போல் குழலை கைகளில் மாற்றி மாற்றி பிடித்து ஆட்டிக் கொண்டே செல்கின்றாயே. அக்குழலை ஓர் நாள் எம்மிடம் கொடுத்து மறுநாள் வாங்கிக் கொள்ளேன்? ஏன் பயமாக இருக்கிறதா? இவள் புதிய ராதாவா அல்லது பழைய ராதாவா



உ

என எண்ணத் தோணுகிறதா? யாம் என்றென்றும் உன் பழைய ராதாதான். நீதான் மாட்டுக்காரனாக இருந்தாய்? இப்பொழுது மஹாராஜா ஆகி விட்டாய்?

கண்ணன் :— கடகடகடகடவென சிரித்தான். உன்மையாட்டமா இருந்த ராதாவா இப்படி பேசுவது?

**யாம் எதை மேய்க்கிறோம்?**

**யாம் எதை ஆளுகின்றோம்??**

என உனக்குத் தெரியாதா என்ன? இதையும் யாம் உனக்கு சொல்லித்தான் தெரியவேண்டுமா?

ராதா :— உன் இருமையால் யாம் உணர்வதும் உரைப்பதுவும் இதுதான் குற்றம் குறை தோன்றின் எம்மை மன்னிப்பாயாக

அறியாமையின் ஜீவர்களை போகங்களை கொடுத்து மேய்க்கின்றாய். உன்னை அறிந்த ஜீவர்களை உக இனிமையை தந்து ஆளுகின்றாய். உன்னையும் தம்மையும் ஒன்றாக உணர்ந்து **"அது"** ஆனவர்களுடன் கலந்து மயமாகின்றாய்! இதுதானே உண்மை எம் ஸ்யாம்?

கண்ணன் :— எம் அன்னையாகிய **நைஷ்டிக பிரம்மச்சாரிணியே!** உன் பத்மபாதங்களுக்கு இவ்வெளியேனின் கோடானு கோடி நமஸ்காரங்கள். உன்மொழி சத்யமே. அது சரி உன் நிலைக்கு இந்த குழல் எதற்கு? எம் நாடகத்திற்கு இது தேவை. நீ நடிப்பை விட்டவளாயிற்றே?



௨

ராதா:— உன் குழல் எமக்கெதற்கு? உலக ஜீவர்களை ஆட்கொள் குழலாம் எமக்குத் தேவை இல்லை. ஆனாலும் அதன் ரகஸ்யம் என்ன என தெரிய ஒருநாள் கொடுத்தால் போதும்? மறுநாள் வந்து நீயே வாங்கிக்கொள்.

கண்ணன்:— நல்லது ராதா நாளை வந்து கேட்டால் குழலை கொடுத்து விடவேண்டும்? உன் விளையாட்டுத் தனமாக அதை ஏதும் செய்திடாதே! இல்லாமல் பண்ணி விடாதே!

ராதா:— என்ன பயம்? அப்பப்பா? உன் குழல் எமக்கெதற்கு? யாம் என்ன அதை விழுங்கி விடுவோமா? அல்லது சமைத்து சாப்பிட்டு விடுவோமா? என்றாள் கண்ணனும் அக்குழலை ராதாவிடம் கொடுத்தான். அவளும் அதை வாங்கி தம் ஸ்ரீ குருபீடத்தின் மீது அதி பணிவாக பவ்யமாக வைத்தாள். கண்ணனும் சென்றுவிட்டான். மறுநாள் அதே நேரத்திற்கு வந்தான் எம் கண்ணன்:- ராதா எம் குழல் எங்கே?

ராதா:— கண்ணா வர வேண்டும் வந்ததும் வராததும் குழல் ஞாபகம் தானா? அதோ இருக்கிறது எடுத்துக்கொள்.

கண்ணன்:— ஏன் ராதா நீயே உன் கைகளால் எடுத்துக் கொடுக்கக் கூடாதா? எடுத்துக் கொடேன்.

ராதா:— குருபீடத்திற்கு நமஸ்காரம் செய்தாள். பவ்யமாக குழலை எடுத்தாள். கண்ணனிடம் கொடுத்தாள்

கண்ணன்:- குழலை ராதாவின் கரத்திலிருந்து வாங்கினான். அதன் நிறம் மாறி இருந்தது. குழல் பாரமும் சற்று குறைவாக இருந்தது. எம் கண்ணன் திகைத்தான். ராதா! இதை என்ன செய்தாய்?

ராதா:- யாம் ஒன்றும் செய்யவில்லையே நேற்று வைத்த குழல் அதில் அப்படியே இருந்தது! இன்று நீ தான் அதை இப்போது தான் வாங்குகிறாய். என்ன ஆயிற்று உன் குழலுக்கு?

கண்ணன்:- தம் கொவ்வைச் செவ்வாயில் வைத்து குழலை ஊதினான் அதில் நாதம் வரவில்லை! காற்றுத்தான் வந்தது! புல்லாங்குழல் அடுப்பூதும் குழலாக மாறி விட்டது போலும்? கண்ணன் திகைத்தான். ராதா சிரித்தாள். என்ன கண்ணா உன் மாயை என்னாயிற்று என பணிவும் கனிவும் கருத்து பொதிந்த பார்வையுடனும் கேட்டாள்?



உ

கண்ணன்:— ஹே ராதா! இது இப்படி செயலற்று போய்விட்டால் யாவும் செயலற்று போய் விடுவோமே! யாம் வந்த காரியம் இன்னமும் பூர்த்தியாகவில்லையே?

ராதா:- ஏ கண்ணா! நீ ரட்சகன் என்ற நிலையில் இருக்கிறாய்! ஆனால் யாம் உன் கிருபையால் (கீதாச்சார்யன் கிருபையால்) யாம் யாமாக (குருஸ்தானத்தில்) இருக்கிறோம். ஆகவே அதை எம்மிடம் கொடுத்ததால் அதுவும் தம் மாயையை இழந்துவிட்டது! இனி அதன் கருணையால் தான் அதற்கு அதன் சக்தி வர வேண்டும். நாம் இருவருமே அதனிடம் பிரார்த்திப்போம் என்றாள். இருவருமே இணைந்து பிரார்த்தித்தார்கள். அக்குழல் பழைய நிலைக்கு வந்துவிட்டது.

எம் ராதை கண்ணனின் திருவடிகளில் விழுந்து அதை கெட்டியாக பற்றிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். எம் கண்ணன் அவளை இருகரம் கொண்டு தூக்கி உச்சி மோந்து முத்தமிட்டான். என்ன ராதா ஏன் இந்த தேம்பல் என்றான்?

ஹே பிரபோ! ஹே தயாநிதி! ஹே தயாசாகரா! ஹே கருணாநிதே! நின் கண்டு உன் பக்த வாத்ஸல்யமும், பொருள் கண்டு உன் குரு கிருபா சாகரமும், எம்மை கரைத்து உன் ஜோதி மயமாக்கியதை உணரும் போது!!! - - - - - - - - - - -

உன் பாத தாஸியாக இருந்த எம்மை பரிவோடு எடுத்து நவரத்தினமாக்கி உன் திருமுடி மண்டலமாகிய மகுடத்தில் சூட்டிக் கொண்டாயே!! **இங்கு என்ன தகுதி இருக்கிறது???** அவளால் பேசமுடியவில்லை. அதை இந்த பைத்தியத்தால் எழுத முடியவில்லை - - - - - - - !!!

**"ராதா, தாரா ஆனாள், தாரா குரு"** ஆனாள். மெய்மாறனாள், இல்லை என ஆகி விட்டாள்.

எம் பைத்தியக்கார குழந்தைகளே! நீங்களோ ராதா. யாமே கண்ணனாகிய கீதாச்சார்யன். நீங்கள் தாரா (உருக்கு) பெறுங்கள். அங்கு குருவுக்கும் குரு ஆகலாம். ஆச்சரியமாக இருக்கிறதா சீக்கிரம் ஆக்கிவிடுவோம் (குரு ஆக அல்ல அதுவாக) //



# குருபீடம் உணர்த்துவதாவது!

எம்மழலை ஞானச் செல்வங்களே!

குருபீடம் என்றாலே அது திருவடியின் பீடம் எனப் பொருள் படும். திருவடி என்றாலே **"பாதுகை"**! இதை பாதுகை என்றாலே உள் அர்த்தம் "பாது காக்கப்பட்டதை" எனப் பொருள்படும். இங்கு கை எப்படி பாதுகாக்கும் என கேள்வி வரலாம். அதை "நம்பிக்கை" எனப் பொருள் கொள்ள வேண்டும். ஆக இதை பாதுகாப்பாக இருக்கும் இடம் என்றும் அதற்கு நம்பிக்கை வேண்டுமென்றும் தெரிகிறது. அப்படியானால் ஓர் ஜீவனுக்கு பாதுகாப்பாக இருக்கும் இடம் திருவடியெனத் தெரிகிறது. ஆகவே இங்கு இறைவன் திருவடியை காட்டி யாம் இருக்கும் பயம் வேண்டாம் என அபயஸ்தம் கொடுக்கிறான். ஆனால் குரு திருவடியை கொடுத்து ஜகத்தோ, ஜீவனோ, ஈசனோ அனைத்துதோற்றமும் பொய் ஆனால் அதன் உட்பொருள் ஒன்றே மெய், ஆக இந்த மெய் உணர்வை பெறுவதற்கு

எம் திருவடியைப் பற்று அது உன் மும்மலங்களையும் வடிகட்டி சுத்திகரித்து உன்னை அந்த ஒன்றுடன் இணைந்து கலந்து மயமாக்கிவிடும் என்கிறது. மற்றோர் முறையில்?

எம் திருவடியைப் பற்றும் பாக்கியம் இல்லையாயின் எம் பாதுகையை பற்று, அது உனக்கு "நம்பிக்கையும்" கொடுக்கும் பாதுகாப்பாகவும் இருக்கும் என உணர்த்துகிறது. பாதுகாக்கும் கை (பாதுகை) எனச் சொல்வது ஓர் கோழி தன் குஞ்சுகளை தன் இறக்கைகளுக்குள்ளாக பத்திரமாக வைத்துக்கொண்டு அஞ்ஞான குளிர் ஆட்டமாயும் பாதுகாக்கிறது! விஷயாதிகள் என்னும் பருந்திடமிருந்தும் பாதுகாக்கிறது!!

இதைத்தான் அன்பர்கள் சொல்லும் போது,

## பாதத்தை பற்றினால் பாதகம் இல்லை!!!

என்றார்கள் அனுபவ ஞானிகள்.



உ

மேலும் இத்தலைப்பு "குருவுக்கும் குரு" என அமைந்திருக்கிறது. இதை ஓர் நிலையில் கவனித்தால் ஜனகாதி யோகிகள் நால்வர். இந்த நால்வரும் எங்கு அமர்ந்து ஞான விசாரணை செய்தாலும், ஒருவர் உயர்ந்த பீடத்தில் அமர்ந்து உண்மை கருத்தை வெளியிடுவார். மற்றையோர் மூவரும் அடக்கமாக கீழே அமர்ந்து அக்கருத்துக்களை சிரத்தையாக கேட்பார்கள். பிறிதொரு இடத்தில் வேறொருவர் அந்த உயர்ந்த பீடத்தில் அமர்ந்து பாடம் நடத்துவார். ஏனையோர்கள் அவருக்கு கீழே அமர்ந்த பணிவுடன் பாடங்களை கேட்பார்கள். இதனால் அந்த நான்கு பேர்களும் "குரு" ஸ்தானம் வகிக்கிறார்கள். ஆகவே இங்கு குருவுக்கும் குரு என்றே, இங்கு வார்த்தை அளவில் இரண்டு குரு வருவதை காணலாம். எந்த குரு பாடம் நடத்துகிறாரோ அவர் குருவே. மற்றவர் சிஷ்யனே. ஆகவே இங்கு

"குரு நிலை இரண்டாகத் தோற்றும், ஆனால் உணரும் நிலையில் குரு ஒருவரே!"

இங்கு நடந்த உரையாடல்களிலும் அனைத்து நாட்களிலும் கண்ணனும் ராதாவும் தான் இடம் பெறுகின்றனர்

"கண்ணன் கீதாச்சார்யன் என்ற நிலையில் ஓர் ஸத்குரு"

"ராதா நைஷ்டிக ப்ரம்மச்சர்யம் அனுபவித்து எம் கண்ணனின் அனுபவத்தை பெற்ற தன்மையினால் அவளும்"

**"ஓர் ஸத்குரு தான்"**

ஆனால் ???

இந்த வைத்தியம் ஸத்குரு ஸ்தானத்திற்கு வாய்க்கவில்லை. இதெல்லாம் கண்ணனின் வாசகமே:- அவனே சொன்னான் நீ ஸத்குரு ஸ்தானத்திற்கு வாய்க்கவில்லை. காரணம் உன்னிடம் "கண்டிப்போ தண்டிப்போ" இல்லாதது தான் என்றான். ஆனால் இந்த வைத்தியம் புராணம் புருடு, புராணம் புருடு, என உங்களுக்குச் சொல்லிக் கொண்டே கட்டுக்கட்டாக நிறைய பொய் கதையைத்தான் எழுதியும் பேசியும் வந்திருக்கிறேன். ஆனால் இங்கு பொய்யை உணர்ந்தாலும் பொய் ஓடி விடும். மெய்யை உணர்ந்தாலும் மெய் நின்று விடும்!



உ

யாமோ ஓர் வைத்தியம் இதற்கு எங்கும் வைத்தியம் இல்லவே இல்லை. யாம் எதைச் சொன்னாலும் நீங்கள் நம்பியே தீர வேண்டும்; அது உங்கள் தலை விதி! சொல்வது தான் சொல் இதோ ஓர் இனிமை பாடலை பாடிக் கொண்டு சொல்லலாமே என ஆரம்பிக்கிறோம். அதிகமாகச் சொல்லி உங்களை சலிக்க வைக்கவோ திகைக்க வைக்கவோ மாட்டோம். அந்த இனிமை பாடலாவது!

"பைபையாய் பொன் பெற்றோர்;
பொய் பொய்யாய் சொன்னாலும்;
மெய் மெய்யாய் போகுமடா.
குதம்பாய் மெய்மெய்யாய் போகுமடீ!!!"

யாம் பொய்யனோ மெய்யனோ யாம் அறியோம்?
யாம் எந்த பொன்னை வைத்திருக்கிறோமோ அறியோம்?
கதை எல்லாம் பொய், கருத்தே மெய் எனவும் அறியோம்?
ஏன் இப்படி அலம்பிக் கொண்டிருக்கிறோமோ அறியோம்?
நமக்கும் ஓர் கூட்டம் இருக்கிறதா எனவும் அறியோம்?
இக்கூட்டம் எதிலும் ஒட்டாதே என சிரிக்கின்றோம்!
நம் கூட்டம் பண்பட்டுவிட்டதென சிரிக்கின்றோம்!
இனி எதிலும் மயங்காது என முடிவுடன் உணர்கின்றோம்!
நம் கூட்டத்தின் சாதனை அனேகமாக முற்றும் பெற்றதென உணர்கின்றோம்!

**மனமற்ற மோன நிறைவுடன்**
**இந்த இதழை முடிக்கின்றோம்!!!**

அனைவரும் அது ஆகவே திகழ்கின்றீர்கள்.
இக்கலியின் கோரப்பிடியிலும் உங்கள்
இந்த சாதனை தேவலோகம் போற்றக்கூடியதே!
அதுவே யாம்; யாமே அது; அது நீயே! இது சத்யம்! சத்யம்! சத்யம்!

பாபா



ஸத்யம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஓம் பூர்ணவைராக்யத்துடன் பரமனே விளையாட்டு!!

எம் தவசீலர்களாகிய!

ஞானக்குழந்தைகளே! உங்கள் அகத்தினில் மனநிறைவும் ஆத்ம சுகமும் பெறுவீர்கள் என ஆசி கூறி வாழ்த்துகிறோம்! நவராத்திரியான இன்று, ஒன்பதாவது தினமாகிய ஆயுத பூஜையாகிய இன்று, கும்பகோணம் எம் அன்பு தவச்செல்வியான "ரகுமாயி" **"அன்பு இல்லத்தில்"** இரவு 11 மணி அளவில் ஞானமந்திரகீதையின் 72 பாடல் ஒன்றை மட்டும் சற்று சிரத்தையுடன் ஆய்ந்து உள்ளே சென்று கொண்டிருந்தோம்.

பாடல் 72.

சுருதி என்றும், ஸ்மிருதி என்றும், நூல்கள் என்றும்,
சூட்சுமமாம் வேதாந்த நூல்கள் என்றும்,
கருதும் இதிகாசம் என்றும், புராணம் என்றும்,
காமிகமே முதலிய ஆகமங்கள் என்றும்,
ஒருமை என்றும், இருமை என்றும், ஒன்றும் இல்லை.
உள்ள தெய்வமாம் "அகண்ட பரப்பிரம்மம் தானும்".
பரவிய அந்த பரப்பிரம்மம் "**நாமே** என்று",
(அதை) பாவித்து பாவித்த "**பரமே** ஆகுவாய்".

இந்நிலையில் சாட்சி பாவனையையும் தாண்டி "அகண்ட பாவனையில்" லயித்திருந்தோம். அதே சமயம் அந்த அறையில் ஓர் ஒளி தோன்ற சற்று புறக்கண்களை மூடி அகக்கண்ணால் சற்று கூர்ந்து நோக்கி வந்திருப்பது யார்? என வினவினோம்.

எம்பெருமான் (தூல சூட்சும வடிவின் நிலையில்) நிற்க உணர்ந்தோம். வந்தவர், மாதவா! நமஸ்காரம் என்றார். சற்று எம் பக்கத்தில் திரும்பி பார்த்தோம்.



உ

அங்கு எவரும் தென்படவில்லை. உடனே வந்திருப்பவரை நமஸ்கரித்தவண்ணம் மஹா தேவா! நமஸ்காரம் என்றேன். பின் அவரைப் பார்த்து,

வைத்தியம் :— ஹே தேவாதி தேவா! சர்வேஸ்வரா! சர்வலோக ரட்சகா! எம் அருகில் எவரையும் காணோமே! அந்த மாதவன் எங்கே?

பெருமான் :— நீதான் அந்த மாதவன்.

வைத்தியம் :— எம்பிரபோ அது பொருந்தாதே! மாதவன் என்றால் உங்களை சொல்லலாம்; எம் திருடனைச் சொல்லலாம்; உங்களைப் போன்ற தேவ தெய்வங்களை சொல்லலாம். காரணம் மஹா கோரமான தபஸ் பண்ணி உங்களைத் தரிசிக்க வேண்டும். இந்த உதவாத வைத்தியம் அப்படி இல்லையே! எம்மை தரிசிக்க தபஸ் தேவை இல்லையே!

பெருமான் :— அப்படியானால் உன்னை தரிசிப்பது என்றால் அத்தனை சுலபமாக கண்டு கொள்ளலாமா?

வைத்தியம் :— ஓம் ஐயனே! உங்கள் அனைவரையும் மனமைய நற்பணியில் உறுதியாக்கினால் அதாவது ஜீவபாவனையை விட்டு சாட்சிபாவனைக்கு வந்துவிட்டால் அவஸ்யம் காணலாம். ஆனால் எம்மை சாட்சிபாவனையையும் விட்டு அகண்டபாவனைக்கு வந்தால் தான் காண முடியாது உணரமுடியும்.

பெருமான் :— அப்படியானால் யாம் சொன்ன மாதவா என்று சொல்லிய வாசகத்திலும் நீ அதீதமானவன் தானே?

வைத்தியம் :— ஹே தேவாதி தேவா! தாங்கள் சொல்வது எப்படியோ அந்த நிலையில் ஸத்யம் தான். ஆனாலும் யாம் என்றென்றும் ஓர் வைத்தியமே! இந்த காரணஜீவம் மறையும் பரியந்தம் இந்த ஓர் நாமமே போதும். ஆனால் தாங்களைப் போல் அனைவருக்கும் ஜோதிரூபமும், சர்வ வல்லமையுள்ள மஹிமைப்பிரபாவமும் பொருந்தி இருப்பதனால் சகலபுகழும் தாங்களுக்கும் பொருந்தும்



உ

அந்த விளக்கம் எல்லாம் இனி இங்கே வேண்டாம். தாங்கள் இவ்வேளையை நாடி வந்த காரணம் என்னவோ?

பெருமான்:- அது தான் உனக்குத் தெரியுமே! பின் தெரியாதவன் போல ஏன் எம்மைக் கேட்கிறாய்?

வைத்தியம்:- தாங்களுக்கு லோக விஷயமான காரண காரியம் கோடானு கோடி இருக்கலாம். இந்த வைத்தியத்திற்கு எந்த காரண காரியமும் கிடையாதே! அது தேவையும் இல்லை.

பெருமான்:- ஹே தாஸி! உன்னைத் தரிசித்துப் போகவே வந்தோம்!

வைத்தியம்:- ஹே பிரபோ! இது வேண்டாத வார்த்தை. யார் யாரைத் தரிசிப்பது என்ற முறையே இல்லையா?

பெருமான்:- அப்படிச் சொல்லாதே மஹானுபாவா! எங்கள் மனக்கண் கொண்டு அதை உறுதியாக்கி தரிசிக்க முடியும், ஆனால் உம் நிலை அப்படி இல்லையே! அந்த மனதையும் கெடுத்தால் அல்லவோ உம்மை உணர முடியும். ஹே தாஸி! அந்த புஸ்தகத்தையும் அப்பாடலையும் மாற்றாமல் அப்படியே கொடும். அதை யானும் சற்று தரிசித்து விட்டுத் தருகிறோம்.

வைத்தியம்:- எம் ஐயனே! இது என்ன நாடகமோ? தாங்களே அதன் கருத்தாக இருக்கும் போது இது என்ன பார்வை? ஜனகாதி யோகிகளுக்கே சின்முத்திரையை காட்டி மௌனமாய் உணர்த்திய எம் தக்ஷிணாமூர்த்தி பெருமானே இவ்வேழையிடம் நடிக்க வந்தீர் போலும்?

பெருமான்:- நீரும் வேஷம் தாங்கி இவ்வாறு நடிக்கும் போது யாம் நடிக்கக் கூடாதா? என அப்புஸ்தகத்தை வாங்கினார். அதே 72. வது பாடலை உற்றுணர்ந்து நோக்கினார். எம் குழந்தாய்! ஞான வேட்கை உள்ள ஓர் சாதகனுக்கு இது ஒன்றே போதும். மேலும் இந்த ரிபு கீதை ஒன்றே முழு ஞான அம்சமாகும். நீரும் அவதார சொரூபியாய் எங்கெங்கு தோன்றினாலும் இந்த ஒன்றையே உமக்கு ஆதாரவாயும், ஆதாரமாகவும், ஆகாரமாகவும் கொள்கிறீர் "ஒன்றைப் பற்றி ஓரகத்திரு" என்பதற்கிணங்க அதிலேயே மூழ்கி அனைத்தையும் உள்ளொளி பொருந்திய மாணிக்கங்களாக்கி உண்மை சார்ந்தவர்கள் மாணிக்கமாகவே



உ

மாற்றி விடுகிறீர். உம் நாடகம் நடிப்பு வேறு, எம் நாடகம் நடிப்பு வேறுதான். தாங்கள் ஞானத்திற்காகவே உங்களைத் தோற்றுவித்துக் கொள்கிறீர்கள். ஆனால் நாங்களோ என்னதான் ஆச்சார்ய வேஷமிட்டாலும் இப்படி நினைத்து இருக்க முடியவில்லையே! (கண்ணீர் விட்டார்)

வைத்தியம் :— (அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே) ஓ ஓ ஓ மஹாதேவா! சாம்பவா! சங்கரா! தாங்கள் இப்படி உணர்ச்சிவசப்படலாமா? இது தாங்களுக்குப் பொருந்துமா?

பெருமான் :— உண்மைதான் தோழி! பொருந்தாதுதான்! இருந்தாலும் இக்கலியுகத்தின் இக் கோரப்பிடியிலும் தாங்கள் அயர்ந்து சோர்ந்து விடாமல் அதிக பொறுமையுடன் உம் குழந்தைகளை பராமரிக்கிறீர் என்றால் நாங்கள் மாயையால் கோடானுகோடி அண்டங்களையும் ஜீவர்களையும், ரட்சிப்பது இதில் ஓர் அணு கூடப் பொருந்தாதே!

வைத்தியம் :— கடகடகடவென சிரித்துக் கொண்டே ஹே மஹானுபாவா! உங்கள் காரியம் மாயை! எங்கள் காரியம் ஸத்யம். இங்கு யாம் போதிப்பதும் இல்லை, அவர்கள் சாதிப்பதும் இல்லை. ஆனாலும் இவ்வுலகம் வியவகார ஸத்யமாக இருப்பதால் அதாவது விளக்கத்தினால் உயிர் பெற்றிருப்பதைப் போலும், இருப்பு உடையதைப் போலும். உம்முடைய மாயா காரியத்தினால் துலங்குவதால்,
"மனம் ஒத்து வாக்கினில் உண்டு என்றால்"
இருப்பதைப் போல் தோற்றும்.
"அறிவு சூழ்ந்து வாக்கு மௌனம் ஆனால்"
ஏகமோ, ஜீவனோ, தாங்களாகிய ஈசனோ இல்லாமல் ஆனந்தம் தாம் தாமாக பிரகாசிக்கும்

பெருமான் :— ஹே மஹானுபாவா! ஸத்யத்தின் இருப்பிடமே! ஸத்யத்தை எத்தனை எளிதாகவும், அதி சுலபமாகவும், அதி சுகமாகவும் சொல்லி விட்டீர்கள்.



உ

வைத்தியம் :- ஹே தேவாதி தேவா! ஸத்குருதேவா! ஸத்ய சொரூபா
இதென்ன கேலிக்கூத்து? எம்முள் இருந்து பேசுவது
தாங்கள் தானே? உம் குழந்தையிடமே உம் விளையா
ட்டா? இரும்பும் நீ! இயக்கமும் நீ! அதன் உண்மை நீ!
இங்கு இருவர் இல்லையே!!!

பெருமான் :- பொறு, பொறு! பொறு குழந்தாய்! அதற்குள் அத்
வைத மௌனத்திற்குள் புகுந்து கரைந்து விடாதே!
உம்மிடம் சற்று விளையாடவே உம் குடிலிலிருந்து
இங்கு வரவழைத்தோம் சற்று பொறு!
1985ம் ஆண்டு மார்கழி மாதம் முதல் தேதியன்று
உன் குருதேவரிடம் நீ உரையாடும் போது மூர்த்தி
யாகிய எம் வார்த்தை வந்தது. அது சமயம் எம் மீது
சற்று ஆத்திரமும், ஆவேசமும் கொண்டாய் அது உமக்கு
ஞாபகம் இருக்கிறதா?

வைத்தியம் :- நிகழ்காலமே இல்லையெனச் சொல்பவன் கடந்த காலக்
கற்பனையை எப்படி செய்ய முடியும்?

பெருமான் :- இது தவறுதானே! நாமபாவனை (உலக) விருத்தி தான்
கூடவே கூடாது. ஆனால் சாட்சிபாவனை (தெய்வ) விருத்தி
விளக்கத்தின் நிமித்தம் சற்று வைத்துக் கொள்ளலாம்.
அதுவும் விடாப்பிடியாக ~~கூடாது~~ இருக்கக் கூடாதுதான். அதையும் விட்டு
அகண்டபாவனையில் தான் சர்வ சதா இருக்க வேண்டும்.
நீயும் உன் குழந்தைகளுக்கு சர்வ சதா அகண்டபாவனை
("அதுநீயேஅது") யையே உணர்த்துகிறாய் இல்லையே?
சாட்சிபாவனை (தெய்வநிலை) யை கதைகதையாக சொல்கிறாய்
அதை அகண்டபாவனையில் முடிக்கிறாய். அது அவர்களுக்கு
சுய அனுபவத்தை கூட்டி வைக்கிறது. ஆனால் இந்த கலி
யுகத்தில் உன் போன்று புராண இதிகாசக் கதைகளையும்
தெய்வீகக் கதைகளையும் உண்மையின் விளக்கமாக
எவரும் சொல்வதில்லை. பெரும்பாலும் அனைவரும் புரா
ண இதிகாச தெய்வீக கதைகளை இக்கலியுகத்திற்கு
ஏற்றபடி காமரஸமாகவும், கள்ளம், கபட சூழ்ச்சி
யோடு தான் கற்பிக்கின்றனர் காரணம் அவர்கள் மனம்



உ

அப்படி மிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் காரணம் இருக்கிறது. இக்கலியில் ஸத்வகுண தெய்வவழிபாடு குறைந்து குறைந்து நிறுத்தப்படும். அதற்கு இப்படி கதை சொல்லும் மஹான்கள் அவஸ்யம் தேவை தான். நீ சற்று அதை உணர்ந்து பார். எதைப்பற்றிய விளக்கம்? அதை ஏன் உன்னால் அந்த நிலையில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை?

வைத்தியம்:— ஓ எம் ஸத்ய சொரூபா! அது இப்போது ஞாபகம் வருகிறது. அந்த நேரம் எம் ஸ்ரீ குருதேவர் அவர்கள் ஓர் கதை சொன்னார்கள். அதைக் கேட்ட பிறகு தாங்கள் மீது ஓர் வெறுப்பு ஏற்பட்டது.

பெருமான்:— அந்த வெறுப்பு எப்படிப்பட்டது அது ஏன் என உன்னால் விளக்க முடியுமா?

வைத்தியம்:— எம்பிரபுவே! அந்த வெறுப்பு இவன் என்றால் ஓர் முரட்டுத் தெய்வம் என்றும், அஹங்கார அபிமான கர்த்தாவான ருத்திர சொரூபம் என்றும், அது ஞானத்திற்கு தடையானது என்றும், அந்த நேரம் உள்ள மனோநிலையில் தோன்றியது. ஆனால் 1992க்கு அப்புறம் ஸ்ரீ குருதேவர் கருணையால் கிடைத்த ஸ்ரீ கீதையின் அபேத திருஷ்டியின் மூலம் நீங்கி விட்டது. 1984ல் யாம் பண்டரி சென்று எம் திருடனை (கண்ணனை)த் தரிசித்து அவன் மூலம் பெற்ற சில ஞான விளக்கங்களும், ஸ்ரீ காஞ்சி மஹான் தந்த விளக்க மூலமாகவும் என்ன தான் அத்வைத ஞானம் உணர்வு பூர்வமாக இருந்தாலும் அது அனுபவபூர்வமாக ஆகவில்லை என்றே சொல்லலாம்.

பெருமான்:— அதன் உண்மையான காரணம் என்னவென்று உன்னால் ஊகிக்க முடிகிறதா?

வைத்தியம்:— முடிகிறது தேவா! ஸ்ரீ குருதேவரிடம் என்ன தான் பாடம் கேட்டாலும் அது அனுபவபூர்வமாவதற்கு அவஸ்யம் அவர் கருணை பெற வேண்டும். ஆனால் அவர் எந்த விஷயமும், முக்காலமும், கருணையே வடிவாகத்தான் இருக்கிறார். பசுவின் உடல் முழுதும் பால் வியாபித்து இருந்தாலும் அதன் மடி மூலமாகத்தான் பால் சுரக்கும் அதே போல்



உ

ஸ்ரீ குருதேவர் கருணையே வடிவாக விளங்கிறதும் அவர் கருணையைப் பெற (அத்வைத ஞானப்பாலைப் பெற) அவர் மகிழும் வண்ணம் நாம் நடைபெற வேண்டும்:

அவர் மகிழும் நிலை:— அவர் வாக்கோத கேட்கும் வாக்கை நம் அனுபவ நிலைக்கு கொண்டு வர வேண்டும். அதில் ஏதேனும் ஓர் நிலையில் அசிரத்தையாக நாம் இருந்தால் அவர் கருணையை நாம் பெற முடியாது. இதுவே எம் அனுபவ ஞான சித்தாந்தம்.

பெருமான்:— இப்போது நீ சொல்லும் நிலையில் உன் குழந்தைகள் பக்குவப்பட்டிருக்கின்றனரா? இன்னும் பக்குவப்பட வேண்டுமா? அதற்கும் ஓர் காலம் கணித்திருக்கிறாயா? அதை துல்லியமாக சொல்ல முடியுமா?

வைத்தியம்:— எம் பெருமானே அது "**பரம ரகஸ்யம்**" அதை உம்மால் மட்டுமல்ல மற்றைய அயன், ஹரியும் உரை முடியாது. உங்கள் அனைவரின் நிலையும் தெய்வ (சாட்சி பாவனை) நிலையே. எம் நிலையாகிய பரபாவனை (அகண்டபாவனை) நிலைக்கு வந்தால் தான் அது முடியும். ஆனாலும் உம் கேள்வியின் நிமித்தம் அவர்கள் பார்வையிலும் இதைத்தான் சொல்ல முடியும். அதாவது

**பலரை எம் நிலையில் உணரலாம்!**

**சிலரை உம் நிலையில் அறியலாம்!!**

பெருமான்:— இது பற்றி யாம் முழுமையாக உணர்ந்து கொண்டோம். அது சரி. உன் ஸ்ரீ குருதேவர் உனக்குச் சொன்ன கதை என்ன? நீ குழப்பம் அடைந்து எம்மீது வெறுப்பும் ஓர் அருவருப்பும் அடையக் காரணம் என்ன? இன்று உன் தரிசனம் பெற்று உன் மகிழ்மொழியால் அனேக விஷயங்களை கிரஹிக்கிறோம். ரொம்பவும் ரஸனையாக இருக்கிறது. (அதனால் — inserted above "அருவருப்பும்")

வைத்தியம்:— ஓ எம் பெருமானே! இன்று உம் நாடகம் இந்த இடத்தில் இப்படி நடைபெற வேணுமென்று திட்டம் போலும்? பரவாயில்லை. ஆனாலும் கதையை சொல்லியதே தாங்கள் தானே? அதில் குழம்பியதும் தாங்கள் தானே? இன்று இவ்விடம் அதே கதையை திரும்பச் சொல் என்பதும் தாங்கள் தானே?



உ

நீ இயக்குகிறாய் இந்த கருவி இயங்குகிறது அவ்வளவு
தான், ஆனாலும் ஓர் உண்மை!
இங்கு நீ வந்ததும் இல்லை! யாம் உண்மை கண்டதும் இல்லை!
நம் சம்பாஷனை நடந்ததும் இல்லை! இது ஓர் கட்டுக்கதை.
புராணம் என்றாலே புளுகு என்போம் யாம்! அதுவும்
இதுவும் ஒன்றுதான்! அந்த காலாதீத ஒன்றே ஸத்யம்!

**அதுவே யாம்! அதுவே நீ! அதுவே அனைத்தும்**

இந்நிலையில் ???

கதைசொல்லும் தாய் யாம்! கதை கேட்கும் சேய் நீ!!

இனி நீ குருவாக இருந்து நீ சொன்ன கதையை அன்பாக கேள்:-
அது புண்ணிய கங்கை நதி ஓடும், இறந்தால் முக்தி தரும் காசி
க்ஷேத்திரம். வேதம் கற்றறிந்த ஓர் வேதியன் இருந்தான். அவன்
தினமும் காசி விஸ்வநாதனுக்கு 100 குடம் கங்கா ஜலம் எடுத்து
அபிஷேகம் செய்து வந்தான். ஆனால் அவன் அதை நிஷ்காமியமாக
செய்யவில்லை. மந்திரங்கள் எல்லாம் அதை கொடு, இதைக் கொடு
என ப்ரார்த்தனையுடன் சொல்வதைப் போலவே "இஷ்டகாமியார்த்த
ஸித்யர்த்தம்" என ஓர் பலன் கருதியே செய்தான். அவன் ஸங்கல்
பமாவது:- எம்பெருமானே என் வறுமையைப் போக்கு! என்பதே
அவன் பிரார்த்தனை. இறைவனும் அவனுக்கு அசரீரியாக எமக்கு
3 வருஷங்கள் தினமும் தவறாமல் 100 குடம் கங்கா ஜலம் அபிஷே
கம் செய்தால் உன் வறுமை நீங்கும் என்றானாம்.

இந்த அந்தணனும் இறைவன் வாக்குப்படி தினமும் 100
குடம் அபிஷேகம் செய்தான். இன்று அவன் ஸங்கல்பம் பூர்த்தி
ஆகும் நாள். ஆனந்த பரவசத்தில் 99 குடம் ஊற்றி விட்டான்.
எப்படியோ கடைசி குடத்தை நழுவ விட்டுவிட்டான். அது இறை
வன் சிரசில் விழுந்து விட்டது. இறைவன் பிரசன்னமானான்.
எம்பெருமான் அதி உக்ரத்தோடு காட்சி தந்தான். தந்ததோடு
அல்லாமல் எம் மீது உண்மையான பக்திக்கு கட்டுப்பட்டு உனக்கு
காட்சி தந்தோம். ஆனால் உன் அசிரத்தையினால் ஓர் குடம் நழுவ
விட்டுவிட்டதால் ஓர் சாபம் கொடுக்கிறேன் என்றான் இறைவன்.



பக்தன் ஆடிப்போனான். அங்கு இறைவன் கொடுத்த சாபம் யாதெனில், உன் வறுமை இந்த ஜன்மாவில் நீங்காது. அடுத்த ஜன்மாவில் ஓர் அரசனாக பிறந்து உன் வறுமை நீங்கி ஆனந்தமாக வாழ்வாய் என சாபமும் அனுக்ரஹமும் செய்தான் என எம் குருதேவர் கதையை முடித்தார். யாம் கேட்டோம், குருதேவா! இது என்ன சோதனை ஓர் உண்மை பக்தன் மூன்று ஆண்டுகள் எத்தனை சிரமத்தோடு எத்தனை சிரத்தையோடு தினமும் நூறு குடம் ஜலம் விட்டானே, கடைசி நாளன்று தானே நம் விரதம் பூர்த்தியாகிறதே என்ற ஆனந்தத்தில் எப்படியோ கைதவறி ஓர் குடம் நழுவ விட்டான், அதற்கு இத்தனை பெரிய தண்டனையா? தெய்வமே பக்தன் குறை கண்டு பொறுக்காமல் இப்படி சாபம் கொடுக்கும் என்றால் எவர் தான் பக்தி செய்வர்? இங்கு தெய்வ நம்பிக்கையே விட்டுப் போகுமல்லவா? என அழுதவண்ணம் கேட்டோம். அங்கு குருதேவரும் கட கட கட என சிரித்த வண்ணம், இதன் பதிலை உன் சுய அனுபவத்தில் காலபோக்கில் உணர்வாய் என ஆசி கூறினார்கள். அன்றிலிருந்தே தாங்கள் பேரில் ஓர் அருவருப்பு ஏற்பட்டது. மேலும் தத்துவ ரூபத்தில் சொல்லும் போதும் சந்திரன் மனம் என்றும், பிரம்மா புத்தி என்றும், விஷ்ணு சித்தம் என்றும், ருத்திரன் (சிவன்) அஹங்காரம் என்றும், வேதாந்த கருத்து சொல்வதால், மூன்றினையும் (மனம், புத்தி, சித்தம்) ஏதோ ஓர் வகையில் ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால் அஹங்காரத்தை (சிவனை) ஏற்றுக் கொள்ள முடியவில்லை என பணிவாகச் சொல்லி எம் பெருமான் திருவடிகளை கெட்டியாக பற்றிய வண்ணம் எம்மை மன்னிக்கவும் என்றோம்.

பெருமான்:— ஓ எம் சகா! உன் பணிவே உன் ஸ்வய அனுபவ ஞானத்தின் லட்சணமாகும். ஏ அந்திரு! நீ நாத்திகவாதம் பண்ணவில்லையே அப்படி இருக்க மன்னிப்பு யாருக்கு? மன்னிப்பு எதற்கு?

வைத்தியம்:— என்ன இருந்தாலும் ஆரம்ப காலத்தில் உம்மை உதாசித்தேனே?

பெருமான்:— போற்றலும், தூற்றலும் எமக்கு சமம் தானே? நீயும் அந்த நிலையில் தானே இருக்கிறாய்?



உ

வைத்தியம் :— சரி அது என்றோ எப்படியோ முடிந்த கதை. அதை இனி எண்ண வேண்டாம். ஆனால் இந்த கதையினால் எம் குழந்தைகளுக்கு என்ன மதிப்பு கூறப் போகிறீர்கள்?

பெருமான் :— எம் அன்பான திருவடி! அன்று உன் அறியாமையின் உணர்வு அப்படி இருந்தது சரி தான். இன்று உன் அறிவின் முதிர்ச்சியின் உணர்வு எப்படி இருக்கிறது?

வைத்தியம் :— இந்த கேள்விக்கு யாம் பதில் சொல்லமாட்டோம் காரணம் எம் நிலை வேறு! உம் நிலை வேறு!

பெருமான் :— அதென்ன புதிர் போட்டு பேசுகிறாய்?

வைத்தியம் :— பின் என்ன எப்படி பேச முடியும்? இப்போது எம் நிலையில் உமக்கு பதில் சொல்வதென்றால்?
கேட்கும் நீர் ஏது? சொல்லும் யாம் தான் ஏது? இப்படி புருடு (பொய்) மயமான கதை தான் ஏது?

பெருமான் :— இடைமறித்தார். சற்று பொறு திருவடி! அதற்குள் என்ன அவசரம்?

வைத்தியம் :— எம்பிரபுவே! இந்த பைத்தியத்தை மன்னிக்கவும். உம் வாக்குக்கும் எட்டாத எம்மை வாக்குக்கொடுத்து வழக்காடு என்றுரைத்தால் எம் வாக்கு எப்படி வரும் என்பதை தாங்கள் அறியாததா?

பெருமான் :— உண்மை தான் திருவடி! **நீ ஸத்யத்தில் நிற்கிறாய், யாம் ஸத்யம் போல் இருக்கிறோம்.** எம்மை மெய் விட்டுவிட்டால் யாமே நீயாவோம் நீயே யாமாவோம்.

வைத்தியம் :— உண்மை தான் எம் ஐயனே! உம்மையும், உலக அவித்தையும் இங்கு ஒன்றுமில்லா தன்மையினால் எம்மால் ஸத்யம் தானே பேசமுடியும்? உம் போல் ஸத்யம் போல் பேசமுடியாதே?? தயவு செய்து உம் நிலையில் சற்று இறங்கி பேசுகிறேன் எம்மை மன்னிக்கவும். எம் குழந்தைகளுக்காக எதுவும் சொல்லி உரைத்துவதானால் சற்று கோடிட்டு காட்டி உரைத்துங்கள். மற்றும் எந்த கதையும் வேண்டாம். தயவு செய்து தாங்கள் போய் வாருங்கள். தாங்கள் வருகைக்கு மிக்க நன்றி!!!



உ

பெருமான்:— என்ன தாஸியாயா! சட்டென வார்த்தை துண்டிக்கிறீரே இது உமக்கு அழகாகுமா? எம்மை அலட்சியப்படுத்துவதென்றே உம் முடிவா? (எம்பெருமான் சற்று கோபத்தை காட்டினர்)

வைத்தியம்:— ஓம் தேவாதி தேவா! சாம்பவா! சங்கரா! ஹரஹர மஹா தேவா! உம் குழந்தையிடமே உம் விளையாட்டா?

**யாம் பிறந்த இடம் உம்மிடமே!** அதுவும் தந்தாவிகமாக!

**யாம் புகுந்த இடம் அவ்விடமே!**

அதுவே எம் நிரந்தர இடம். அது எமக்கு மட்டுமல்ல. உமக்கும் சேர்த்துத்தான். அது உமக்கு மட்டுமல்ல. இவ்வண்டரண்ட பிரும்மாண்டத்திற்கும் அனைத்து ஜீவ கோடிகளுக்கும் தாங்கள் அறியாததல்ல! இந்த ஏழை தாஸி அனைத்து அடியார்கள் பாதங்களுக்கும் அடியில் ஒட்டியிருக்கும் ஓர் தூஸிதானே? ஆனால் அந்த தூஸி வேறு தாங்கள் வேறல்ல. இது அதிகப்படியான வார்த்தைகளல்ல. தாங்களின் ஸத்யவாக்கும் இதுவே. தயவுசெய்து இனி எதையும் பேசவேண்டாம். முடிந்தால் அக்கதைக்கு அந்த அத்வைத நிலையிலேயே பதில் சொல்லலாம். எம்மை மன்னிக்கவும் என திரும்பவும் அவர் திருத்தாள்களை இறுகப்பற்றினேம்.

குழந்தாய்! சுகா! எழுந்திரு என்றார். எழுந்து அங்கு நோக்கினேம். அங்கு எம்பெருமானைக் காணேம். ஸ்ரீ பரம குரு தட்சிணாமூர்த்தியை கண்டோம். இல்லை இல்லை உணர்ந்தோம். அவர் சொன்ன ஸத்ய வாசகம்

தட்சிணாமூர்த்தி:— ஓம் செல்வக்குழந்தாய் சுகா! உன்னை சற்றே அதிகமாக சோதித்துவிட்டோம். ஆனாலும் நீ எந்தகுணதோஷங்களுக்கும் ஆளாகவில்லை. உன்போன்றோர் திடஞானியை இவ்வுலகில் எங்கும் காணமுடியாது.



உ

சரி சரி! அக்கதை தான் உனக்குப் பிடிக்காதே! இனி அக்கதையின் கருத்தை உன் குழந்தைகளுடன் ஓர்மித்த கருத்துடன் கேட்பாயாக.

எம் ஞானக் குழந்தைகளே!

உலகம் என்றால் புண்ணிய பாபம் சூழ்ந்தது. தெய்வம் என்றால் அங்கு பாபம் இல்லை, புண்ணியம் மட்டும் தான் உண்டு. பரம் என்றால் அவ்விரண்டும் அங்கு இல்லையெனலாம். இவ்விரண்டிலும் இயக்கங்கள் உண்டு. அது இயக்கமற்றது. இப்புண்ணியபாபம் இரண்டும் வாக்கிய விளக்கமே தவிர இரண்டில்லை. அவை இரண்டும் ஓர் நாணயத்தின் இருபக்கம் போன்றது. இரண்டையும் தள்ளினால் நாணயம் (உலகம்) இல்லை. இரண்டும் இருந்தால் தான் நாணயம் (உலகம்) உண்டு! இப்பொழுது உலகின் நிலையில் விளக்கம் தருகிறேன். பின் தெய்வ நிலையில் விளக்கம் தருகிறேன். அப்படி பார்த்தால் தான் உண்மை விளங்கும்.

உலகம் என்றால் புண்ணியபாபம் எனச் சொன்னேன். ஓர் ஜீவன் பக்குவப்படுமுன் பாபம் வேண்டாம் என்றும், புண்ணியம் வேண்டுமென்றும், அதற்காக தெய்வங்களை நம்பி வரிக்கிறான். அதற்காக கர்மாக்களை காமியமாக அதாவது இது வேண்டும் என்றும், இது வேண்டாம் என்றும் செய்கிறான். பின் கொஞ்சம் பக்குவப்பட்டபின் வேண்டும், வேண்டாம் இவ்விரண்டையும் தேவ தெய்வங்களுக்கு அர்ப்பணம் செய்கிறான். இதனால் அது நிஷ்காமிய கர்மாவாகி விடுகிறது. இப்படி இவன் நிஷ்காம்ய கர்மா செய்யும் போது அந்த தெய்வம் அவ்விரண்டையும் வடிகட்டி இவனுக்கு உரியது எதுவோ அதை மட்டும் கொடுக்கிறது. அப்பவன் புண்ணியமும் இல்லை; பாபமும் இல்லை. அது ஸத்கர்மா ஆகிவிடுகிறது. இதுவே இவ்வுலகிற்கும் தெய்வீகத்திற்கும் உள்ள தொடர்பு நிலையாகும். அதை பிராப்தம் எனவும் சொல்லலாம். ஆனால் இது இறைவனால் சுத்திகரிக்கப்பட்ட பிராப்தம் (ஸத்கர்மா) ஆகிறது. இதில் அதிக உபாதைகள் இல்லை.



௨

ஆனால் இந்த பிராமணன் நிஷ்காமியமாக கர்மா செய்யவில்லை. காமியமாகவே கர்மா செய்தான் அதாவது தன் வறுமை நீங்க வேண்டும். தான் இன்பமாக வாழ வேண்டும், அதற்காகவே உனக்கு தினமும் நூறு குடம் ஜலம் விடுகிறேன் என ஸங்கல்பம் செய்தான். இப்போது இவன் தன் சுயபலத்தாலேயே இக்கர்மா செய்ததால் இது ஸத்கர்மா ஆகவில்லை. "வேலிக்குத் தருந்த கூலி" என்பது போல் தன் அஹங்கார (நான் செய்கிறேன், என்னால் முடியும்) நிலையில் செய்ததினால் அவ்வேலை முழுமையாக பூர்த்தியாகவில்லை. கடைசி குடத்தை நழுவச் செய்து விட்டது இவன் அஹங்காரமும் அவிவாட்டத்தையும், இவனுக்கு மறுஜன்மாவுக்கு வழி வகுத்து கொடுத்து விட்டது. இங்கு தெய்வ குற்றம் இல்லையெனலாம்.

"தெய்வம் என்றால் கருணை, கருணை என்றால் தெய்வம்"!!!

இதுவே பிரமாண உண்மை.

தெய்வம் இவன் செயலைக் கண்டு கண்டித்து தண்டனையாக ஓர் சாபம் கொடுத்ததைப் போல் தோற்றும். இக்காரியத்தை அவசரப்பட்டு இது தண்டனை என்றும், கண்டிப்பு என்றும் அதனால் வந்தது தான் சாபம் எனக் கொண்டால், இதைப் படிக்கும் அன்பர்கள் உள்ளம் பக்குவப்படவில்லை யெனத் கொள்ளலாம். எட்டி உதைத்த காலை ஓர் உண்மைத் தாய் முத்தமிடுவாளேயன்றி வெட்டி எறியமாட்டாள். இது தான் முக்காலத்திலும் தெய்வ நிலை. இந்த தெய்வம் அவனுக்கு எப்படி தன் கருணையை பொழிகிறது என்றால் அந்த குற்றத்தை மறந்தது! மன்னித்தது! புனித ஜன்மா கொடுத்தது.

௨. இந்த ஜன்மாவில் அவனை ஓர் கோடீஸ்வரனாக்கினது. ஊர் உலகம் அவனை கரிச்சிக் கொட்டும். அதாவது அவனது வளமான வாழ்வினால் அவனுக்கு கண் திருஷ்டி உண்டாகும். அந்த கண் திருஷ்டியிலிருந்து அவனை காப்பாற்றியது.

௩. மறுஜன்மாவில் தானிஷா என்ற அரசனாக்கியது.

௪. பத்ராசல ராமதாஸர் என்பவருக்கு தண்டனை கொடுப்பதைப் போல் கொடுத்து அந்த நிஜாமுக்கே இவனை ஆட்பட வைத்தது.



உ

5. அந்த ஒப்பற்ற ஸ்ரீ தாஸரால் அவனை ஓர் ஒப்பற்ற பக்தருக்கு பரமபதம் (முக்தி) அடையவும் செய்ய வழி வகுத்தது.

இங்கு ஓர் கேள்வி எழலாம்?

என்னதான் தெய்வம் இவனுக்கு சகாயமாக அனேக காரியங்களைப் பண்ணினாலும் !!!

ஓர் ஒப்பற்ற தாஸருக்கு 12 ஆண்டுகள் சிறைவாசம் விதித்து பல கொடுமைகளுக்கு ஆளாக்கலாமா? அது ஸ்ரீ பாகவத அபசாரம் இல்லையா என கேட்கத் தோன்றும்.

உண்மைதான் இதை கவனிக்கவும்.

அந்த ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் குடும்பப் பெயர் கோபன்னா ஆகும். இவர் பாலியத்தில் பறவைகள் மேல் அதிக பிரியம் கொண்டவர். ஆகவே ஓர் கிளியைப் பிடித்து ஓர் கூண்டில் அடைத்து. அதற்கு தான் உண்ணும் போதெல்லாம் தம்முடைய ஆகாரத்தையே போட்டார். கிளியை சுதந்திரமாய் தம் இனத்தோடு சேராமல் ஓர் கூண்டில் 12 ஆண்டுகள் அடைத்து வைத்திருந்தார்.

இவர் அன்பாக போஷித்தார். ஆனால் அது அவஸ்தைப்பட்டது.
(இங்கு புண்ணியம்) (இங்கு பாபம்)

இவர் தம் உணவைக் கொடுத்தார். அதன் (பழம்) உணவை கொடுக்கவில்லை
(இங்கு புண்ணியம்) (இங்கு பாபம்)

இவர் அந்த கிளியை 12 ஆண்டுகள் கூண்டில் அடைத்து வைத்த தன்மையினால் அந்த பாபத்திற்காக இவர் 12 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். அது உண்ணும் பழங்களை விரும்பிக் கொடுக்காமல், தான் உண்ணும் உப்பு, உறைப்பு, புளிப்புள்ள ஆகாரம் கொடுத்ததற்கு தண்டனையாக அரைப்படி உப்பும் அரைப்படி அரிசியும் வேக வைத்த உணவை அரச தண்டனையாக அளிக்கப்பட்டது. இவர் பொறுமையினாலும் ஸ்ரீ ராம பக்தியினாலும் அந்த அன்னம் ருசி உள்ள அன்னமாக மாறியது. முன்ஜன்மாவில் உத்தம பிராமணனாகவும் இந்த ஜன்மாவில் தானீஷா என்ற சக்ரவர்த்தியாகவும் தோன்றிய இந்த பக்குவ ஆன்மாவுக்கே ஸ்ரீ பகவான் முதலில் காட்சி கொடுத்தான். பின்னர் தான் தமக்கு கோவில் கட்டி வழிபட்ட ஸ்ரீ ராமதாஸருக்கு காட்சி கொடுத்தான்.



உ

இந்நிலைகளில் நாளும் போது எம் சங்கரன் (மஹாதேவன்) தண்டித்தான் என்றும் சாபம் கொடுத்தான் என்றும் இறைவனுக்கு பொறுமை இல்லையே என்றும் இறைவன் அஹங்கார ஆக்ரோஷ சொரூபமென்றும் சொல்ல முடியுமா?

வைத்தியம் :- எம் பெருமானே! ஹே ஸத்குருதேவா! ஹே ஸத்குருநாதா! இவ்வேண்டிய மன்னிக்கவும். இதில் ஓர் உண்மையாம் கதை கேட்டதோ 1985 ஆனால் 1992 க்கு அப்புறம் அதே திருஷ்டியை நாங்கள் இருமையின்றி பெற்றபிறகு எந்த அருவருப்பும், வெறுப்பும் எமக்குத் தோன்றவில்லை. காரணம் அங்கு மூர்த்திகளே இல்லையே இருப்பது ஒன்றுதானே! அங்கு குறைகோடும் எப்படி வரும்?

நட்.சிணமூர்த்தி :- எம் சுகா! அது உன் குருவாக்காகும். அவர் தான் அன்றே சொன்னாரே? ஸ்ரீ மந்திர தீக்ஷை எப்போது உன் கைகளில் கிடைக்கிறதோ அன்று தான் நீ ஜீவன் முக்தி நிலை பெற்றவனாகிறாய் என்றும். அதற்கு முன் நீ என்ன தான் உன் சாதனை நிலையில் நீ அனுபவம் பெற்றாலும் அது நிறைநிலை ஆகாது எனச் சொன்னாரே. அதுதான் ஜீவன்முக்தி முத்திரையாகும். அன்று உன் ஸ்ரீ குருதேவருக்கு நீ ஒருவன் தான் பக்தனம்மா. ஆனால் இன்று உனக்குப் பல பேரையும் உன் நிலைக்கு கொண்டு வந்து விட்டாயே. இக்கலியுகத்திலும் இப்படி பலரையும் அரவணைத்து கொண்டு செல்லும் ஓர் ஸத்குருவை இன்று தான் யாம் உணர்கிறோம். மற்றும் கோடானு கோடி குருமார்கள் இருந்தும் கண்டிப்பும் தண்டிப்பும் இல்லாத ஸ்ரீ குருமார்கள் இவ்வுலகில் எங்கும் காணமுடியாது.

வைத்தியம் :- ஓம் பரம குருவே! இருப்பதும், நடப்பதும் முடிந்ததும் நலமே என்ற ஓர் நிலைப்பட்ட பிறகு கண்டிப்பும் தண்டிப்பும் எவ்வாறு இருக்கக் கூடும்? மேலும் ஸ்ரீ சத்குருகருணையில்லாமல் எதுவும் இல்லை அல்லவா! மேலும் இது கலியுகம். இதில் இப்படிக் குணதோஷங்கள் விளையாடவேண்டுமென்ற நியதி இருக்கும் போது ஸத்குரு எங்கு எப்படி தோன்றக் கூடும்? ஆகவே தான் அனைவரும் சாமான்ய குருவாகவே இருக்கிறார்கள்.



உ

தட்சிணாமூர்த்தி :- உண்மைதான் மைந்தா! மேலும் எம் சுகா! இந்த கதையில் வேறு ஏதேனும் உன் குழந்தைகளுக்கு விளக்கம் தேவையா? அல்லது அவர்களைக் கேட்டுத்தான் சொல்லவேண்டுமா?

வைத்தியம் :- ஓம் தயாநிதி! அவர்களை கேட்கவேண்டுமென்பதில்லை. அவர்களே நாம், நாமே அவர்கள் அப்படி இருக்க அவர்களுக்கும் எமக்கும் எந்த பேதமும் இல்லை. கடைசியாக ஓர் கேள்வியைக் கேட்டு முடித்துக் கொள்கிறேன். அதாவது கோபண்ணா என்ற பத்ராசல ராமதாஸ் ஸ்ரீராமபகவானுக்கு ஆலயம் திருப்பணி என "நான் எனது" எனப் பார்க்காமல் கைங்கர்யம் செய்தார். அவரை ஓர் அரசன் தண்டிக்க காரணம் என்ன? அவரும் முன்ஜென்மாவில் ஓர் ஒப்பற்ற பக்தராக இருந்தாலும் "இச்சை" என்ற கர்மாவினால் இவரும் பாதிக்கப்படாமலும், அவரும் பாதிக்கப்படாமலும் இருக்கமுடியுமா?

தட்சிணாமூர்த்தி:- பலேபேஷ் பேஷ்! சுகா நல்ல கேள்வியையே கேட்டாய். இக்கேள்வி இதைப்படிக்கும் அனைவருக்கும் பொருந்தும். இது உன் கேள்வியல்ல (அதுவும் எமக்குத் தெரியும்) இது அவர்கள் உண்மை பக்தி சம்பந்த கேள்வி (இது உன் இரகசியம்) "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்பார்கள் "கன்றினுக்கு தாய்தான் கனிந்திரங்கல் போல், எந்தனுக்கு நீதான் இரங்கிடாய்" என்பது போல அமைந்திருக்கிறது இக்கேள்வி. உன் கேள்வியினையும், உன் இருமையினையும் உன்னை முழுமையாக நம்பும் அனைவரும் "ஜீவன் முக்தி பெறுவர்" இது உறுதி என ஆசிர்வதித்தார்.

ஸ்ரீ குருதேவரின் பதில்!

ஓம் ஞானக் குழந்தைகளே! "**நம்பினோர் கெடுவதில்லை**"

ஓர் உண்மைப் பக்தனோ, தம்மை முழுமையாக உணர்ந்த ஞானியோ, "**உடல் உலக விஷய ஆசைகள்**" முற்றிலுமாக உணர்ந்தவனே பக்தன், ஞானி. பக்தன் என்றால் தெய்வ பிரேமை உண்டு; ஞானியென்றால் அந்த தெய்வமே தாமாக இருப்பான். உலகபிரேமையும் தெய்வ பிரேமையும



உ

அவனிடம் அவஸ்யம் இராது! இக்கதையில் கூறிய இருவரும்
உண்மைப்பக்தர்களே; தவிர ஞானி ஆகவில்லை. இவ்விருவரும்
வினையின் காரணமாக ஒருவரை ஒருவர் சிட்சிக்கவாம், ரட்சிக்
கவாம்; உடல் உலக விஷய ஆசைகள் முற்றிலும் அனுபவத்தால் அழிந்து
போனதால் இந்த சிட்சிப்பும் ரட்சிப்பும் ஒருவரை ஒருவர் வினைகள்
பாதிக்காது. இதில் ஒருவன் இறைவனுக்கு அபிஷேகம் செய்தே
தம் வினையை போக்கிக்கொண்டான். ஒருவன் ஆலயத்திருப்பணி
செய்தே தம் வினையைப்போக்கிக்கொண்டான். ஆனால் அவ்விரு
வரும் தம் மனதை அழிக்கவில்லை. இங்கு கடினமான வினை
இருந்தால் ஞானமான பிறவி கிடைக்கும். உடல் உழைப்பால்
அவ்வினைகளை போக்கிக்கொண்டனர் இருவரும்.

"ஒருவனுக்கு மனதினால் பொருள்கள் மேல் ஆசை".

"ஒருவனுக்கு மனதினால் கிளி வளர்ப்பின் மேல் ஆசை".

இதன் பேரில் ஒருவன் மோகத்தில் விழுந்தான். ஒருவன் ஓர் ஜீவன்
தாபத்தினால் தாழ்ந்தான். இருந்தாலும் "பக்தி" அவ்விருவர் உள்ளத்
திலும் புகுந்து காலக்ரமத்தில் அனைத்தையும் நாசம் செய்துவிட்டது.

மேலும்?

ஓர் பாமரன் ஓர் பக்தனை சிட்சிக்க முடியாது, சிட்சிக்க கூடாது!
ஆனால் ஓர் பக்தன் ஓர் பக்தனை வினையின்படி சிட்சிக்க முடியும். அவனு
க்கு அந்த அதிகாரமும் உண்டு. அதனால் அவன் அதிக பாதிப்பு அடைய
மாட்டான். ஆனால் ஓர் பக்தன் ஓர் ஞானியை நிலை கண்டு, இடம்
கண்டு, குறிப்பறிந்து **"அதன் இருமையினால்"**
சிட்சிக்க முடியும். அதனால் அந்த பக்தனும் பாதிப்படையான்.
இங்கு ஞானிக்கு கர்மா இல்லை தான்; இருந்தாலும் அவன் கருணையே வடிவாக
இருப்பதனால் வேறு பக்குவப் படுத்தும் ஜீவர்களுக்காக **"பர
(கர்மா) கருணையாக"** ஏற்றுக்கொள்கின்றான். இந்த சலுகை
எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை. இங்கு அப்பக்தனை உயர்நிலைக்கு
கொண்டு செல்வதற்காக தம்மை சிட்சிக்க வைத்து அவன் கர்
மாவை இவன் (ஞானி) உண்டு ஜீரணித்து விடுகிறான் ஆனால் அது
"பரமரகஸ்யமாகவே" செய்யப்படுகிறது. இதை பார்த்தா
தாலும் அறியவும் முடியாது விளங்கவும் முடியாது.



௨

பைத்தியம் :- எங்கே எம் பெருமானாகிய மஹாதேவ்? எங்கு சென்றார்?

தட்சிணாமூர்த்தி :- என்ன சுகதேவ்? ஏன் இந்த பேதபார்வை? யாமும் யார் என நினைத்தாய்? யாமும் அவரும் ஒன்றாக படவில்லையா?

பைத்தியம் :- எம்பிரபுவே! ஸத்ய சொரூபா! அவரிடம் ஓர் கேள்வியை கேட்க வேண்டும். அதனால்தான் அவரைத் தேடினோம் வேறொன்றுமில்லை!

தட்சிணாமூர்த்தி :- ஏன் அந்த கேள்வியை எம்மிடம் கேட்கக்கூடாதா? அவர் வேறு யாம் வேறா?

பைத்தியம் :- அப்படி இல்லை பிரபு. யார் யாரிடம் எந்த கேள்வியை கேட்க வேணுமென்ற வரைமுறை இருக்கிறதே. நீங்களும் அவரும் யானும் ஒன்றே இது தான் ஸத்யம். இருந்தாலும் உலகம் விவகார ஸத்யம், அதற்குரியவன் ஈசன். ஆனால் தாங்களோ உணர்வின் ஞான ஸத்யம். இவ்விரண்டையும் பிரிக்க முடியுமா? தாங்களிடம் ஞானத் தெளிவு பெறும் கேள்விகளைக் கேட்கலாம். அவரிடம் உலக தெய்வ சம்பந்த கேள்விகளைக் கேட்கலாம். ஆனால் இடம் மாறிக் கேட்கக்கூடாதே என்று தான் "அச்சொரூபத்தை" தேடினோம். தாங்கள் சித்தம் இல்லையானால் அக்கேள்வியை விட்டுவிடுகிறோம் பரவாயில்லை.

தட்சிணாமூர்த்தி :- பலே ஆசாமி நீ! உன் போன்ற ஒருவனை இப்பூவுலகில் எங்குமே கண்டதில்லை. எதிலும் பிடி கொடுக்காமல் இருக்கிறாய். ஆத்திரம் வேகம் இல்லை, கண்டிப்பு தண்டிப்பு இல்லை, விருப்பு வெறுப்பு இல்லை. வியாசரின் புத்திரன் என்றால் அது அப்படியே பொருந்தி இருக்கிறதே! சரி சரி இதோ உந்தன் பெருமான். அவரே அவரானார்) ஆனால் அங்கு இரண்டுண்டு.

பெருமான் :- என்ன திருவடி? உன்னை விடவும் முடியவில்லை, ஆனால் உன்னைத் தொடவும் முடியவில்லை. இனி என்ன கேள்வி கேட்கப் போகிறாய்? அதையும் கேட்டு முடித்து விடு.

பைத்தியம் :- ஓ எம் ஐயனே! மஹாதேவா கேள்வி இது தான். அதாவது பத்ராசல ராமதாஸ் அரசாங்க கஜானா சொத்து அனைத்தும் ஸ்ரீ ராமனுக்காகவே ஆலயம், அபிஷேகம், அலங்காரம், ஆராதனை



உ

எனச் செலவழித்தார். அவை ஏழு லக்ஷம் வராகன்
என ஓர் கணக்கு. அவரை பவசிரமத்திற்குள்ளாக்கி
(விதிப்படி) தண்டித்து அந்த பணத்தை அந்த தானிவா
வுக்கு சுமந்து கொண்டு கொடுத்தாய். அந்த காரியம்
மாயா காரியமோ உண்மையோ யாம் அறியோம்
ஆனால் ஓர் தாஸர் தம் வீட்டு தீர்வை கட்ட பணம் இல்லை
யென தவிக்கும் போதும் ஓர் சகாயம் செய்தாய். அதாவது
கட்ட வேண்டிய வராகன் 20. தாஸரிடம் இருந்ததோ
10 வராகன். ஓர் திருடியிடம் உதவியாக கேட்ட தொ
கையோ 10 வராகன். இப்போது நீ எப்படி சகாயம்
செய்தாய் என்றால் அந்த தாஸர் வராகன் 10 ஜயம்,
தர மாட்டேன் என சொன்ன அந்த திருடியின் வராகன்
10 ஜயம். நீயே களவாடிச் சென்று அக்கடனை அடைத்
தாயே இது என்ன நியாயம்? ஓர் 20 வராகன் உன்
உண்மை அடியாருக்கு கொடுக்க முடியாமல் உன்னைத்
தடுத்தது எது? அல்லது உன்னிடம் பணம் இல்லையா?
அல்லது மனம் இல்லையா? அல்லது அப்படி செய்ய வே
ண்டும் என்பதுதான் விதியா?

பெருமாள்:- அதை அவரிடம் கேள்!

வைத்தியம்:- எவரிடம்?

பெருமாள்:- உனதய்யன் திருடனிடம் (கண்ணனிடம்)

வைத்தியம்:- அவன் வேறு தனியாக இருக்கிறனா?

பெருமாள்:- பின்னென் இல்லை? இங்கு மாத்திரம் தக்ஷிணா
மூர்த்தியிடம் கேட்பதை எம்மிடம் கேட்கக்கூடாது
என்றும், எம்மிடம் கேட்பதை அவரிடம் கேட்கக்
கூடாது என்று விபரத்தோடு கேட்டாயே பின் உன
தய்யன் செய்த காரியத்தை யாம் எப்படி சொல்ல
முடியும் அவனிடமே கேள்.

வைத்தியம்:- இங்குதான் உம் நிலைமை சரியில்லை.

பெருமாள்:- என்ன எம் நிலைமையைக் கண்டு கொண்டாய்?
வழக்கு என ஒன்று வந்தால் அது இருதரப்பும் சரியாக
இருக்க வேண்டாமா? உமதய்யனுக்கு ஓர் நீதி,
எமக்கு ஓர் நீதியா?



உ

வைத்தியம் :— எமதய்யனே சர்வேஸ்வரா ! சம்போ மஹா தேவா!
அவன் வேறு நாங்கள் வேறு? இது என்ன பிள்ளை விளையாட்டு
பெருமான் :— அப்படியானால் தட்சிணாமூர்த்தி வேறு யாம் வேறு?
வைத்தியம் :— ஓ எம் மஹா தேவா! உம் வாக்கினால் எம்மை சோதித்து
இப்படி ஒப்புக் கொள்ள மாட்டாரோ எனப் பார்க்கிறீரா?
எமக்கு நாங்கள் இருமையினால் கலக்கம், காங்கும்,
பயம் இவை யெல்லாம் முடிந்து பற்பல வருஷங்கள்
ஆகிவிட்டன. இருந்தாலும் பயந்து இவ்வார்த்தையை
சொல்லவில்லை. "**பணிவே எம் பாதை**"
நாங்களும் எமதய்யன் இருடனும் ஒரே குட்டையில்
(மாயையில்) ஊறிய இருமட்டைகள் (இருமாயா
சொரூபிகள்) தானே? இந்த வார்த்தைக்கு எம்மை
மன்னிக்கவும். நீங்கள் இருவரும் மாயா சொரூபம்.
அவர் (தட்சிணாமூர்த்தி) ஸத்ய சொரூபம். யாமும்
அவரும் ஒன்று. நீங்கள் இருவரும் ஒன்று! நாங்கள்
இருவரும் மாயையை விட்ட நிலையில் நாம் அனைவரும்
ஒன்றே! இது நாங்கள் அறியாததா? குற்றம் குறை
தோன்றின் இவ் வேழையேனை மன்னித்தருளவும் என
பணிந்து எம் பெருமான் திருவடிகளை இருக பற்றிக்
கொண்டோம்.
எம் தட்சிணாமூர்த்தியும் கலகல கல வெனச் சிரித்தார். எம்
பெருமானும் ஆனந்தக் களிப்பில் கட கட கட வென சிரித்தார்.
எம் பெருமானே எமதய்யனை ஆசிவழங்கிவிட்டு எமதய்யனே
எம் பெருமானானார். அங்கு "**ஒரே ஆனந்தக் களிப்பு**!!!"
அவ்விருவரும் ஆனந்தம் பொங்க அந்த வைத்தியத்தை தூக்கி ஆரத்
தழுவி உச்சி மோந்து ஆசி வழங்கினர். எம்பெருமான் கேட்டார்
"இருமட்டைகள்" எனச் சொன்னாயே அதன் பொருள் என்ன? நாங்கள்
இருவரும், ஏன் தேவ தெய்வங்கள் அனைவருமே இந்த வார்த்தையைக்
கேட்டதில்லை. நீயும் "பழவினைக்காரன்" காரணம் இல்லாமல்



உ

அவ்வார்த்தையைப் பிரயோகிக்கமாட்டாய் நாங்கள் புரியும்படி சற்று சொல்வேன் உன் மழலை மொழியைக் கேட்போம் என அதிக ஆவலுடன் கேட்டார் எம்பெருமான்.

வைத்தியம் :— ஓ எம்மஹா தேவா! நிரணி முதல்வா! நீலகண்டா! திரிநேத்ரா! திரிபுராந்தகா! அது ஒன்றும் விளக்கம் பெரிதல்ல ஆனால் நாங்கள் இப்போது சொன்னீர்களே "பழவிதைக்காரன்" இந்த வார்த்தை பழவினைக்கன் இல்லையே!

பெருமான் :— ஓ ஓ நீ அந்த அர்த்தத்தில் சொல்கிறோம் என நினைத்துக்கொண்டாயா? பழவினைக்காரன் அல்ல, பழவிதைக்காரன் என்பது தான் எனம் வாசகம்.

வைத்தியம் :— அப்படியென்றால் அதன் பொருள் என்ன?

பெருமான் :— நீ தான் தமிழ் பண்டிதரைப் போல அனேக தமிழ் வார்த்தைகளும் உட்பொருள் நிறைந்த விளக்கம் கொடுக்கிறாயே? அதைப் போல் இந்த வார்த்தைக்கும் பொருள் சொல்பார்ப்போம்?

வைத்தியம் :— ஏன் ஸ்வாமி இந்த விதண்டாவாதம்? சரியாம் எம் நிலையில் உணர்ந்ததை சொல்கிறேன். பிழை இருந்தால் இச்சிறுவனை மன்னிக்கவும். பழவினைக்காரன் என்றால் வினைக்காகவே வினைகளைப் பெருக்கிக்கொண்டு திரும்ப திரும்ப பிறக்கின்றவன். பழவிதைக்காரன் என்றால் பழம் பெரும் ஞான வித்தாக இருந்துகொண்டு எதிலும் பந்தப்படாமல் "தம்மைத்தாமே" தோற்றுவித்துக் கொள்கிறவன். இந்த வைத்தியம் உணர்ந்ததில் வரம் அவ்வளவு தான். வேறு பொருள் இருந்தால் கூறவும்.

பெருமான் : ஏ தரணி பாபாவே! ஏ தரணி பகவானே! ரொம்ப ரொம்ப சரியாக சொல்லிவிட்டாயே இவ்வார்த்தை தேவதெய்வங்களாகிய எங்களுக்குள்ளேயே பல பல சந்தேகத்தை உண்டு பண்ணிக்கொண்டிருந்தது. ஆனால் இது தான் முடிவென நாங்கள் சமயமாக முடிவெடுத்தோம். அதை அப்படியே சொல்லிவிட்டாயே. வெகு ஜோர்.



உ

சரி உன் வார்த்தைக்கு அதாவது "குட்டையில் ஊறிய மட்டைகள்" என்றால் என்ன? உன்னிடம் பேசிக்கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது. இனியும் அவ்வப்போது சில சந்தேகங்களை நாங்கள் அவைகளை உன்னிடமே கேட்டு தெளிந்து விடுகிறோம்.

பைத்தியம்:- ஓ ஓ எம்பெருமானே! அப்படி நேரம் கிட்டும் போது இங்கு படை திரண்டு வந்து விடாதீர்கள். அந்த ஒன்றுக்கும் மட்டும் விளக்கம் கூறி விடுகிறேன்!

ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்:- பூலோகத்தில் ஆலமரம் ஞானத்திற்குரியது! அரசமரம் பக்திக்குரியது! வேம்பு சக்திக்குரியது! ஆனால் "பனைமரம்" பக்தியும் சக்தியும் இணைந்த "மாயைக்கு" உரியது. மேலும் பனைமரம் "பூலோக கற்பக விருக்ஷம்" என்பார்கள் ஆன்றோர். இந்த பனைமரம் ஒரு பாகமாவது வீணாவதில்லை. இந்த பனையின் கட்டையை தூண் ஆகவும் அதன் மட்டையை அதில் பிணைக்கும் ஒரு பொருளாகவும், அதை பிணைக்க அம்மட்டையில் உரித்த நாரை ஓர் கயிறாகவும் பயன்படுத்துவர். இந்த மட்டையை ஓர் குளத்திலோ, குட்டையிலோ, தொட்டியிலோ ஊறவைத்தால் தான் அதிலிருந்து நார் எடுக்க முடியும், அந்த நாரை வைத்துத் தான் பிணைக்க முடியும்.

இப்போது இதன் தத்துவப்பொருள்:- குட்டையென்பது மாயை, மட்டையென்பது ஈஸ்வராதிகள், மாயையில் இந்த மட்டைகள் ஊறவில்லையானால் அதாவது ஈஸ்வராதிகள் மட்டும் இருந்தால் போதாது, மாயையில் ஊறவில்லையானால் அதாவது மாயையை பற்றவில்லையானால் கர்மா சம்பந்தம் கொண்ட இந்த ஜீவர்களை பிணைக்க முடியாது. நீங்கள் ஈஸ்வராதிகளாக இருந்தாலும் இந்த மாயை இல்லையானால் **"உலர்ந்த மட்டை தான்"**. அதாவது எம் போன்று எந்த பிரயோஜனமும் அற்றவர்கள் தான். நாங்கள் எப்படி பட்ட கட்டையாகவும், குத்துக்கல்லாகவும் இருக்கிறோம், அப்படி நீங்களும் ஓர் பிரயோஜனமும் இல்லாமல் ஆகலாம். ஓ எம்பெருமானே அப்படி வர தாங்களுக்கு சம்மதம் தானா? ஒரு நொடியில் "அது" ஆக்கி விடுகிறேன்.



உ

பெருமான் :- போதும் ஐயனே போதும்! நாங்களும் தாங்களைப் போல் இப்போதே ஆகி விட்டால் எங்கள் கதி என்ன? இவ்வுலகம் எங்கே இருக்கும்? இச் ஜீவர்களை எப்படி செயல்படுத்த முடியும்? நாம் வேஷம் போட்டால் குறைக்க வேண்டும் என்பதைப் போல, ஈஸ்வராதிகள் வேஷம் கூட சமமாகத் தரித்து வந்து விட்டோமே! "மஹாப்பிரளயம் முடியும் பரியந்தம் எங்களுக்கு இதே கதி தான்."

ஐயா திருவடிநாதா! குட்டையில் ஊறிய மட்டைக்கு நல்வ விளக்கம். "நீ வாழ்க" ஓகோ உம்மை வாழ்த்த எமக்குத் திறமேது? வாழ்க என நாங்கள் சொன்னால் "எமக்கு இரும்பு ஏது? எம்மை வாழ்த்த" எனக் கேட்டு விடுவாய்? உன்னிடம் பேசுவதே அதிஜாக்கிரதையாகத் தான் பேச வேண்டியிருக்கிறது.

வைத்தியம் :- ஓ எமதய்யனே! சங்கரா சிவ சங்கரா! ஹே கைலாசபதே! சிறு குழந்தை ஏதேனும் சிறுபிள்ளைத்தனமாக ஏதேனும் பேசியிருந்தால் மன்னிக்கவும். எம்மை பேச வைத்ததும் தாங்களே! பேச்சும் தாங்களுடையதே! அதைக் கேட்பதும் தாங்களே!

**எல்லாம் நீயே!!!**

பெருமான் :- ஏ தாஸிபாபா! எந்த வினையும் சர்வார்ப்பணத்திலேயே நின்று உன்னைக் கரைத்துக்கொள்கிறது. ஓர் சாதனையாளன் எந்த வினையும் "எல்லாம் நீயே" என சர்வார்ப்பணமாக தம்மை கரைத்துக்கொண்டானால் அவன் வேறு சாதனை எதுவும் செய்ய வேண்டியதில்லை. இந்த சர்வார்ப்பணத்திலே அவன் வினை முழுமையாக எங்களிடம் விட்டு விடுகிறான். அந்நிலையில் அவன் மனதை ஸ்ரீ குருதேவரிடம் அர்ப்பிக்க முடியும் அதனால் ஞான அதிகாரியும் ஆகமுடியும்.



உ

வைத்தியம் :- ஹே பிரபோ! தயாநிதி எம் கேள்விக்கு இன்னும்
பதில் தரவில்லை. அதை நாங்கள் மறந்துவிடவேண்
டாம்? தயவு செய்து அதற்கு விளக்கம் தாருங்கள்?

பெருமான் :- எத்தனை வார்த்தைகள் மாயாஜாலமாக வந்தாலும்
அவைகளில் மயங்காமல் "தற்கவன சக்தியோடு"
இருக்கிறாயே பலே பேஷ் பேஷ்!!
உன் கேள்வியின் விளக்கம்!

குழந்தாய்!
சுகா! பத்ராசலராம் தாஸ் ஆலயத் திருப்பணி
இறைவனுக்காகவே செய்தார். அவர் எண்ணத்தை முதலில்
கவனிக்கவேண்டும். அந்த தானிஷா கஜானா பணத்தை
என்னுடையது (அபிமானம்) என்றோ, தானிஷா உடைய
தென்றோ (காமிய கர்மா) நான் செலவு செய்கிறேன் என்றோ
(அஹங்காரம்) அவன் செய்யவில்லை. அவன் எண்ணம் எண்ணம் முழுக்க ராமனாக
அனைத்தும் ராமனுடையதே. ராமனுக்கு ராமனே செய்கிறான்
என்று தெய்வீக ஸத்கர்மா நிலையில் (இங்கு இது தர்மம் ஆகிவிடுகிறது)
"மனதையும் வினையையும்" சர்வார்ப்பண நிலையில் செய்தான்.
ஆகவே அந்த காரிய கர்மாவுக்கும், இறைவன் பொறுப்புடையவ
னாக ஆகிவிடுகிறான். ஆக அங்கு இறைவன் கடனாளி ஆகிவிடுகிறான்.
ஆகவே அவன் பட்ட கடனை அவனே தாம் சுமந்து சென்று, அக்
கடனை அடைத்துவிடுகிறான்.

ஆனால்

இந்த தாஸரோ குடும்பக் கடனுக்கு, உலகியல் கடனுக்கு
பிராரப்த வினைக் கடனுக்கு ஆட்பட்டிருக்கிறார். ஆனால் இவர்
இதை பகவான் கிருபையினால் அடைக்கவேண்டும் என்றும் அடை
க்க முடியும் என்றும் உறுதி பூண்டிருந்தார். இவர் நிலையும் ஓர் நிலையில்
சர்வார்ப்பணமாக தோற்றியதே தவிர, "உலக குடும்ப கடன்" என்ற
கர்மா வினையில் சூழப்பட்டதாக இருந்தது. இங்கும் இவருக்காக
இறைவன் முயற்சி எடுக்கிறான். இங்கு கர்மா சம்பந்த முயற்சியாகும்
ஆகவே இவர் பொருளையும், தருகிறேன் எனச் சொல்லி தரமாட்டேன்



உ

என்று சொல்லிய ஓர் தோட்டி பொருளையும், இணைத்து சேர்த்து தானே அரசாங்க அதிகாரிகளிடம் செலுத்தி ரசீதும் பெற்று, அதை பரந்தாமன் வீட்டில் உரிய காலத்தில் கொடுத்துவிட்டு மறைந்துவிடுகிறான்.

"இங்கு பரோபகாரம்"!

"அங்கு தன்னுபகாரம்"!!

ஆனால் இரண்டும் கருணையின் நிலையில் இறை உபகாரமே! நடந்ததில் சற்று பேதம் அவ்வளவுதான்.

வைத்தியம் :— போதும் தேவாதிதேவா போதும். விஜயதசமிக்காக தாங்கள் தரிசனமும், பரம்பரம குரு தட்சிணா மூர்த்திகளின் திவ்ய தரிசனமும் கிடைத்ததில் பேரானந்தம் அடைகிறோம். எம் குழந்தைகளுக்காக ஏதேனும் "அருளுரை சொல்ல" விரும்புகிறீர்களா?

பெருமான் :— குழந்தாய் திருவடி! உன் குழந்தைகள் கூடுமானவரை அனேகர் பக்குவப்பட்டுவிட்டனர். இக்கலியின் கோரப் பிடியிலும் இந்த அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்றால்
"உன்பெருமையும், அவர்கள் நம்பிக்கையும்"
தான் காரணம். அவர்கள் உன்னை முழுமையாக நம்பும் அளவுக்கு உன்னை அர்ப்பணம் செய்து ஆக்கிக் கொண்டாய். அதுவே மஹத்தான காரியம். ஆனால் சிலருக்கு அஞ்ஞானத் திரை அகலவில்லை. ஆகவே அவர்கள் கோரகுண தோஷங்களை விட முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களையும் உன் சாதுர்ய பலத்தால் (உன் சரணாகதியே, அவர்களுக்கு பலம்) கண்டிப்பாக கடைத்தேற்றி விடுவாய் என யாம் நம்புகிறோம்.

"அனைவரும் நலம் பெற எம் நல்வாசிகள்"

பரமன்

எம் ஞானக் குழந்தைகளே! இத்துடன் இந்த மடலை முடிக்கிறோம். இனியும் அதிகம் எழுதியிருக்க, உங்கள் நல்வாசி வழங்க, உங்கள் பரம்பதம் பாதத்தை பற்றி மன்றாடி கேட்டுக் கொள்கிறது ஒரு வைத்தியம். இதன் மூலகாரணம் அதுவே!

பாபா


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!